Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 23

ஞாயிற்றுக்கிழமை
19 டிசெம்பர் 2021

மார்கழி 4 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16 +16

விலை: 40/=

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

**கொரோனா**

| | |
|---|---|
| நேற்று | 508 |
| மொத்தம் | 578,947 |

**உயிரிழப்பு**

| | |
|---|---|
| நேற்று | 14 |
| மொத்தம் | 14,734 |

# சீனத்தூதுவரின் வருகையை கூட்டமைப்பு எதிர்க்கவில்லை

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெம்பர் 19

சீனத் தூதுவரின் வடக்குக்கான வருகையை நாம் எதிர்க்கவில்லை. எனினும், இந்தப் பயணம் குறிப்பிட்ட ஒரு சில நோக்கங்களுக்காக மட்டுமே அமைந்துள்ளது எனக் கருதுகின்றோம். அதேவேளை, போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து, முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். 15

## கணவன், மனைவி எரிகாயங்களுடன் மருத்துவமனையில்

முல்லைத்தீவு, டிசெ. 19

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்லிகைத் தீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணவன் மற்றும் மனைவி இருவரும் எரிகாயங் 15

## ரயிலுடன் மோதிய மோட்டார் சைக்கிள்; திருச்சபை ஊழியர் சாவு!

கிளிநொச்சி, டிசெ. 19

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முறிகண்டியில் ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார். முறிகண்டி- அக்கராயன் பிரதான 15

## '13'ஆம் திருத்தம் தீர்வாகாது!

- மக்கள் அதற்காக வாக்களிக்கவில்லை
- சிவில் சமூகங்கள் கூட்டாக அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 19

13ஆம் திருத்தம் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் தீர்வாகாது. அதனை ஆதரித்து தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. '13' ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் தமிழ்க் கட்சிகள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று வடக்கு-கிழக்கைச் சேர்ந்த சிவில் சமூகங்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, '13' ஆம் திருத்தமானது 'முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்'போது கூட அது நாம் எதிர்நோக்கும் 15

## நெடுங்கேணியில் எரிவாயு அடுப்பு வெடிப்பு; தீப்பற்றியது சமையலறை



வவுனியா, டிசெ. 19

நெடுங்கேணியில் எரிவாயு அடுப்பு வெடித்து சமையலறை தீப்பிடித்து எரிந்துள்ளது.

நெடுங்கேணி, சேனைப்புலவு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மாமடு கிராமத்தில் இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள் 15

## மசகு எண்ணெய் விலை சரிவு

கொழும்பு, டிசெ. 19

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மீண்டும் குறைவடைந்துள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் மசகு எண்ணெயின் விலை குறைவ 15

## ஏணைக் கயிறு எமனானது! 4 வயதுக் குழந்தை சாவு!

வவுனியா, டிசெ. 19

வவுனியா, அண்ணாநகரில் ஏணைக் கயிறு கழுத்தை இறுக்கியதில் நான்கு வயதுப் பெண் குழந்தை நேற்று உயிரிழந்துள்ளது.

இந்தச் சோகச் சம்பவத்தில் பரமேஸ்வரன் அருட்சிகா என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. ஏணையில் விளையாடிக்கொண்டிருந்த போது அதன் கயிறு கழுத்தில் இறு 15

**முச்சந்தி**

"ஆடுவோமே
பள்ளுப்பாடுவோமே
சீனாவுக்கும்
தாளம்
போடுவோமே..."



**முல்லைத்தீவில் பதறவைக்கும் சம்பவம்!!!**

## உடல் சிதைந்த நிலையில் நேற்று 12 வயது மாணவி சடலமாக மீட்பு

- மூன்று நாள்களுக்கு முன்னர் காணாமற் போயிருந்தார்
- பல கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணை

முல்லைத்தீவு, டிசெ. 19

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மூங்கிலாறு கிராமத்தில் மூன்று தினங்களுக்கு முன்னர் காணாமல்போன 12 வயது பாடசாலை மாணவி சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார். மூங்கிலாறு வடக்கு, 200 வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த யோகராசா நிதர்சனா (வயது -12) என்ற 15

## கணவன் கொலை; மனைவி கைது

**தவறான உறவா காரணம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை**

முல்லைத்தீவு, டிசெ. 19


முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் பிரிவில் இன்னொரு ஆணுடன் இணைந்து கணவனை அடித்துக் கொலை செய்த குற்றச் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 19

கிளிநொச்சி, பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 70க்கு மேல் புள்ளிகள் பெற்ற அனைத்து மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். பிரதம விருந்தினராக கிளிநொச்சி வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ச-159)

## கனரக வாகனம் தடம்புரண்டது

யாழ்ப்பாணம், டிசெ.19

சித்தன்கேணிப் பகுதியில் மரம் ஏற்றிவந்த கனரக வாகனம் ஒன்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள பாலமொன்றில் தடம்புரண்டது.

பின்னர் இரு கனரக வாகனங்க ளின் உதவியுடன் குறித்த தடம்புரண்ட வாகனம் மீட்கப்பட்டது.

சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-27)

## கஞ்சா மீட்பு; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 19

ஊர்காவற்றுறை நகர்ப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் விசேட பொலிஸ் படையணிக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 2 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்றும், மதவாச்சியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுப்பாடுகள் இறுக்கம் வழிகாட்டல் வெளியீடு

கொழும்பு, டிசெ. 19
நாட்டில் கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரித்து வருவதால், இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் புதிய சுகாதார வழிகாட்டல், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.
அதற்கமைய, திருமண நிகழ்வுகளில் மண்டபக் கொள்ளளவில் 50 வீதமானோர் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், திருமண நிகழ்வுகளில் மதுபான பாவனைக்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளது.
அதேவேளை மரணச் சடங்குகளில் ஒரு தடவையில் 30பேர் பங்கேற்க முடியும். இந்த வழிகாட்டல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

# அமைச்சரவை சீரமைப்புக்கு மஹிந்த ராஜபக்ச எதிர்ப்பு!

### அரச நிர்வாகக் கட்டமைப்பில் அதிரடி மாற்றங்கள்

**கொழும்பு, டிசெ. 19**
**2022ஆம் ஆண்டு ஜனவரி முற்பகுதியில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறாதெனவும், அரச நிர்வாகக் கட்டமைப்பில் முக்கியமான சில மாற்றங்கள் வரவுள்ளதெனவும் அரச வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.**

2022 ஜனவரி 18ஆம் திகதி புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அமைச்சரவையும் மறுசீரமைக்கப்படும் எனத் தகவல்கள் வெளியாகின. இதற்கான ஏற்பாடுகளும் அரச மேல் மட்டத்தில் இடம்பெற்று வந்தன.
அமைச்சரவை மாற்றத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச எதிர்ப்பை வெளியிட்டுள்ளதால், அந்த முயற்சி இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. அமைச்சரவையை மறுசீரமைப்பதைவிடவும், அரச நிர்வாகக் கட்டமைப்பை மறுசீரமைப்பதே சிறந்ததென சிரேஷ்ட உறுப்பினர்களால் பிரதமருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
இதன்படி அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச நிறுவனங்களின் பிரதானிகள், திணைக்களப் பிரதானிகள் என முக்கிய பதவிகளில் மாற்றம் இடம்பெறவுள்ளன. (எ-44)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கோபாலகிருஸ்ணன் தேவராசா

ஓய்வுபெற்ற பரிசாரகர்
(ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பழை)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 30 |
| 06 | 12 |
| 1958 | 2020 |

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது அப்பா எம்துயரம்
அழுதழுது தவிக்கின்றோம்– உம்
அன்பையும் பாசத்தையும் நினைத்து

அந்தோனியார் வீதி,
சுன்னாகம்

குடும்பத்தினர்

## பேர்ள் கப்பல் கொள்கலன்களை அகற்றும் பணியில் அமெரிக்கா



கொழும்பு, டிசெ. 19
இலங்கை கடற்பரப்பில் மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை அகற்றும் பணிகள், இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக கடலுக்கடியில் சிதறிக்கிடக்கும் கொள்கலன்களை அகற்றும் பணிகளை அமெரிக்க நிறுவனம் ஆரம்பித்துள்ளது.
அதேவேளை, ஷாங்காய் சால்வேஜ் நிறுவனத்துக்கு இடிபாடுகளை அகற்றும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.
அந்தப் பணி நாளை ஆரம்பிக்கப்படும் என்று கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்துள்ளார். (ம-4-இ)



## பேருந்துகள் ஏற்றாததால் வீதியில் மாணவர்கள்!

முல்லைத்தீவு, டிசெ. 19
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் இருந்து மாங்குளம் பாடசாலை செல்லும் மாணவர்கள் பல்வேறு போக்குவரத்துச் சேவைகள் இருந்தும் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்லமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது என்று மாணவர்களும் பெற்றோரும் குற்றஞ்சாட்டுகின்றனர்.
குறிப்பாக ஏ-9 வீதியில் கிழவன்குளம், பனிக்கன்குளம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் மாங்குளம் மகா வித்தியாலயத்துக்குச் சென்று வருகின்றனர்.
எனினும் மாணவர்களை ஏற்றிச்செல்வதற்கு பேருந்துகள் தயக்கம் காட்டுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. பல்வேறு தடவைகள் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்தத் தீர்வும்கிட்டவில்லை. நீண்ட நேரமாக மாணவர்கள் பேருந்துகளுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-19)

## மரண அறிவித்தல்

### பொன்னர் சரஸ்வதி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16. 10 .1943 | 18.12.2021 |

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சரஸ்வதி நேற்று (18/12/2021) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பொன்னர் இன் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மார்க்கண்டு பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை செல்வி தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகம் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் பொன்மணி, அன்னலட்சுமி, சிவனேசன்(பெரியாம்பி), ஜெயராசா (சின்னத்தம்பி), துரைராசா (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரியும், சபீந்திரன் (அப்பன்-கீம்ஷன் தச்சு தொழிலகம்), ரவீந்திரன் (லண்டன்ராசன்), ஸ்ரீதரன் (பவுனி- தாசன் ஸ்ரூடியோ இணுவில்), ஜெகாதரன்(ஜெகா-ஜெகா ஸ்ரூடியோ மானிப்பாய்), லங்காதரன்(லங்கா ஸ்ரூடியோ - கொக்குவில்), ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலாதேவி, ரம்மியா(லண்டன்), மங்கையர்க்கரசி,சசி, யசோதா ஆகியோரின் அன்பு மாமியாரும், பஸ்லீன்(செட்டிகுளம் மகா வித்தியாலய பாடசாலை ஆசிரியர்), கஸ்ரோன்,நக்ஸலா,தஷாம்னு,அகிம்சன்,அட்சயன்,அட்சயா(லண்டன்),மதுசன் ( ஸ்ரூடியோ TPICS),பஸ்மியா(யாழ் இந்து மகளிர் கல்லூரி A/L கணித மாணவி), சதுர்சன் (யாழ் . இந்துக் கல்லூரி A/L மாணவன்),ஹிஷானா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி),ஹிஷானி, யதுசன்,அபி,ஹிசோன் ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19/12/2021) ஞாயிற்றுக்கிழமை (K.K.S Road ,RDS Near )
அருகாமை அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா மற்றும் கிளிநொச்சியில்
Now prepare for your Academic / General
IELTS
6.5 band score
இற்கு உத்தரவாதம்
idp
Exam Centre
Spouse ( Family ) விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு UK
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி
IELTS LIFE SKILLS A1
மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
Diploma in Spoken English
முழு / பகுதி நேரம்
முழுநேரப் பாடநெறிகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுகின்றன.
பிரான்ஸ் மொழிப் பாடநெறி French
BRITISH COLLEGE of Education
More information 0777-695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
Navalarmadam, Nelliyady. Tel : 021-7284200
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
A9 Road, Kilinochchi Tel : 021-4927114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 500 ஏக்கர் காணி அபகரிப்பு பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்!





வவுனியா, டிசெ.19

**வவுனியா, பறண்நட்டகல் பிரதேசத்தில் தனிநபர் ஒருவர் 500 ஏக்கர் காணியை அபகரித்துள்ளார் என்று தெரிவித்து, பிரதேசமக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.**

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

எமது கிராமத்துக்கு அருகில் அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான 500 ஏக்கர் காணியை அபகரிக்கும் நடவடிக்கையில் தனிநபர் ஒருவர் ஈடுபட்டுள்ளார். எமது கிராமத்தில் 500 குடும்பங்கள் வசிக்கும் நிலையில், 200 குடும்பங்களுக்குகாணிகள் இல்லை. தனிநபரால் அபகரிக்கப்படும் காணியைமீட்டு, காணிகளற்று இருக்கும் எமது கிராமத்தைச் சேர்ந்த உப குடும்பங்களுக்கு வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

ஆர்ப்பாட்டம் நடத்திய மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு.திலீபன் மற்றும் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலநாதன் ஆகியோர் கலந்துரையாடினர். தனிநபரால் அபகரிக்கப்படுகின்றது என்று கூறப்படும் காணியையும் பார்வையிட்டனர். (எ-110)

## வில்வரத்தினத்தின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், டிசெ.19

நாட்டுப்பற்றாளர் அமரர் சு.வில்வரத்தினத்தின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று ஞாயிற்றுக்கிழமை 3மணியளவில் புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் நிலாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்துவர்.

நிகழ்வில் வில்வரத்தினத்தின் வாசிகம் நூல் வெளியிடப்படவுள்ளது. முதல் பிரதியை உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன் பெற்றுக்கொள்வார். வில்வரத்தினத்தின் பாடல்கள் அடங்கிய இறுவட்டை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் வெளியிடுவார் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-இ)

## நீதிவானின் வீடு புகுந்து தாக்கி மனைவியின் தாலி கொள்ளை

அம்பாறை, டிசெ.19

அக்கரைப்பற்றில் நீதிவான் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள், நீதிவானைத் தாக்கி விட்டு, அவரது மனைவியின் தாலிக் கொடியைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் நடந்துள்ளது என்று அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று வைம்.எம்.சி. வீதியில் மட்டக்களப்பு மாவட்ட நீதிவானின் வீட்டுக்குள் புகுந்த இரு கொள்ளையர்கள், நீதிவானின் மனைவியின் தாலிக் கொடியை அறுக்க முயன்றுள்ளனர். நீதிவான் கொள்ளையர்களைப் பிடிக்க முயன்றபோது, அவரைத் தாக்கிவிட்டு, தாலிக் கொடியுடன் கொள்ளையர்கள் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். 11 பவுண் தாலிக்கொடி அபகரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, அந்தப் பகுதியில் கடந்தவாரம் இரு வீடுகளில் தாலிக் கொடிகள் கொள்ளையிடப்பட்டிருந்தன என்றும், அவை தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர். (எ-இ)



## யாழ். இசைக்கருவியின் மீளுருவாக்கமும் 'தூவானம்' திரைப்படப் பாடல் வெளியீடும்

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணத்தின் சின்னமாக காணப்படுகின்ற யாழ். நரம்பிசைக் கருவியின் மீளுருவாக்க நிகழ்வு யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உள்ள நித்திலம் கலையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவியான யாழின் புகழ்பூத்த இசைக்கலைஞர் முரளியின் எண்ணக்கரு மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் நித்திலம் கலையகத்தின் இயக்குநர் மருத்துவக் கலாநிதி சிவன்சுதனின் நிதிப் பங்களிப்போடு சிற்பாசிரியர்களான கணேசலிங்கம், பாலச்சந்திரனின் 'கைவண்ணத்தில் யாழ். நரம்பிசைக் கருவி மீளுருவாக்கப்பட்டுள்ளது. கருவியை மீளுருவாக்கியதுடன் நின்று விடாது, அதை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் பணியிலும் தமது கலையகம் ஈடுபடும் என்று இயக்குனர் மருத்துவக் கலாநிதி சிவன்சுதன் தெரிவித்தார்.

அத்துடன், நித்திலம் கலையகத்தால் உருவாக்கப்பட்ட 'தூவானம்' திரைப்படத்தின் பாடல்களும் நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டன. மருத்துவர் சிவன்சுதனின் தயாரிப்பில் உருவான குறித்த திரைப்படத்தில் ஈழத்துக் கலைஞர்களை உள்ளடக்கி படமாக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் இசைவாணர் கண்ணன், கவிஞர் வேலணையூர் சுரேஷ், மருத்துவர் சிவன்சுதன், கவிஞர் புதுவை அன்பன், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், நடிகர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ம-125)



## வீதிகளில் மாடுகளை கட்டுவோருக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.19

வலி.மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட வீதிகளில் கட்டப்படும் மாடுகளால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. மாடுகளின் உரிமையாளர்கள் இது தொடர்பில் கவனம் எடுக்காவிட்டால், மாடுகளைப் பிடித்து ஏலம் விட வேண்டிய நிலைமை ஏற்படும் என்று வலி.மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

சங்கானை, விழிசிட்டி முதலாம் வீதியில் மாடுகள் கட்டப்படுகின்றன. இதனால் வீதியால் செல்பவர்கள் விபத்துக்களைச் சந்திக்க நேர்கின்றது. நேற்றுமுன்தினமும் மூன்று விபத்துக்கள் நடந்துள்ளன. மாடுகளின் உரிமையாளர்கள் இது தொடர்பில் கவனம் எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மாடுகளைப்பிடித்து, ஏலம் விட வேண்டிய நிலைமை ஏற்படும்- என்றார். (எ-27)

## 'பண்டிகைக்கால வியாபாரம்' அச்சம்கொள்ள வேண்டாம்!

*மக்களிடம் கோருகின்றார் மன்னார் நகர சபைத் தவிசாளர்*

மன்னார், டிசெ. 19

மன்னாரில் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று மன்னார் நகர சபைத் தவிசாளர் அ.டேவிட்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரிலிருந்து வெளி மாவட்டங்களுக்கும், வெளிமாவட்டங்களில் இருந்து மன்னாருக்கும் வருகைதரும் மக்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றிக்கொண்டுள்ளனர். வெளிமாவட்டங்களில் இருந்து இங்கு வியாபார நடவடிக்கைகளுக்காக வரும் அனைவருக்கும் உரிய மருத்துவ பரிசோதனைகளை முடித்து தடுப்பூசிகள் செலுத்திய அட்டைகளை பரிசோதித்து உறுதிப்படுத்திய பின்னரே அவர்களை வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதிப்போம். இதே நடைமுறைதான் பொது மக்களுக்கும் உள்ளூர் வியாபாரிகளுக்கும் பின்பற்றப்படும். எனவே பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதேபோல் வீண் வதந்திகளையும் நம்ப வேண்டாம் என்றார். (ம-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எங்கே போகிறோம்...?

இலங்கையில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் போரால் பல்வேறு வகையில் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. போர் முடிந்து தசாப்த காலம் கடந்துள்ளபோதும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் போரின் இழப்புக்களில் இருந்து மீளவில்லை. வடக்கு உட்பட தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகள் நடக்கின்றன என்று இலங்கைஅரசு கூறிக்கொள்கின்றது. வீதிகள் அமைக்கப்பட்டு, கட்டடங்கள் உயர்த்தப்படுகின்றன. போரால் ஏற்பட்ட இழப்புக்கள் சரிசெய்யப்படுகின்றன என்று சர்வதேசத்துக்கு இலங்கை அரசு படம் காட்டுகின்றது.

போர் முடிவுறுத்தப்பட்டபோதும், தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகள் இன்னமும் நீர்த்துப்போய்விடவில்லை. அமைதியானமுறையில் அரசியல்ரீதியாக அந்தக் கோரிக்கை இன்னமும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள், தமிழ் மக்களின் இனப்பிரச்சினை என்ற மையத்தை வைத்தே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்.


இத்தனைக்கும் நடுவே, வடக்கு மாகாணத்தில் இளம் தலைமுறையினரிடையே ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மாற்றங்கள் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. போதைப் பொருள் பாவனை, வன்முறைச் சம்பவங்கள் என விரிந்து கொண்டிருக்கும் இந்த சமூக விரோதச் செயற்பாடுகள், தமிழ் இனத்தின் எதிர்காலத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது வெள்ளிடைமலை.

அண்மைக்காலமாக சிறிய சிறிய பிரச்சினைகளைக்கூட எதிர்கொள்ளமுடியாது உயிர்துறத்தல், சிறிய காரணங்களுக்காகக்கூட கொலை செய்தல், போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் குற்றச்செயல்கள், பாலியல் குற்றங்கள் என வடக்கில் தினமும் பதிவாகும் சம்பவங்கள் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. அண்மையில் தன்னைக் காதலிக்க மறுத்தார் என்ற காரணத்துக்காக பெண்ணொருவரை, அவரின் உறவினரான நபரொருவர் சுட்டுக் கொன்றுள்ளார். குறித்த சந்தேகநபரும் போதைப்பொருள் பாவனையாளரே என்று ஊரவர்கள் சொல்கிறார்கள். இளம்பராயத்தினர் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் ஆபத்தானது.

வடக்கில் திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் பாவனை திணிக்கப்பட்டுள்ளது என்பது பல்வேறு தரப்பினரின் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டை முற்றிலுமாகத் தவிர்க்கவும் இயலாது. பாதுகாப்புத் தரப்பினரின் கடும் பிடிக்குள் இருக்கும் வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் விநியோகம் நடப்பது ஆச்சரியமானதே. தமிழ் இளம் பிராயத்தினரின் மன மாற்றங்களுக்கும், கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போதைப்பொருள் பாவனைக்கும் தொடர்பு இருக்கலாம், போரால் ஏற்பட்ட மன வடுக்களாகவும் இருக்கலாம்.

ஓர் இனத்தின் இருப்புக்கு, ஆரோக்கியமான இளம் சமுதாயம் கட்டியெழுப்பப்படவேண்டும்.-அடக்குமுறைக்குள்ளாகி உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஓர் இனத்துக்கு உடல் ஆரோக்கியத்துடன், மன ஆரோக்கியமும் கொண்ட இளம் சமூகத்தின் தேவை அதிகமானது. ஆனால், வடக்கிலும்- கிழக்கிலும் நடக்கும் சம்பவங்கள், எதிர்காலம் குறித்த நம்பிக்கையைச் சிதைப்பனவாகவே இருக்கின்றன.

உரிமை நோக்கிய போராட்டத்தை நகர்த்திச் செல்லும் அதேநேரம், சமூகக் கட்டமைப்புக்களைச் சரியாகப் பேண வேண்டிய கட்டாயம் தமிழர்களுக்கு இருக்கின்றது. தமிழ் இளம் சமூகத்தினரிடையே அதிகரிக்கும் மனப் பிறழ்வுகளைச் சரி செய்ய வேண்டியதும், அதற்கான வழிகளைக் கண்டறிவதும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் இருக்கின்றது. இவ்வாறான சம்பவங்களைச் செய்திகளாகக் கடந்து விடாது, இவை தொடர்பிலும் அதிக கவனம் கொண்டு, அவற்றை இல்லாதாக்க கடுமையாகப் போராட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், பாடுபட்டு உரிமைகளைப் பெற்றாலும்கூட, அவற்றைக் கட்டிக் காக்க எவரும் இல்லாத நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை...!



# பேராறுத் திட்டத்தால் பாதிப்புற்ற விவசாயிகள் அமைச்சரிடம் மனு!

**வவுனியா, டிசெ. 19**

**வவுனியா பேராறு நீர்த் தேக்கத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் நேற்றுமுன்தினம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.**

பேராறு குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பிக்க வந்திருந்த நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை சந்தித்த பத்தியார்குளம் கமக்கார அமைப்பைச் சேர்ந்த விவசாயிகள் மனு கையளித்துள்ளனர்.

வவுனியா நகருக்கு நீர் வழங்கும் நோக்கத்துடன் சாஸ்திரி கூழாங்குளத்தில் அமைக்கப்பட்ட பேராறு நீர்த் தேக்கம் திட்டத்துக்காக 2013ஆம் ஆண்டு 165 ஏக்கர் வயல் காணிகளும், 50 ஏக்கர் வரையான மேட்டுக்காணிகளும் அரசால் சுவீக்ரிக்கப்பட்டன. காணி சுவீகரிப்புக்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில், 2013ஆம் ஆண்டு முத்தரப்பு ஒப்பந்தம்ஒன்று ஏற்படுத்தப்பட்டு அரசால் காணிகள் சுவீகரிக்கப்பட்டன.

முத்தரப்பு ஒப்பந்தத்தில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர், வவுனியா பிரதேச செயலர் மற்றும் கமக்காரர் அமைப்புகள் கைச்சாத்திட்டிருந்தன. அதில் உறுதியளிக்கப்பட்ட சில விடயங்கள் அரசால் செய்து முடிக்கப்பட்டபோதும் மாற்றுக்காணிகளுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கல், சீரமைக்கப்பட்ட பாசனக் குளங்களுக்கான நீர் வரத்து, வயற்காணிகளுக்கான போக்குவரத்து வசதிகள், பாசன கால்வாய் சீரமைப்பு, பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பு போன்றன இதுவரை செய்துதரப்படவில்லை. அவற்றை நிறைவேற்றி தரக்கோரியே விவசாயிகளால் நீர் வழங்கல் அமைச்சரிடம் மனு கையளிக்கப்பட்டது. மனுவைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் வாசுதேவநாணயக்கார கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார் என்று கமக்காரர் அமைப்பின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். (எ-110)

# பேராறு நீர்த்தேக்கம் நேற்று திறந்துவைப்பு





வவுனியா, டிசெ. 19

வவுனியா நீர்வழங்கல் திட்டத்துக்கான குடிதண்ணீர் வழங்கலுக்காக சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் ஆயிரத்து 400 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பேராறு நீர்த்தேக்கம் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவால் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.கே. மஸ்தான், கு.திலீபன் மற்றும் தேசிய நீர்வழங்கள் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இந்த நீர்த்தேக்கம் மூலமாக 23 ஆயிரத்து 500 பயனாளிகள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை

20.12.2021

திங்கட்கிழமை

மார்கழி 05

சுபநேரம் : பி.ப. 12.24 - பி.ப. 01.54

ராகுகாலம்: காலை 07.54 –காலை 09.24

ஆர்த்திரா தரிசனம்

# CANADA VISA



SCHOOLING FOR KIDS BETWEEN 5 & 17

- ☑ NO IELTS OR SPECIAL QUALIFICATIONS REQUIRED.
- ☑ BOTH PARENTS CAN ALSO GO ALONG WITH CHILD.
- ☑ VISA DOCUMENTATION PROCESSED BY A LEADING RCIC IN CANADA.

☎ +94 112 890 692
✆ +94 777 788 732

SCHOOL FEES SHALL BE PAID WITHIN TWO WEEKS AFTER THE VISA APPROVAL

**Consolidated Academic Lanka (Private) Limited**
No.22-B, Station Lane, Nugegoda.
Email : ceo@academiclanka.com / info@academiclanka.com
Web : www.academiclanka.lk
(CR 36758)

## காணி உடன் தேவை

பூநகரி அல்லது வெள்ளாங்குளம் பிரதேசத்தில் நீர், மின்சார வசதிகளுடன் காணி வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உடன் தேவை. (CS 00939)(3.6)

**தொடர்பு: 076 826 7703**

## தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் உணவகத்திற்குப் பணியாளர்கள் தேவை (ஆண் / பெண்)

- ❖ **காசாளர்**
- ❖ **சமையல்காரர்**
- ❖ **சமையல் உதவியாளர்**

(CR 5799)(3.6)

**தொடர்பு : 071 322 3222**

## கணினி அறிவுள்ள பெண் மற்றும் அலுவலக உதவியாளர் ஆண் தேவை

யாழ் வணிகர் கழகத்திற்கு கணினி அறிவுள்ள. **தமிழ், ஆங்கில தட்டெழுத்து (Typing)** தெரிந்த மற்றும் ஓரளவு **Accounts** தெரிந்த பெண் பணியாளரும் அத்துடன் அலுவலக உதவியாளர் ஆணும் தேவை. பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பங்களை யாழ். வணிகர் கழகம், இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கோ அல்லது **jaffnachamberofcommerce@gmail.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும். **விண்ணப்பங்கள் 27.12.2021 திங்கட்கிழமை** வரை ஏற்றுக் கொள்ளப்படும். (CR 5798) (3/6)


## VACANCY

**OFFICE ASSISTANT** (MALE / FEMALE)
**Qualification & Experience**

- G.C.E. A/L Completed
- Previous experience Minimum One year
- Good computer knowledge with English and Tamil typing.
- Good knowledge in Graphic Designing (Photoshop or Corel Draw)
- Knowledge or experience in Media is an added advantage.

(CS 41685)(3.6)

**Email ID – maruthica5@gmail.com**
**Contact No via whatsapp :- 0766661351**



அவசர பணத்தேவையா?
அல்லது அடகு வைத்த நகைகள் அறுதியாக போகின்றனவா?

எந்தவொரு வங்கியில் அடகு வைத்த நகைகளுக்கு

**பவுண் ஒன்றுக்கு ரூபா.23,000/= இற்கு மேல்**

**70 சத அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**

உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு **0767 888 222** இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 077 1201856 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 076 9914642 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாழைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |
| கிண்ணியா | 077 1201853 | [illegible] | [illegible] |
| மஹியங்கனை | 077 1201862 | [illegible] | [illegible] |
| கல்பிட்டி | 076 1605803 | வேலணை | 076 9940273 |
| மஸ்கெலியா | 076 0909822 | | |

(ACO 17645)

# ஆண், பெண் பராமரிப்பாளர் தேவை

**ஊரிக்காடு, வல்வெட்டித்துறையில் நான்கு வருடங்களிற்கு மேலாக இயங்கி வருகின்ற**

**வல்வை முதியோர் இல்லத்திற்கு ஆண், பெண் பராமரிப்பாளர்கள் தேவை.**
**உணவு, தங்குமிட வசதி இலவசம்.**
தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
**எமது இல்லத்தில் புதிதாக ஆண்கள் பெண்கள் இணைய விரும்புவோர் இணைந்து கொள்ளலாம்.**
**கட்டணம் குறைவான நிலையில் அறவிடப்படும்.**

தொடர்புகளுக்கு: **077 810 6857**
**077 154 2067**
**021 226 5551**

(NE 17831) (3 / 6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். திட்டமிட்ட பயணம் தள்ளிப்போகலாம். புதிய முயற்சிகள் நல்ல முறையில் நிறைவேறத் தொடங்கும். தன்னம்பிக்கை துளிர்க்கும். மகிழ்ச்சியாகப் பொழுது போகும்.

**இடபம்:** மேலதிகாரிகள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள். முயற்சி ஒன்று நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நலனில் மிகுந்த அக்கறை கொள்வீர்கள்.

**மிதுனம்:** பொதுவாழ்வில் புதிய பொறுப்புஒன்று உங்களைத் தேடி வரும். செய்திகள் மகிழ்ச்சி அளிக்கும். குடும்பம்பற்றி முக்கிய முடிவு எடுத்து நிறைவடைவீர்கள்.

**கடகம்:** முயற்சியில் இருந்த தடை அகலும். சந்தோஷம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி முடிவாகும். மகிழ்ச்சி கூடும். உங்களது துறையில் அனுபவசாலிகள் அறிமுகமாவார்கள்.

**சிம்மம்:** நண்பர்கள் சிலர் உங்கள் உதவியை நாடி நன்மை பெறுவர். வியாபாரத்தில் மாற்றம் ஒன்றைச் செய்து லாபம் ஈட்டுவீர்கள். பணியிடத்தில் உங்களின் கைஓங்கும். தொட்டது துலங்கும்நாள்.

**கன்னி:** குழந்தைகளின் தனித் திறமைகளைக் கண்டறிவீர்கள். முயற்சி செய்து ஆடம்பரச் செலவை குறைத்துக்கொள்வீர்கள். மேலதிகாரியின் எதிர்பார்ப்புக்கு உங்களை மாற்றிக் கொள்வீர்கள்

**துலாம்:** சேமிக்கத் தொடங்குவீர்கள். பலகாலத் திட்டம் ஒன்று நிறைவேறும். நெருங்கிய உறவினர்கள் உங்களிடம் உதவிக் கேட்டு வருவார்கள். திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய நாள். பேச்சில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவுவார்கள். உற்சாகமான நாள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும்நாள். புதிய திட்டம் தீட்டுவீர்கள். வேண்டு தலை இன்று நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** முக்கிய நபர் ஒருவரைச் சந்திப்பீர்கள். உங்களின் உழைப்பு அதிகரிக்கும். உறவினர் ஒருவரிடம் மனஸ்தாபம் வந்து நீங்கும். பயம் தீரும். பழைய கடனைத் தீர்க்க சிறு உதவி ஒன்று கிடைக்கும்.

**மகரம்:** அநாவசியப் பொருள்கள் எதையும் வாங்க வேண்டாம். வியாபாரத்தில் சூட்சுமங்களை கவனமாகக் கையாளுங்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்:** குடும்பத்தினர் உங்களது ஆலோசனையை ஏற்று நடப்பர். நீண்ட பிரச் சினை ஒன்றுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். விருந்தினின்வருகையால் வீடு கல கலப்பாகும். அம்பிகையை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** மேலதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தந்து சந்தோஷப்படுத்துவர். பிறருக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். பெருந்தன்மையுடன் நடந்துகொண்டு பிறரிடம் பாராட்டுப் பெறுவீர்கள்.

# தமிழ்த்தாய் வாழ்த்து இனி 'தமிழகக் கீதம்'

**சென்னை, டிசெ.19**

**தமிழ்த்தாய் வாழ்த்தை, தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.**




தமிழ்நாட்டின் அனைத்து நிகழ்வுகளிலும் மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய 'நீராரும் கடலுடுத்த' எனும் பாடல் பாடப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், தமிழ்த்தாய் வாழ்த்தை, தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தர விட்டுள்ளார். அதன்படி மனோன்மணியம் சுந்தரனார் இயற் றிய தமிழ்த் தாய் வாழ்த்துப்பாடல் தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்துக் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் நிகழ்வு ஆரம்பிப்பதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்படவேண்டும் என்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# பாடசாலை சுவர் இடிந்து 3 மாணவர்கள் சாவு!

சென்னை, டிசெ.19

தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் 3 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையிலுள்ள தனியார் பாடசாலையொன்றின் கழிப்பறைச் சுவரே இவ்வாறு இடிந்து வீழ்ந்துள்ளது. இதில் கழிவறைச்சுவர் அருகே நின்றுகொண்டி ருந்த 2 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், 3 மாணவர்கள் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில் சிகிச்சை பெற்று வந்த மாணவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

நூற்றாண்டு பழமைவாய்ந்த இந்தப் பள்ளியின் சுவர் அடித்தளம் இல்லாமல் அமைக்கப்பட்டதால் விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## 'அக்னி பிரைம்' ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை

புதுடில்லி, டிசெ.19



அணு ஆயுதங்களை தாங்கிச் சென்று எதிரிகளின் இலக்கை தாக்கி அழிக்கும் 'அக்னி பிரைம்' ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளது.

ஏவுகணைத் திட்டத்தின் கீழ் இந்தியா இதுவரை அக்னி 1 முதல் அக்னி 5 வரை ஏவுகணைகளை சோதித்துள்ளது. இதில் அக்னி ஒன்று முதல் அக்னி 3 வரையிலான ஏவுகணைகள் இராணுவத்தின் பயன்பாட்டிலுள்ளன.

இந்நிலையில் ஒடிசாவின் பாலசோர் கடற்கரை பகுதியில் அக்னி பிரைம் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. அக்னி பிரைம் ஏவுகணை என்பது இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள அக்னி ஏவுகணைகளை விட மேம்படுத்தப்பட்ட புதிய தலைமுறை வகையாகும்.

இது 1,000 முதல் 2,000 கி.மீ. வரை சென்று எதிரிகளின் இலக்கை துல்லியமாக தாக்கும் திறன் கொண்டது என்று மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)



தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் சுவர் இடிந்து வீழ்ந்து 3 மாணவர்கள் உயிரிழந்ததை அடுத்து சகமாணவர்கள், பெற்றோர் பாடசாலையிலுள்ள பொருள்களை சேதப்படுத்தியதுடன், வீதியில் இறங்கி போராட்டம் நடத்தியுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ச)

# மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 இலட்சம்

## தமிழக அரசு இழப்பீட்டுத் தொகை

சென்னை, டிசெ.19

திருநெல்வேலியிலுள்ள பாடசாலையின் கழிவறைச் சுவர் இடிந்து வீழ்ந்து உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்குத் தலா பத்து இலட்சம் ரூபா வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் தனது டுவிற்றர் பக்கத்தில்,

நெல்லையில் பள்ளியின் கழிவறைச் சுவர் இடிந்து வீழ்ந்து 3 மாணவர்கள் உயிரிழந்த செய்தியறிந்து துடிதுடித்துப் போயுள்ளேன். அலட்சியமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும்; உயிரிழந்த மாணவர்கள் மற்றும் காயமுற்ற மாணவர்களின் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடு வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. அத்துடன் உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு எனது இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்- என்று குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொரோனா விழிப்புணர்வுத் துண்டறிக்கைகள் சாவகச்சேரி பிரதேசசபையின் கச்சாய் பொது நூலகத்தால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. இந்தத் துண்டறிக்கைகள் கெற்பேலி அ.த.க. பாடசாலை, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ய-159)






கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில், தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 32 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.



இலவச மருத்துவமுகாம் பூநகரி வாடியடி புனித மரியன்னை ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-6)






சங்கானை பிரதேசசெயலகத்தின் பிரதேசசெயலர் பிரேமினி பொன்னம்பலம், 2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த சுயசிறுகதை இலக்கியத்துக்கு 'அரச இலக்கிய' விருதை கடந்த 4 ஆம் திகதி பெற்றுள்ளார். (ச-125)



விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் வளாகத்தைச் சுற்றியுள்ள வெள்ளநீர் அகற்றும் நடவடிக்கை அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர், சீடா நிறுவனப் பணியாளர்களுடன் தொடர்புகொண்டமைக்கு அமைவாக சீடா நிறுவனத்தின் பவுஸர்மூலம் வெள்ளத்தை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ய-159)




சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் மாணவர்களுக்கு கல்லூரியின் பழையமாணவி இந்துமதியால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (ய-159)



கெற்பேலி அ.த.க. பாடசாலைக்கு புகைப்பட நகல் இயந்திரம் கச்சாய் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் ஐக்கிய இராச்சிய கிளையால் அண்மையில் வழங்கப்பட்டது. (ய-159)




முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் சேதனப் பசளைப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் [illegible] 500 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான உள்ளீட்டுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ய-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 07 . 1963



இறப்பு 16 . 12 . 2021

## நாகரெத்தினம் ஜெயக்குமார்

புங்குடுதீவு, 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், முத்திரைச் சந்தி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரெத்தினம் ஜெயக்குமார் கடந்த (16.12.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மருதப்பு நாகரத்தினம் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், ஜெசிகலாவின் அன்புக் கணவரும், பிரசாந்தின் பாசமிகு தந்தையும், டயற்றாலின் அன்பு மாமனாரும், ஜெயவதனி, முகுந்தகுமார், சூரியகுமார், சந்திரகுமார், தேவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரகுமார், நளினி, திலகவதி, இந்து, மகிந்தா, ரவிச்சந்திரன், சூரியகலா, சந்திரகலா, சசிநேசன், சுந்தரலிங்கம், தயாபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரவிச்சந்திரன், சூரியகுமார் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

816, பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

தகவல்
குடும்பத்தினர்

(CS 41702) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 11 . 1945



இறப்பு 15 . 12 . 2021

## திருமதி நீற்றா சகுந்தலா குணரத்தினம்

நாவலபிட்டியை பிறப்பிடமாகவும் அரியாலை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீற்றா சகுந்தலா குணரத்தினம் கடந்த (15.12.2021) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் - லில்லி தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அருளம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னையா குணரத்தினத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான புஸ்பரத்தினம், தவரத்தினம், தங்கரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், உமாகாந் (யாழ்.போதனா வைத்தியசாலை), வசந்தி (பிரான்ஸ்), சுகந்தி (சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மேரிபிறேமிளா ஜெயறோஸ் (யா/ இந்து மகளிர் கல்லூரி), ஞானதாஸ் (பிரான்ஸ்), சிறிகாந்தன் ஆகியோரின் மாமியாரும், டிலக்ஷிகா, ஜோய்டிலுக்ஷன், டிலக்ஷனா, எறின்டீனுஜா, வலரி, மியூரி, யோத்தம், லோஜயா ஏஞ்சலின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை அவரது வீட்டில் நாளை (20.12.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பரியோவான் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

57/34, திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 461 2126
077 724 5599

(cs.41686) (2.6)

# கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்ப்பாணம், காங்கேசன்துறைவீதியில் அரசடிப் பகுதியில் இருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், 31 மற்றும் 36 வயதானவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், சந்தேகநபர்களிடம் இருந்து தலா 200 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-25)

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு (இரத்தினம்)

(உரிமையாளர் S.K.T மரக்காலை – சாவகச்சேரி)

பிறப்பு 27.05.1948 — இறப்பு 17.12.2021

பெரியமாவடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இலிங்கநகர் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு நேற்று முன்தினம் (17.12.2021) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலிங்கநகரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று 17.12.2021 வெள்ளிக்கிழமையன்று இலிங்கநரிலுள்ள இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**
**கணபதிப்பிள்ளை வடிவழகன் (சகோதரன்)**
**உரிமையாளர் சிவம் மரக்காலை**
**பொன்னுச்சாமி வீதி, சாவகச்சேரி.**

(CR 36765) (3/6)

# மறக்கமுடியாத நினைவலைகள்

பதினாறாம் ஆண்டு — இரண்டாம் ஆண்டு





அமரர்
**முருகேசு தாமோதரம்பிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியர்)
திதி: அபரபக்க பிரதமை (19.12.2021)
தோற்றம் 13.01.1932 — மறைவு 16.12.2005

அமரர் திருமதி
**நவநீதம் தாமோதரம்பிள்ளை**
(இளைப்பாறிய அதிபர்)
திதி: அபரபக்க சதுர்த்தி (23.12.2021)
தோற்றம் 07.07.1932 — மறைவு 13.01.2020

எம் உயிரினும் மேலான அம்மா ! அப்பா!
எங்களை மங்களமாய் வாழ வைத்து
எமை விட்டு பிரிந்தீர்கள்
கண்ணை இமை காப்பதுபோல் வளர்த்த - நீங்கள்
எமை விட்டு பிரிந்தது ஏனோ!
எம் மனங்களில் நீங்கா இடம் பிடித்து
எம்முடனே வாழ்கின்றீர்கள்
என்றும் அணையா ஜோதியாய் உம் நினைவுகள்
எம் மனங்களில் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கோகுலம்
சங்கத்தானை, சாவக்சேரி.

அன்பு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மைத்துனி, தங்கை.

(cr.8307) (2.6)

Qatar உடனடி வேலைவாய்ப்பு

டெலிவரி ரைடர் - 193 பேர்
Delivery Rider - 193 Nos.



( இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது )
சம்பளம்: 1300QR , உணவு கொடுப்பனவு: 300QR
QR – LKR 54.79(Subjects to change according the exchange rate)

பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்:
0777 233 800

Terms & Conditions:
- ஒப்பந்த காலம் 2 வருடம், 35 வயதுக்கு உட்பட்டிருத்தல்.
- இலவச தங்குமிடம், மருத்துவ, போக்குவரத்து வசதி
- நாளொன்றுக்கான வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் வாரமொன்றுக்கு 6 நாட்கள்
- ஒப்பந்த காலம் முடிவடைந்தது நாடு திரும்ப விமானப்பயண டிக்கட் இலவசம்
- ஏனயவை கடார் நாட்டு சட்டத்திறகுட்பட்டது.

AL//3074/06/21
அரச அனுமதிக்கட்டணம் மட்டுமே அறவிடப்படும்.

Send your cv to cv.rianrecruitment@gmail.com

SLBFE LIC NO. 3074
RIAN RECRUITMENT
# 55 B ,1/ 1, Manning place, Colombo - 06. Tel:0112364786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
24
09
1948



ஆண்டவன் அடியில்
11
01
2020

## அமரர் உயர்திரு கனகரத்தினம் தவநாதன் (J.P)

(நியூ கருணாநிதி ஸ்டோர்ஸ், கண்டி)

திதி : (பிரதமை) 19.12.2021 (ஞாயிற்றுக்கிழமை)

அன்புத் தெய்வமே ஆருயிர் அப்பாவே!
அன்போடு எங்களை அனுதினமும் அரவணைத்தாய்
அல்லும் பகலும் அயராமல் எமை காத்தாய்
உலகுக்கு நீ உத்தமனாய் வாழ்ந்து நின்றாய்

உயிரிலும் உணர்விலும் ஒன்றாக கலந்திருந்தாய்
ஒன்றுக்கும் கலங்கவில்லை நாம் உன்னோடு இருந்தவரை
கண்மூடி மறைவாய் என்று கனவிலும் நினைக்கவில்லை
சத்தம் இல்லாமல் சித்தம் துடிக்க வைத்து
மொத்தமாய் எங்களை மோசம் செய்ததென்ன?

தாத்தா எங்கே என்று பேரப்பிள்ளைகள் தினம் கேட்பர்
அள்ளி அணைத்து நாம் அர்த்தம் தான் என்ன சொல்ல?

எம் மகள்களின் செயல்களிலே மனம் உன்னைத் தினம் காணும்
காணும் போதெல்லாம் கண்ணீர்தான் கரைந்தோடும்
வாழும் நாள் வரைக்கும் உன்னை நினைத்திருப்போம்
நினைவுகளோடு நாம் நிறைவாக வாழ்ந்திடுவோம்


ஆண்டுகள் இரண்டு ஆனாலும் அன்பு கொண்ட உன் வதனம்
அருகில் இருப்பது போல் உணர்கின்றோம்
அன்பால் என்றும்

எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நீங்காது உங்கள்
நினைவு எம் நெஞ்சோடு
*உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

இங்ஙனம்
மனைவி ,மகன்மார் , மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல் : மனைவி, மகன்மார், சகோதரர் - க.தவலிங்கம்
முகவரி : இல.292, D.S.சேனாநாயக்க வீதி, கண்டி.
0772642320 , 077 2094400 , 077 5599515

# 45ஆம் நாள் நினைவு தினமும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



பிறப்பு
02.01.1956

இறப்பு
05.11.2021

கடந்த 05.11.2021 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவன்

## கந்தையா லோகநாதன்

திதி : வளர்பிறை பிரதமை

அவர்களின் சிவபதப்பேறு குறித்து அந்தியேட்டி வீட்டுக் கிரியைகள் இன்று (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்களது குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடிச்சந்தி, கல்வயல்,
சாவகச்சேரி

(CR 36737) (3/6)

குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
18
-
11
-
1940



மறைவு
17
-
12
-
2021

## மகாலிங்கம் தவமணிதேவி

வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த மகாலிங்கம் தவமணி தேவி அவர்கள் நேற்று முன்தினம் (17.12.2021) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரப்பு மகாலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிதம்பரநடேசன், கலாவதி, சிற்சபேசன் (அப்பன்), லிங்கேஸ்வரி, அப்புலிங்கம் (ராசன்), கௌரி, கோபி, சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் வனிதா, கீதா, சுதாகரன், சிவகுமார், காங்கேயவாணி, சாந்தி, லோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிறோஜன், காலஞ்சென்ற நிருபா மற்றும் நிலக்ஷனா (USA), நிரஞ்சன், ஹரிசாந்த், பிரசாந்த் (UK), மோகனசாந், கிருஷாந்த், கலைவாணி, சஜீபனா, யசிந்தன், கஜானன், அபிநயா, பிரணவன், விதுர்சன், பிருந்தாவன், பிரவின்ஜா, அனோஜா, அங்கஜன், றஜீவன் மற்றும் வசந்தராஜ் (USA) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹர்சிதா (USA) அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**
**கோபி - 077 902 6449, அப்பன் - 076 841 1572**
**ஹரி - 077 124 5190, விது - 077 335 2022**

தகவல்: குடும்பத்தினர்

(CS 41704) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
04
.
04
.
1951



இறப்பு
16
.
12
.
2021

## சின்னத்துரை தியாகலிங்கம்

நாவலி வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தியாகலிங்கம் கடந்த (16.12.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு இரண்டாவது மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சாருஜன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், CESL), வியாஷன் (ஜேர்மனி), சஜித்தனா (Student HNDA - ATI, Jaffna), திலக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சந்திரலிங்கம், விமலாதேவி (ஜேர்மனி), யோகலிங்கம், சாரதாதேவி, கணேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரஸ்வதி, கலஞ்சென்றவரான ஜோர்ஜ்கிங், ஜெயந்தி, முருகமூர்த்தி, சசிகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருசியா, ஜெசானா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரணிகாவின் அன்பு அப்பப்பாவும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு:
**தி.சாருஜன் - 077 778 6654**
**தி.வியாஷன் - 004 915 166 876 044**
**சி.கணேசலிங்கம் - 0041 7965 31563**

(Cr 36762) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 02.01.2018 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதப்பேறு அடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் இந்திரசித்து விக்கினேஸ்வரன்

(லலிதா ஜ்வல்லரி)

பிறப்பு
11.02.1977

இறப்பு
02.01.2018

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
நான்காண்டுகள் சென்று விட்டன
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் - நாங்களோ
ஏது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
42/2, கடையிற்சுவாமி கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(CR 36183) 3/6)

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## தர்மலிங்கம் தர்மேந்திரன் (பாபு)

தோற்றம்
12.05.1953

மறைவு
28.12.2012

(பிரபல தர்ம்சன்ஸ் கட்டட ஒப்பந்தகாரரும்
உரிமையாளரும்)



ஒன்பது ஆண்டுகள் ஓடிவிட்டது அப்பா
ஓயவில்லை உங்கள் இழப்பை நினைத்து
எங்கு எங்கே சென்றாலும் உங்கள் பெயரும்
நீங்கள் செய்த செயல்களும்தான்
எங்கள் காதுகளில் கேட்டுக் கொண்டிருக்கிறது
உங்களுடன் வாழ்ந்த காலங்களில் நாம்
அனுபவித்த உங்கள் அரவணைப்பு பாசம்
அனைத்தும் ஒரு நொடிப் பொழுதில் கலைந்துவிட்டது
- அப்பா

ஆனாலும் உங்கள் பிள்ளைகள் இருவரும்
- அம்மாவும் உங்கள்

இலட்சியங்கள் கனவுகள் அனைத்தும் மங்காமல்
இருக்கவேண்டும் என எண்ணி அம்மாவின் நிழலின்
கீழ் நாம் உறுதுணையுடன் நிறைவேற்றுவோம் என
ஸ்ரீ சித்தி விநாயகர் மற்றும் மகாமாரி அம்மன் ஆசியுடன்
உறுதி பூணுவோம்.



இல. 11 கதிரவேல் ஒழுங்கை
கனகரட்ணம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில் வாழும்
**குடும்பம்**


(cs. 41707 (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 02 . 1955

மறைவு
18 . 12 . 2021



## தேவசகாயம் இராசேந்திரம் (பாலன்)

உரும்பிராய் கிழக்கை (சென்மக்கல் ஆலயத்துக்கு முன்பாக) பிறப்பிடமாகவும் 521/1, மானிப்பாய் வீதி (ஓட்டுமடம்) யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தேவசகாயம் இராஜேந்திரம் ( பாலன் ) இறைபதமடைந்துள்ளார்.
அன்னார் காஞ்சென்ற தேவசகாயம் செல்லமணி அவர்களின் அன்புமகனும் ரேணுகாதேவியின் பாசமிகு கணவரும் துஷிதா (லண்டன்), ஸ்டாலின், ஸ் ரீல், ஸ் ரீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கமல்ராஜ் (லண்டன்) பாசமிகு மாமனும் டேணுஜாவின் (லண்டன்) பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் சென். நீக்லஸ் தேவாலய சேமக்காலையில் இன்று (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

021 222 87 66

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## பாலகிருஷ்ணர் முத்துக்குமாரு

(இளைப்பாறிய ஆசிரியர் - யாழ் . இந்துக்கல்லூரி, கொழும்பு விவேகானந்தா கல்லூரி மற்றும் செம்மலை மகாவித்தியாலயம்)



தோற்றம் 08. 05 .1946 மறைவு 18.12.2021


பருத்தித்துறை புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல19 நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணர் முத்துக்குமாரு நேற்று (18/12/2021) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் யாழ். இந்துக் கல்லூரி, கொழும்பு விவேகானந்தா கல்லூரி, முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயம் ஆகியவற்றின் முன்னை நாள் கணித ஆசிரியரும் சிறந்த நாடக மற்றும் சாரணிய ஆசிரியரும் ஆவார்.
காலஞ்சென்ற பாலகிருஷ்ணர் இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், நேசமலரின் அன்பு கணவரும், திருமதி அ. நாகேஸ்வரி (UK), திரு பா .வைரவநாதன் (ஓய்வுபெற்ற இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம்), திருமதி ஞா. கௌரி , திரு பா . சிவநாதன் (லண்டன்), காலஞ்சென்ற பா. ஆறுமுகநாதன் , மற்றும் திருமதி பா. உமாதேவி, திரு பா. லோகநாதன் (பொது முகாமையாளர் பனை அபிவிருத்தி சபை), ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற Dr. அமிர்தானந்தா, திருமதி பா. சரஸ்வதி, திரு. ஞான சந்திரன் , Dr. கலாதேவி, திருமதி பாஸ்கரன், திருமதி லோ. கல்பனா, காலஞ்சென்ற சோமசேகரம், திரு விஜயானந்தம், திரு லோகேஸ்வரன், ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல19 நாயன்மார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று(19/12/2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கந்தையா பத்மநாதன்

(ஓய்வுபெற்ற இராணுவ கோப்ரல், SLAMC)



புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், லோட்டஸ் றோட் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட, திரு. கந்தையா பத்மநாதன் (ஓய்வுபெற்ற இராணுவ கோப்ரல், SLAMC) அவர்கள், கடந்த 17.12.2021 அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான, கந்தையா, ஆசைப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும்,
காலஞ்சென்றவர்களான தியாகராசா, கதிரித்தம்பி, அன்னப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிரேமா, சியாமா, சோமா, ரவிச்சந்திரன், சாந்தி ஆகியோரின் பாசமிகுதந்தையும், ஜெயதரன், தனபாலன், விவேகா னந்தன், சில்வி, பாலாஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஸ்டீவன், கெவின், ஜெஸ்லின், வினோத், நிஷாந்த், பிரியன், திவ்வியன், திலக்ஸன், தீபிகா, திசாங்கன், திபாங்கினி, ஷோன், சாமுவேல், ஜெசானா, அபிசானாஆகியோரின்பாசமிகுபேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2021) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணியளவில் இல.10/1, லோட்டஸ்றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல், தகனக்கிரியைகளுக்காக, கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: திலக்ஸன் (பேரன்)
0777904044

தகவல் : குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சிவகாமி சாம்பசிவம்

தோற்றம்
15. 03. 1949

மறைவு
18.12.2021

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகாமி சாம்பசிவம் 18.12.2021 சனிக்கிழமை அன்று இறைவன் அடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவம், கனகம்மாவின் சிரேஷ்ட புத்திரியும் சண்முகலிங்கம், காலஞ்சென்ற கணேசலிங்கம், மகேஸ்வரி, விக்கினேஸ்வரி, நடேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (18.12.2021) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்
தம்பி - நடேசன் சாம்பசிவம்
(அவுஸ்ரேலியா)

+61434718546

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா

**077 334 1281**

## வேலையாட்கள் தேவை

**Village Hotel & Restaurant**
**Valveddithurai**

- Font office
- House Keeping

(NE 17832)(3.6)

**077 077 7775, 077 579 0586**

## கடை வாடகைக்கு

நுணாவில் கிழக்கில் A.9 வீதியில் சாவகச்சேரிக்கு அருகாமையில் இரண்டு கடைத் தொகுதிகள் (1) 528 சதுரஅடி, 2) 400 சதுர அடி ) தனித்தோ அல்லது சேர்த்தோ வாடகைக்கு விடப்படும் (CR 36754)(3.6)

தொடர்பு: **077 756 7503**

## மணமகன் தேவை

1996 யாழிந்து அவிட்டம் Nurse யாழ்ப்பாணம் மணமகள் பதிவு இல : 6784. No Broker Commission, Register Fees Only. www.EQMarriageService.com, Ensured Quality Lanka. Bambalapity. (aco 17688 c) (2.6)

**Call 076 664 9401**

## காணி விற்பனைக்கு

யாழ். காங்கேசன்துறையில் 17.12.09 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு. பலாலி விமான நிலையத்தில் இருந்து 1Km தூரத்தினுள் உள்ளது

**074 014 7422**

## வேலையாட்கள் தேவை

வவுனியா மூன்று முறிப்பு வாகன சுத்தகரிப்பு நிலையத்தில் பணியாற்றுவதற்கு வேலையாட்கள் உடன் தேவை. (CS 00940)(3.6)

**077 739 1221, 077 766 6620**

## ஆங்கில வகுப்பு

தங்கள் பிள்ளைகள் இலகுவாகவும், கூச்சமின்றி ஆங்கிலம் பேசவும் தரம் 6 தொடக்கம் O/L கற்கும் மாணவர்களுக்கும் தொழில் புரிவோருக்கும், ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் தங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (CS 41616)(3.6)

**077 602 8735, 021 2212619**

## மணமகள் தேவை

81ஆம் ஆண்டு பிறந்த லண்டனில் இருக்கும் (PR) சூரியன் செவ்வாய் இவருக்கு படித்த, ஆங்கிலம் எழுத, சரளமாக பேசக் கூடிய பெண் தேவை. (CS 41669)(3.6)

தொடர்பு: **076 564 8457**

## ஒத்துமாறல்

கொழும்பில் அமைச்சு ஒன்றில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிவருபவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் ஒத்துமாற விரும்புகிறார். (CS 868)(3.6)

தொடர்பு: **077 358 5856**

## பனை மரங்கள் விற்பனைக்கு

பாவித்த - நல்ல நிலையிலுள்ள பனை மரங்கள் விற்பனைக்கு உண்டு. (CS 41642)(3.6)

தொடர்பு : **021 205 4218**

## பணிப்பெண் தேவை

கொழும்பில் சிறு பிள்ளைகளுடைய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிய பணிப்பெண் ஒருவர் தேவை. (ACO 17666)(3.6)

**076 666 2313/ 077 360 4023**

## வேலையாட்கள் தேவை, விற்பனைக்கு

யாழ். நகரில் உள்ள Hotel ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.
கட்டில்களும் விற்பனைக்கு உள்ளது

**077 7242427,0777412713**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலைகளை செய்வதற்கு பணிப்பெண் தேவை (சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்)

**076 7644079,0770868634**

## பணிப்பெண் தேவை

மலேசியாவில் வீடு ஒன்றில் வீட்டு வேலை செய்வதற்கு 30 - 45 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் தேவை. (இது ஏஜென்சி இல்லை) (கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.) (CS 41717)(3.6)

தொடர்பு : **076 415 1991**

## பெண் வேலையாள் தேவை

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் உள்ள குமரன் ஸ்ரோருக்கு கணினி தரவு பதிவுனர் மற்றும் கணக்கறிவுள்ள வேலையாள் தேவை.
தகைமை : A/L வணிகப்பிரிவு (CS 41718)(3.6)

**077 229 9566**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1977 இல் சதய நட்சத்திரத்தில் பிறந்த B. Com படித்த அவுஸ்ரேலியாவில் வேலைசெய்யும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. (cr 36756) (2.6)

**077 907 5442**

## பணிப்பெண் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உட்பட்ட பிரதேசத்தில் வீட்டில் தங்கி நின்று பிள்ளை பராமரிப்பதற்கு 35 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.

**070 748 7967**

## பணிப்பெண் தேவை

அளவெட்டியில் வீட்டில் தங்கி நின்று வயோதிப மாதுவை கவனிப்பதற்கு 35 - 45 வயதுக்கு உட்பட்ட உடனடியாக பணிப்பெண் தேவை.

**074 110 3191, 070 115 5966**

## மணமகன் தேவை

1996 யாழிந்து பூராடம் Quantity Surveyor, கனடிய மணமகள் பதிவு இல . 7019. No BrokerCommission, Register Fees Only. www.EQMarriageService.com, Ensured Quality Lanka. Bambalapity (aco 17688 B) (2.6)

**Call 076 664 9401**

## தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள Decon கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபமுள்ள **கனிய அளவையியலாளர்** - Q.S (Autocad தெரிந்தவர் விரும்பத்தக்கது) மற்றும் **அலுவலக உதவியாளர்** (A/L தகைமை) தேவை.

**077 777 0969**

## மணமகன் தேவை

1980 யாழிந்து ஸ்வாதி Doctor யாழ்ப்பாணம் மணமகள் பதிவு இல : 6729. No Broker Commission, Register FeesOnly. www.EQMarriageService.com, Ensured Quality Lanka. Bambalapity. (aco 17688 A) (2.6)

**Call 076 664 9401**

## விற்பனைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் 2பரப்புக் காணியில் வீடு. யாழ். கே.கே.எஸ். வீதியில் 2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு

**077 7232535**

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை

**077 2626944**

## பணிப்பெண் தேவை

பிறந்த குழந்தை ஒன்றை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை

**077 3276502**

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் பிரபல்யமான கால்நடைத்தீவனம் நிறுவனத்தின் வடமாகாண டிஸ்ரிபூட்டருக்கு விற்பனைப் பிரதிநிதி ( Rep ) மற்றும் சேல்ஸ்மன் தேவை.

தொடர்புகளுக்கு: **077 0162810**

## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

SOS சிறுவர் கிராமங்கள் இலங்கை

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 137 சர்வதேச நாடுகளில் 71 வருடங்களாகவும் இலங்கையில் 41 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடங்கள்**

**1. FSP இணைப்பாளர் (Coordinator- Family Strengthening Programme) (பெண் - 40 வயதிற்கு உட்பட்டோர்)**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகவியல் பட்டம் (Degree) அல்லது (Diploma) கற்கை நெறிசான்றிதழினை கொண்டிருப்பதோடு குறைந்தது ஒரு வருட / ஆறு மாத தொழில் சார் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
- சமூகம் சார் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராகவும் சாரதி அனுமதிப்பத்திரத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கில மற்றும் சிங்கள மொழியறிவு கொண்டிருப்பது விரும்பத்தக்கது.

**2. Educator (தங்கியிருந்து வேலை செய்தல் கட்டாயமானது)**

- உயர்தர (A/L) சித்தி, போதியளவு கணனியறிவு, மற்றும் (Diploma or Higher Diploma) கற்கை நெறிச்சான்றிதழ் கொண்டிருப்பதுடன் சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டித்தல் வேண்டும்.
- பாடசாலைகளுடன் நெருங்கிய தொடர்பை பேணக்கூடியவராகவும், பிள்ளைகளின் கல்வி சார் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தி அபிவிருத்தி செய்யக்கூடியவராக இருத்தல் அவசியம்.
- மோட்டார் வாகன (bike) ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

**3. சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர் (Care Taker) - பெண்**

- குடும்ப பொறுப்புகளற்ற பிள்ளைகளுடன் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய 26 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்

இந்நிறுவனத்தின் சேவையாற்ற விரும்புவோர் தாங்கள் விண்ணப்பிக்கும் (பதவி 1 & 2 மட்டும்) பதவியை குறிப்பிட்டு விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 25.12.2021 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references."

தொடர்புகளுக்கு:

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்
இல:219, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம். (CS 41655) (3/6)

தொ.பே: **021-221 1101 / 077- 373 3711**
மின்னஞ்சல்:
jaffna@soscvsrilanka.org

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

விசேட விலைக் கழிவுகள்

இம்மாதம் 16ம் திகதி முதல்

நத்தார் பண்டிகை, மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு

அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் சுகாதார வழி முறைகளுக்கு அமைவாகவும் இந்தியன் செலக்ஷனின் நத்தார் மற்றும் புதுவருட மலிவு விற்பனை நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்து கொள்கின்றோம்.





பட்டுச்சாறிகள் கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள் சிறுவர், சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள் மற்றும் ஆண் பெண் இருபாலாருக்குமான ஆடைத் தெரிவுகள் (cr.36726) (3.6)

**காலம் : 16.12.2021 முதல் 31.12.2021 வரை**

**இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சீனத்தூதுவரின்...

இலங்கைக்கான சீனத்தூதுவர் ட்சீ சென்ஹோங் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு கடந்த சில தினங்களாக பயணம் மேற்கொண்டிருந்தனர். இந்தப் பயணம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கைக்கான எந்தவொரு தூதுவரும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்தையும் பார்வையிட முடியும். அதற்கான உரிமை அவருக்கு உள்ளது. ஆனால், எம்மையும் எமது மக்களையும் பொறுத்த வரையில் சீனத் தூதுவரின் பயணம் முக்கியமானதல்ல.

எம்மைப் பொறுத்தவரையில் சீன நாட்டவரின் அடிப்படைக் கொள்கைகள் என்னவாக உள்ளன என்பதே எமது கேள்வியாகும்.

இலங்கையில் அரசியல் பிரச்சினைகள் பலமடைந்துள்ளன. சீனாவோ அல்லது சீனாவின் தூதுவரோ இனப்பிரச்சினை குறித்து அரசியல் தலைமைகளைச் சந்தித்து அதற்கான தீர்வுகளை முன்வைக்கவில்லை.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் சமத்துவத்தின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும், நியாயத்தின் அடிப்படையிலும் வாழ வேண்டும் என்பது குறித்து சீனத்தரப்பினர் எதனையும் கூறவில்லை.

வடக்கு மாகாணத்துக்கு பயணம் செய்த சீனத் தூதுவரும் அங்கும் அவ்வாறான கருத்துக்களைக் கூறவில்லை.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர்.

சீனத்தூதுவரின் வடக்குக்கான வருகையை நாம் எதிர்க்கவில்லை. அதேவேளை, இந்தப் பயணம் குறிப்பிட்ட ஒரு சில நோக்கங்களுக்காக மட்டுமே அமைந்துள்ளது எனக் கருதுகின்றோம்.

இனப்பிரச்சினை விடயத்தில் சீனாவின் நிலைப்பாடு என்னவிதமாக உள்ளது என்பதே எமக்கு முக்கியம். இந்த விடயத்தில் மக்கள் சிந்தித்து முடிவெடுப்பார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை- என்றார். (ஒ-22)

### கணவன்....

களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

35 வயதுடைய கணவன் மற்றும் 30 வயதுடைய மனைவி இருவருமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது. சமையல் அறையில் நேற்றுக் காலை சமையலுக்கான தயார்ப்படுத்தலில் மனைவி ஈடுபட்டுள்ளார்.

அவர் அடுப்பை மூட்டுவதற்கு மண்ணெண்ணை பயன்படுத்தியுள்ளார். இதன்போது அவர் தீயில் எரியுண்டுள்ளார். அவரைக் காப்பாற்ற கணவன் முயற்சித்துள்ளார். இருவரும் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

உடனடியாக புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஒ-19)

### ரயிலுடன்...

வீதியிலேயே விபத்து நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முழங்காவிலைச் சேர்ந்த பி.பத்மசீலன் (வயது 50) என்ற திருச்சபை ஊழியர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

முறிகண்டியிலிருந்து மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிப் பயணித்த நபர், வீதியில் நின்ற டிப்பர் வாகனத்தை கடந்து ரயில் கடவையை கடக்க முற்பட்டுள்ளார். இதன்போது ரயில் அவர் மீது மோதியுள்ளது. படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-18,113)

### மசகு.....

டைந்திருந்த போதிலும், கடந்த வாரம் அதன் விலை அதிகரித்தது. இந்நிலையில், மீண்டும் மசகு எண்ணெயின் விலை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் தற்போதைய விலை 74 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. (ஒ-இ)

### '13' ஆம்....

நாளாந்த ஒடுக்குமுறைகளையும், எம்மைத் தேசமாகத் திரளாது தடுத்து, உருக்குலைய வைக்கும் செயற்பாடுகளையும் தடுக்க முடியாததுமான ஒரு ஏற்பாடு.

'13' ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் எமது அரசியல் தீர்வு நிலைப்பாடானால் அது ஒற்றையாட்சி வரையறையை ஏற்றதாகி விடும். இதுவரை காலமும், இந்தத் தமிழ்க் கட்சிகளும், மக்கள் அமைப்புகளும், அரசமைப்புத் திருத்தம், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பவற்றுக்காக பகிரங்க வெளியில் வழங்கிய முன்மொழிவுகள் அனைத்தும் தாயகம் -தேசியம் -சுயநிர்ணய உரிமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சமஷ்டி முறைமையை நோக்கியவையாகவே இருக்கின்றன. எனவே '13' ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதானது எமது சமகாலப் பிரச்சினைகளுக்குப் பகுதியளவில் தானும் தீர்வைத் தரும் என்ற தோரணையில் எடுக்கப்படும் திடீர் அரசியல் முன்னெடுப்புக்களை நாம் நேர்மையற்றவையாக கணிக்கின்றோம்.

வெளித்தரப்பு ஒன்றிடம் எமது அரசியல் தீர்வு தொடர்பில் நிலைப்பாடு ஒன்றை வெளிப்படுத்தக் கோரும் போது, நாம் எது எமது மக்களுக்கு உண்மையான தீர்வைக் கொண்டு வரும் எனக் கருதுகின்றோமோ அதனை முன்வைக்க வேண்டுமேயன்றி, நாம் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக எதனை முன்வைப்பதைக் குறித்த வெளித்தரப்பு விரும்பும் என்ற ஊகத்தின் அடிப்படையில் நாம் எமது நிலைப்பாட்டை முன்வைக்கக்கூடாது.

மாகாண சபைகளைக் கைப்பற்றுவதன் மூலம் எமது மக்கள் நோக்கும் அன்றாடப் பிரச்சனைகளுக்கு, அதன் சட்ட வரையறைகளுக்குள் நின்று தீர்வு காண முடியாது.

ஆனால் மக்கள் தரும் ஆணையின் பலத்தைக் கொண்டு மாகாண சபையின் இயலுமைக்குமப்பால், அது உருவாக்கித் தந்துள்ள அரசியல் வெளியைப் பயன்படுத்தி எமக்கு எதிராக நடக்கும் அநியாயங்களை தடுத்து நிறுத்த முயற்சிக்கலாம், முட்டுக்கட்டை போடலாம், அதனையும் தாண்டி சட்டம் தராத வெளியை மக்கள் ஆதரவுடன் உருவாக்கி ஆட்சி அதிகாரத்தை விரிவாக்கி மக்கள் பணியாற்ற முயற்சிக்கலாம். கடந்த காலங்களில், பல்வேறு தேர்தல்களூடாகவும், பல தரப்பினர்களினாலும் முன்னெடுக்கப்பட்ட மக்களுனான கலந்தாய்வுச் செயன்முறைகளினூடாகவும், ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்ட, சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஏற்பாடுகளையே வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் மீள மீளக் கோரி வருகிறார்கள் என்பதனையும், தமிழ் அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் கருத்திற் கொள்ள வேண்டும். எனவே எத்தகைய தீர்வை முன்வைப்பது என்பது உங்கள் முன் உள்ள தெரிவு அல்ல.

நீங்கள் மக்கள் முன் வைத்த விஞ்ஞாபனங்களின் அடிப்படையில் மக்கள் ஏற்கனவே வழங்கிய ஆணையின் பிரகாரம், ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்ட, தாயகம் -தேசியம் -சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வுகளை முன்வைப்பது உங்களின் சனநாயகக் கடப்பாடு என்பதை மீள வலியுறுத்த விரும்புகிறோம் -என்றுள்ளது. (ஒ-5)

### ஏணைக்

கியதில் அசம்பாவிதம் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது. குழந்தை உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டது. இருப்பினும் நேற்றைய தினம் குழந்தை உயிரிழந்துள்ளது. (ஒ-110)

### எரிவாயு....

ளது.

சமையல் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. வீட்டார் உடனடியாக எரிவாயு சிலிண்டரை சமையலறையிலிருந்து அகற்றி வீட்டின் வெளியே கொண்டு சென்றனர். அத்துடன் சமையலறையில் தீயைக் கட்டுப்படுத்தினர். எவருக்கும் பாதிப்பு ஏற்படாதபோதும், சமையலறைப் பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. (ஒ-18)

### கணவன் கொலை....

சாட்டில் மனைவி நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் போராளியான நடராசா தனராஜ் (வயது- 36) கடந்த 9 ஆம் திகதி உயிரிழந்திருந்தார். இவரது சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் சட்ட மருத்துவ அதிகாரியால் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதேவேளை இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி. ஜீவநாயகம் மேற்கொண்டுள்ளார். அத்துடன் இவரது உயிரிழப்புத் தொடர்பில் கிராமத்தவர்களால் வழங்கப்பட்ட தகவல் மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் என்பனவற்றின் அடிப்படையில் நீதிமன்றுக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை [illegible]ன்னெடுத்தனர்.

[illegible]னராஜின் மனைவியிடம் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைவாக, தனக்கு இன்னொருவருடன் தொடர்பு இருப்பதாகவும் அவருடன் இணைந்து கணவனைக் கொலை செய்ததாகவும் வாக்குமூலம் வழங்கியுள்ளார். அதற்கு அமைவாக மற்றைய நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்ட ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார். (ஒ-113)

### உடல் சிதைந்த...

சிறுமியே இவ்வாறு உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். திருகோணமலையில் விடுதியில் தங்கி நின்று கல்வி கற்கும் மேற்படி சிறுமி கடந்த 13ஆம் திகதியே மூங்கிலாறு வந்துள்ளார். இந்த நிலையில் கடந்த 15ஆம் திகதி காணாமல் போயுள்ளார். இந்த நிலையில் அவரது வீட்டுக்கு சற்றுத் தொலைவில் வெற்றுக்காணிக்குள் இருந்து சடலமாக அவர் நேற்று மீட்கப்பட்டார்.

சிறுமியின் உடலில் ஆடைகள் களையப்பட்டுள்ளன. சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுகிறது. ஒரு கை உடலில் இருக்கவில்லை. விலங்குகள் சேதப்படுத்தியிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

இதேவேளை, சிறுமியின் சடலம் காணப்பட்ட அதே பகுதியில் இராணுவத்துடன் இணைந்து ஊர்மக்கள் நேற்றுமுன்தினம் தேடுதல் நடத்திய போது, சடலம் காணப்படவில்லை. இந்த நிலையில் இரவோடு இரவாகவே அந்த இடத்தில் சடலம் கொண்டு வந்து போடப்பட்டிருக்க வேண்டுமென பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சற்றுத் தொலைவிலுள்ள ஆற்றுக்குள் சடலம் இருந்திருக்க வேண்டுமென்றும், அதனாலேயே சடலம் ஊதி காணப்படுவதாகவும் ஊர்மக்கள் தெரிவித்தனர். சடலத்தை மீட்ட பொலிஸார் புதுக்குடி யிருப்பு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு பதில் நீதிவான் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டார். சந்தேகத்தில் சிறுமியின் உறவினரான ஒருவர் பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-10,19,113)

## தேர்த்திருவிழா

தென்மராட்சி, டிசெ.19

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை தீர்த்தத் திருவிழாவும், நாளைமறுதினம் திருவூஞ்சல் துவஜாரோகணமும், ஆலயப் பிரதம குரு தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும்
எமது நிறுவனத்திற்கு இரவு நேர
**கிராபிக் டிசைனர் (Graphics Designer) தேவை.**



(CR 83031)-6

ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன்
**20.12.2021 திங்கட்கிழமை மாலை 05.00 மணிமுதல் 7.00 மணிவரை நேரில் சமுகம்தரவும்.**

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## திடீரென தாழிறங்கியது வீதி

கொடிகாமம், டிசெ. 19

கொடிகாமம் - பருத்தித்துறை பிரதானவீதியில் முள்ளிப்பகுதியை அண்மித்துக் காணப்படும் தென்மராட்சியையும் வடமராட்சியையும் இணைக்கும் பாலத்தின் இரு மருங்கிலுமுள்ள நிலப்பகுதி தாழிறங்கிக் காணப்படுவதால் அந்தப் பகுதியால் செல்பவர்கள் விபத்தைச் சந்திக்கக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதையடுத்து குறித்த பாலத்தின் ஒரு பகுதியால் பயணம் மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அவதானமாகப் பயணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறித்த பாலம் துரிதமாகச் சீர்செய்யப்படாமல் தாழிறக்கம் மோசமானால் குறித்த வீதியூடான போக்குவரத்தில் பெரும் சிக்கல் ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-159)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் புகையிரத வீதியில்
2 பரப்புக் காணியுடன் வீடு
விற்பனைக்குண்டு. (cs 41709) (2.6)

**077 190 9253**

## வாடகைக்கு

புங்கன்குளம் புகையிரத நிலையம். யாழ். மாவட்ட செயலகம் என்பவற்றிற்கு அண்மையாக A9 வீதியிலிருந்து 500m தூரத்தில் வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய விசாலமான வீடு வாடகைக்கு உண்டு நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (CS 41608)(3.6)

தொடர்பு: **077 042 2523**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப்பகுதியில் கணக்கர் வளவு 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
14 அடிபாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம் பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6 மணிவரை விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும் (தரகர் தேவையில்லை)

**தொடர்பு :0778147389**
**0707051655**

## பணியாளர் தேவை

யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கும்
**ஹாட்வெயர்** நிறுவனத்திற்கு
25 - 45 வயது ஆண் / பெண் பணியாளர்கள்தேவை
- கணக்கு லிகிதர் ( கணினி அறிவுடையவர்கள்)
- சிட்டை எழுதுநர்
- விற்பனை பிரதிநிதி

சுயவிபரக் கோவையை அனுப்பிவைக்கவும்
**நாராயண ஹாட்வெயர்**
**92 C,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.** (cr.36763) (2.6)

## பணியாளர் தேவை

யாழ். K.K.S. வீதியில் அமைந்துள்ள
**"லங்கா ரைல்ஸ்"**
**(Lanka Tiles) காட்சி அறைக்கு**
பின்வரும் பணியாளர்கள் தேவை.
- காசாளர் (ஆண் / பெண்) கணினி அறிவுடையவர்கள்
- விற்பனையாளர் (ஆண்/பெண்)

இன்று தொடக்கம் 7 நாள்களுக்குள் தங்களின்
சுயவிபரக் கோவையை மனிதவள முகாமையாளர்
**168, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
என்றும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (cr.36763) (2.6)

## எழுதுவினைஞர் தேவை

யாழ். காங்கேசன்துறையிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணினி அறிவுள்ள க.பொ.த. உயர்தரம் நிறைவுசெய்த. மொழியாற்றல் உள்ள பெண் எழுதுவினைஞர் தேவை. தகுதியும் ஆர்வமும் உடையவர்கள் கீழ்கண்ட மின்னஞ்சலிற்கு தங்கள் சுயவிபரங்களை அனுப்பிவைக்கவும். (CS 41678) (2/6)

E.mail:
cocowindshotel@gmail.com
**076 016 0959**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் காரைநகர் பிரதான வீதி மெயின் றோட்டுடன் 20 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு 4 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். வியாபார நிலையங்கள். களஞ்சிய சாலைகள் அமைக்க உகந்த இடம் யாழ் பஸ்நிலையத்துக்கு 3km தூரம் ஒரு பரப்பின் விலை 3 லட்சம்

**0768909259,0770150353**

## சிறுநீரகம் தேவை

A+ குருதி வகை உடைய
நபருக்கு சிறுநீரகம் தேவை.
**077 822 9982, 076 449 4807**
whatsapp - +447713940798

## Personal English Classes

தனி வகுப்புக்கள் யாழ் நகரில்
Grammar - Spoken Grade - 7, O/L, A/L, Graduates, English Literature G.C.E O/L. 2022, 2023 தொழில் புரிபவர்கள் (CR 36755)(3.6)

**K.Ganesh (BA) 077 766 8725**

## வேலையாள்கள் தேவை

**கிளிநொச்சியில்**
**இயங்கும் பிரபல வர்த்தக**
**நிறுவனத்துக்கு**
**பணியாளர்கள் தேவை.**
1. கணக்காளர் } கணினி அறிவுடையவர்கள்
2. கணக்காய்வாளர் }
3. விற்பனைப்பிரதி நிதி (சிமெந்து/சீற்)
4. நிர்வாக உத்தியோகத்தர்கள் (அரச, தனியார் நிறுவன ஓய்வுபெற்வர்கள்)

Note: கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்கள் மட்டும் தொடர்புகொள்ளவும் (cs 1121(2.6)

**077 772 2305**

## தேவை

பூநகரி பகுதியில் கற்கள் / கட்டட இடிபாடு 250 கியூப் தேவை. மற்றும் கூலியாட்கள். முன் அனுபவமுள்ள சாரதி (Tractor) விரும்பத்தக்கது (CS 41664)(3.6)

தொடர்பு: **077 500 6769**

## தென்னந்தோட்டம் உடனடி விற்பனை

எழுதுமட்டுவாழ் A9 வீதியிலிருந்து 1km தூரத்தில் 453 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (தரகர் தேவையில்லை) (CS 41663)(4-6)

**077 232 0176, 077 239 0780**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு முன்பாக உள்ள குறொஸ் றோட்டில். இரண்டு நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 11 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்பு: **077 607 8888** (CS 41715)(3.6)

## நீர்க்கசிவை தடுப்பதற்கு Water Proofing

மாரி காலத்தில் உங்கள் கட்டடங்களில் ஏற்படும் சகல நீர்க்கசிவுகளையும் நிரந்தரமாக தடுப்பதற்கு உங்கள் நினைவில் இருக்க வேண்டிய ஒரே இடம்

**North and East Engineering**
**55 Stanly Road, Jaffna.**
**077 5244 177, 077 232 3000, 021 222 2363** (cs 41706A) (2.6)

## முதியவர்களை இணைத்துக் கொள்ளல்

நல்லூர் கோவிலுக்கு அண்மையில் அமைந்துள்ள முதியோர் இல்லத்திற்கு புதிதாக முதியவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். (CS 41705)(3.6)

**077 934 9511, 021 435 5082**

## முகாமையாளர் தேவை


கட்டட நிர்மாண நிறுவனமொன்றிற்கு முகாமையாளர் தேவை. தகைமை O/L சித்தியுடையவர். கணினி அறிவுடையவர். மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் (யாழ்ப்பாணத்திற்கு அண்மையை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது) விண்ணபிக்கவும்.

**North and East Engineeing**
(CS 41706)(3.6) **55, stanly Road, Jaffna.** (People Leasing முன்பாக)

# 31ஆம் நாள் அந்தியேட்டி நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 04 . 04 . 1943

மறைவு 22 . 11 . 2021



கடந்த 22.11.2021 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்ப தலைவர்

## சுப்பிரமணியம் பரஞ்சோதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.12.2021) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று 22.12.2021 புதன்கிழமை வீட்டுக்கிருத்திய கிரியைகள் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றறோம்.

எமது தந்தையார் இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் கண்ணீர் பதாகைகள் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்து எம் ஆறாத்துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பருத்தித்துறை வீதி,**
**கொடிகாமம்.** (CS 41578) (3/6)

**குடும்பத்தினர்**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19. 12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper

பக்கங்கள்: 16


சிற்றறிவாளும் நினைவுகளை
சீண்டியழித்துச் செயலை முடுக்கி
தூண்டும் சுடரொளியான
சுதந்திரப் பிழம்பாய்
மூண்டெழுகிறது
நெருப்பு - சு.வில்வரத்தினம்

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 மார்கழி 4 ஞாயிற்றுக்கிழமை (19.12.2021) சிகரம் : 78

## தடுப்பூசி செலுத்தாதவர்கள் மூலம்

# இலங்கை திரிபு உருவாகும் அபாயம்!



நேர்காணல்:
ஆர்.பிரகாஷ்

தடுப்பூசி செலுத்தாதவர்களை கொரோனாத் தொற்று இலகுவில் ஆட்கொள்ளும். இவ்வாறு ஒரு சமூகமே தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாத போது அவர்களை மையப்படுத்தி புதிய திரிபுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட ஒமிக்ரோன் தொற்றும்கூட அந்த வகையானது என்றே கருதப்படுகின்றது. தென்னாபிரிக்காவிலோ அல்லது அதன் அண்மைய இதர ஆபிரிக்கத் தேசங்களிலோ தடுப்பூசிகள் உரிய வகையில் சென்றடையவில்லை. இதனால்தான் ஒமிக்ரோன் ஆபத்தானது என்று அறியப்படுவதற்கான முதன்மைக் காரணம். தடுப்பூசி தொடர்பில் இலங்கை வினைத்திறனுடன் செயற்பட்டாலும் ஒரு தொகுதி மக்கள் இன்னும் ஆர்வம் காட்டாதவர்களாக இருப்பதால் அவர்களை மையப்படுத்தி இலங்கைக்கான திரிபு ஏற்படவும் வாய்ப்புக்கள் உள்ளன. அப்படியான பேராபத்துக்கு நாம் இடம்கொடுக்கக்கூடாது - இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவ கலாநிதி சுப்பிரமணியம் சிவகணேஸ் வழங்கிய நேர்காணல் இது.

## ஒமிக்ரோன் உருவான பின்னணியும் அதுவே

## மருத்துவ நிபுணர் சிவகணேஸ் விளக்கம்

### 3 ஆவது டோஸின் முக்கியத்துவம்

**கே:** *தற்போது இலங்கையில் கொரோனா ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இதற்கு தடுப்பூசிச் செயற்றிட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதே காரணம் என்று சொல்லப்படுகின்றது. தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் 70 வீதமானோர் ஏற்றியுள்ளனர். இந்த நிலையில் தற்போது மூன்றாவது டோஸாக (பூஸ்டர் டோஸ்) பைஸர் தடுப்பூசிகள் ஏற்றப்படத் தொடங்கியுள்ளன. ஆரம்பத்தில் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றினாலேயே போதுமானது என்று சொல்லப்பட்ட நிலையில் இந்த மூன்றாவது தடுப்பூசி அவசியம் எனக் கருதுகிறீர்களா?*

**ப:** கொரோனா என்பது இந்த உலகுக்கு புதியது. அதுபற்றிய ஆய்வுகள் இன்னமும் நிகழ்ந்த படியேதான் இருக்கின்றன. இந்த ஆய்வுகளின் போது நூறு சதவீதம் உறுதியான முடிவுகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே உடனடியாகக் கொரோனாவைத் தடுப்பதற்காக பல்வேறு நாடுகளும் பல தடுப்பூசிகளைத் தயாரித்துள்ளன. இவை எமது நிர்ப்பீடண சக்தியை அதிகரித்து கொரோனாவைத் தடுப்பதற்கான வழிவகைகளை உருவாக்குகின்றன. ஒவ்வொரு தடுப்பூசியின் மூலம் உருவாகும் பிறபொருள் எதிரிகள் சுமார் ஆறுமாதங்கள் வரை தாக்குப்பிடிக்கும். இதன்போது நாம் சுகாதார நடைமுறைகளை சரிவரக் கைக்கொண்டால் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். ஆறு மாதத்துக்குப் பின்னர் மீண்டும் எமது உடலில் நிர்ப்பீடண சக்தியைச் தகர்த்து கொரோனாவின் புதிய திரிபுகள் ஊடுருவவும் வாய்ப்புள்ளது. எனவேதான் மூன்றாவது டோஸ் பற்றி இப்போது அக்கறை கொள்ளப்படுகின்றது. இலங்கையில் மூன்றாவது டோஸ் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு வேகமாக நடைமுறைக்கும் வந்துள்ளது. இந்த மூன்றாவது டோஸ்கூட கொரோனாவை எதிர்த்து எவ்வளவுகாலம் தாக்குப்பிடிக்கும் என்பதும் இதுவரை உறுதியாகத் தெரியாத விடயமே. தடுப்பூசி ஏற்றுவதோடு எப்போதும் அவதானத்தோடு சுகாதார நடைமுறைகளைப் பேணி நடந்தால் கொரோனாவின் தாக்கத்தை வெகுவாகக் குறைக்கலாம்.

### மாற்றுத் தடுப்பூசிகளால் எந்த ஆபத்துமில்லை!

**கே:** *சினோ பார்ம், மொடேனா, அஸ்ட்ரா ஜெனகா, பைஸர் என்று வெவ்வேறு வகையான தடுப்பூசிகள் முதல் இரு டோஸ்களாக ஏற்றப்பட்டிருந்தன. ஆனால், தற்போது மூன்றாவது டோஸாக சகலருக்கும் பைஸர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் முதலில் சினோ பார்ம் போன்ற (பைஸர் தவிர்ந்த) தடுப்பூசியைச் செலுத்திய ஒருவர் தற்போது மூன்றாவது டோஸாகப் பைஸரை ஏற்றலாமா?*

**ப:** ஏற்கனவே நான் சொன்னதைப்போன்று, தடுப்பூசிகள் நமது உடலில் உள்ள பிறபொருள் எதிரிகளை அதிகரிக்கச் செய்கின்றன. அதுவே அவற்றின் பணி. இந்த வகையில் ஏனைய தடுப்பூசிகளை விடவும் பைஸர் வீரியம் மிக்கது என்று பல ஆய்வு முடிவுகள் சொல்லுகின்றன. பைஸர் தடுப்பூசிகளைச் செலுத்தினால் உடற்பாதுகாப்பும் அதிகம் என்று கருதப்படுகின்றது. அதனாலேயே சிறுவர்களுக்கும் பைஸர் தடுப்பூசியைச் செலுத்தச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இளையோரும் வெளிநாடு செல்ல விரும்புவோரும் பைஸரையே அதிகம் விரும்புகின்றனர். இந்த நிலையில் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது முதலில் நீங்கள் சினோபார்மோ அல்லது அஸ்ட்ரா செனேகாவோ அல்லது மொடேனாவோ போட்டிருந்தாலும்கூட மூன்றாவது டோஸாகப் பைஸரைச் செலுத்துவதால் எந்தப் பாதிப்பும் உங்களுக்கு ஏற்படாது. மாறாகப் பாதுகாப்பு அதிகரிக்கும்.

> **ஒவ்வொரு தடுப்பூசியின் மூலம் உருவாகும் பிறபொருள் எதிரிகள் சுமார் ஆறு மாதங்கள் வரை தாக்குப்பிடிக்கும். இதன்போது நாம் சுகாதார நடைமுறைகளை சரிவரக் கைக் கொண்டால் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவர முடியும்.**

**கே:** *முதலில் இரண்டு தடுப்பூசிகளை ஏற்றினால் போதும் என்றார்கள். இப்போது மூன்றாவது தடுப்பூசி ஏற்ற வேண்டும் என்கிறார்கள். சில வேளைகளில் இந்தத் தடுப்பூசிகளின் எண்ணிக்கை காலப்போக்கில் இன்னும் ஏறுவரிசையிலும் செல்லக்கூடும். இப்படி குறிப்பிட்ட அளவை விட மேலதிகமாக தடுப்பூசிகளை செலுத்திக் கொள்வதால் பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படாதா?*


**ப:** தடுப்பூசிகளால் பின்விளைவுகள் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பங்கள் குறைவு. எனினும் தடுப்பூசிகளைப் போட்டவுடன் பாரதூரமான நோய்கள் இருப்போருக்கு அல்லது ஒவ்வாமை இருப்போருக்கு அவை சிலவேளைகளில் அதிகரிக்கலாம். ஆனால், உரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டால் பாரதூரமான நோய் உள்ளவர்களுக்குக்கூட எந்த விளைவுகளும் ஏற்படாது.

### தடுப்பூசிகள் மட்டுமே திரிபுகளுக்குத் தீர்வு

**கே:** *தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்படும் போது இல்லாத பல திரிபுகள் இப்போது தோன்றியுள்ளன. டெல்டாவில் இருந்து ஒமிக்ரோன் வரை திரிபுகளின் எண்ணிக்கை*

14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்ச்சனைத்தட்டு இராஜதந்திரங்கள்

நிலாந்தன்

கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் தலைமையிலான ஒரு குழு கடந்த 15 ஆம் திகதி புதன் கிழமை வடக்குக்கு வருகை தந்தது. அவர்கள் எங்கே போனார்கள்? யாரைக் கண்டார்கள்? போன்ற விவரங்கள் ஏற்கனவே செய்திகளாக வந்து விட்டன. இந்தச்செய்திகளுக்கு அப்பால் இதுபோன்ற விஜயங்களின் ராஜதந்திர இலக்குகளை (diplomatics objectives) உய்த்துணரும் விதத்தில் அண்மைக்காலச் சம்பவங்கள் சிலவற்றைத் தொகுத்துக் காட்டுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமது வருகை ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்று என்றும் பெருந்தொற்று நோய் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது என்றும் சீனத் தூதுவர் கூறியுள்ளார். எனினும் அவர் வடக்குக்கு வருகைதந்த காலகட்டம் எதுவென்று பார்த்தால் அது பின்வரும் விவகாரங்களின் தொகுப்பாகக் காட்சி தருகிறது.

முதலாவது , தமிழக மீனவர்களால் ஈழத்தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுவதாக கூறி ,அது தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள், உயர்மட்டச் சந்திப்புகள் நடந்துகொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. குறிப்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமது மீனவர்களுக்கு ஆதரவாக கடல்வழிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்த சில கிழமைகளின் பின் சீனத்தூதரகக் குழு வடக்குக்கு வந்திருக்கிறது. இங்கே அவர்கள் மீனவர்களுக்கு ஆறு மில்லியன் ரூபா பெறுமதியான வலைகளையும், நிவாரணப் பொதிகளையும் வழங்கியிருக்கிறார்கள். அதாவது இந்திய மீனவர்களால் பாதிக்கப்படும் ஈழத்தமிழ் மீனவர்களுக்கு சீனா நிவாரணம் வழங்குகிறது. இவ்வாறு வடபகுதி மீனவர்களுக்கு சீனா நிவாரணம் வழங்குவது என்பது இதுதான் முதல் தடவை.

இரண்டாவது விவகாரம், யாழ்ப்பாணத்தில் மூன்று தீவுகளில் சீனா நிர்மாணிக்கத் திட்டமிட்டிருக்கும் மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டம் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள். இம்மூன்று தீவுகளிலும் சீனா மின்சக்தி திட்டங்களை நிர்மாணிக்குமாக இருந்தால் அது இந்தியாவின் தெற்கு மூலையில் இருந்து கிட்டத்தட்ட 50 கிலோ மீற்றர் தூதரத்துக்கு சீனா வந்துவிட்டதைக் குறிக்கும். அதுகுறித்து அரசியல் விமர்சகர்களும் குறிப்பாக தமிழக யூடியூப்பர்களும் அதிகமாக விவாதித்துக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் இந்தியா இரண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்ததாக செய்திகள் வெளிவந்தன. முதலாவது தூத்துக்குடி துறைமுகத்தில் ஒரு நீர்மூழ்கி வெளிப்படையாகக் காணப்பட்டது. இரண்டாவதாக இராமேஸ்வரம் கடற்பரப்பிலும் நெடுந்தீவு வான் பரப்பிலும் இந்தியாவின் மிராஜ் ரக போர் விமானங்கள் தாழப் பறந்ததாக ஒரு செய்தி.

இவ்விரண்டு செய்திகளின் பின்னணியிலும் இம்மாதம் முதலாம் திகதி சீனா மேற்படி மின்சக்தி திட்டங்களில் இருந்து பின்வாங்கியிருப்பதாக ஒரு ருவிற்றர் செய்தி கிடைத்தது. மூன்றாவது தரப்பு ஒன்றின் பாதுகாப்பு கரிசனைகள் காரணமாக அத்திட்டங்கள் நிறுத்தப்படுவதாக சீனத் தூதரகம் அந்த ருவிற்றர் குறிப்பில் தெரிவித்திருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சீனத் தூதுவர் அது ஒரு போலிச் செய்தி என்று மறுத்திருக்கிறார். தங்களது திட்டத்தை கைவிடவில்லை என்றும் சொல்லியிருக்கிறார். எனினும் அவர் யாழ்ப்பாணத்தில் இருந்த காலகட்டத்தில் வெளிவந்த மற்றொரு செய்தியில் இலங்கைத் தீவின் பாதுகாப்புத்துறை செயலர் தெரிவித்த ஒரு கருத்துப்படி அந்த மின்சக்தி திட்டங்கள் தொடர்பில் முடிவுகள் இறுதியாக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அந்தமின்சக்தித் திட்டங்கள் தொடர்பான செய்திகள் முன்பின் முரணாக வெளிவருவது என்பது அது ஒரு சர்ச்சையாக தொடர்ந்தும் இருப்பதைத்தான் காட்டுகிறது.

மூன்றாவது விவகாரம், தமிழ்மக்களின் உள்வீட்டுப் பிரச்சினை. ரெலோ இயக்கம் 13ஆவது திருத்தத்தை ஒரு கொழுக்கியாக பயன்படுத்தி இந்தியாவை உள்ளே கொண்டு வரவேண்டும் என்று ஒரு முயற்சியை முன்னெடுக்கின்றது. ஆனால் தமிழரசுக் கட்சி அதை கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையிலும் பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கவில்லை. கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான சுமந்திரன் அமெரிக்காவை நோக்கிப் போனார். அமெரிக்காவை கையாள்வதன் மூலம் இந்தியாவைக் கையாளலாம் என்று அவர் நம்புகிறாரோ தெரியவில்லை. அதேசமயம் ரெலோவின் ஒருங்கிணைப்பு முயற்சிகள் நடந்து கொண்டிருந்த அதே காலப்பகுதியில் சீனத் தூதரகம் கூட்டமைப்பைச் சந்திக்க விரும்பியதாக ஒரு தகவல் வெளிவந்தது. ஆனால் அதை சம்பந்தர் மறுத்துவிட்டாரெனத் தெரிகிறது. என்ன காரணத்தை கூறி எப்படி மறுத்தார் என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும். கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருக்கு அந்தக் காரணம் தெரியாது. அதுபோலவே சுமந்திரன் அமெரிக்காவில் இருந்து திரும்பிய கையோடு புதுடில்லி , கூட்டமைப்பை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தது. ஆனால் சம்பந்தர் அந்தச்சந்திப்பையும் ஒத்தி வைத்திருக்கிறார். இதையும் என்ன காரணத்துக்காக ஒத்தி வைத்தார் என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும்.


இவ்வாறாக சீனத் தூதரகத்தின் அழைப்பை கூட்டமைப்பு கௌரவிக்காத ஒரு பின்னணியில், புதுடில்லியின் அழைப்பை தமிழரசுக்கட்சி கௌரவிக்காத ஒரு பின்னணியில் சீனத் தூதுவர் வடக்குக்கு வருகை தந்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களோடு பேசும் போது "இந்தியாவும் சீனாவும் சிறந்த அயலவர்கள்: சிறந்த நண்பர்கள் ; சிறந்த பங்காளிகள்" என்று கூறியிருக்கிறார். அவர் ஒரு இராஜதந்திரி. அப்படித்தான் கூறுவார். ராஜதந்திரிகள் கூறுவதை ஒன்றில் வார்த்தைகளுக்கு இடையில் இருக்கும் அர்த்தங்களுக்கூடாக விளங்கிக்கொள்ள வேண்டும். அல்லது அவர்கள் வெளிப்படையாகக் கூறுவதை தலைகீழாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

அவர் நல்லூரில் அதாவது ஈழத் தமிழர்களின் பண்பாட்டுத் தலைநகரம் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணத்தின் நடுத்தர வர்க்கச் சைவர்களின் முக்கிய கோவில்களில் ஒன்றாகிய நல்லூரில் வெறும் மேலோடு அர்ச்சனைத் தட்டை கையில் ஏந்தியபடி காட்சி தருவதும் ஒரு ராஜ்ய நகர்வுதான். சீனத் தூதுவர் மட்டுமல்ல யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இராணுவத் தளபதி உட்பட வேறுபலரும் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு அதை ஓர் இலகுவான பண்பாட்டு ராஜ்ய நகர்வாக கருதுகிறார்களோ தெரியவில்லை.

எதுவாயினும் சீனா நிவாரணப் பொதியுடன் வடக்குக்கு வந்திருக்கிறது. நிவாரணத்தோடு வரும் ஒரு நாட்டை தமிழ் மக்கள் நிராகரிக்கத் தேவையில்லை. அதேசமயம் அந்த நிவாரண அரசியலுக்குப் பின்னால் இருக்கும் ராஜதந்திர இலக்குகளை குறித்து தமிழ்மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். அந்த ராஜ்ய நகர்வு ஒரு விடயத்தை உணர்த்துகிறது. சீனா தமிழ் மக்களை ஏதோ ஒரு விதத்தில் அணுக முயற்சிக்கிறது என்பதே அது.

ஏற்கனவே சுமந்திரனின் தூதுக்குழு அமெரிக்காவுக்குச் சென்று திரும்பி இருக்கிறது. இந்தியா கூட்டமைப்பை டெல்லிக்கு வருமாறு கேட்டிருக்கிறது. இப்பொழுது சீனா யாழ்ப்பாணத்துக்கு நிவாரணத்தோடு வந்திருக்கிறது. இவை தமிழ் மக்களின் பேர வாய்ப்புகள் உயர்வதை காட்டுகின்றனவா? ஏனெனில் இலங்கைத் தீவைக் கையாள முற்படும் எல்லாப் பேரரசுகளும் கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத்தான் கையாண்டு வருகின்றன. அரசுக்கும் ,அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவுக்கூடாக அவை கொழும்பிலுள்ள அரசைத்தான் கையாள்வதுண்டு. கொழும்பைக் கையாள முடியாத போது தமிழ் மக்களைக் கையாண்டு அதன்மூலம் கொழும்பை வழிக்குக் கொண்டுவர முயற்சிப்பார்கள். கடந்த சுமார் நான்கு தசாப்தங்களுக்கு மேலான இனப்பிரச்சினையின் அரசியல் அப்படித்தான் காணப்படுகிறது.





சீனா, ராஜபக்சக்களிடம் பெற்ற அனுகூலம் எனப்படுவதும் ஒருவிதத்தில் இனப்பிரச்சினையின் மறைமுக விளைவுதான். கடந்த ஐ.நா. தீர்மானத்தின் போது சீனா திட்டவட்டமாக இலங்கை அரசாங்கத்தின் பக்கம் நின்றது. அது மட்டுமல்ல, அரசாங்கத்துக்கு எதிரான தீர்மானத்தின் கடுமையைக் குறைப்பதற்கும் சீனா பாடுபட்டது. கடந்த மார்ச் மாத ஐ.நா. கூட்டத் தொடருக்கு சில மாதங்களுக்கு முன்னரே கொழும்புக்கு வருகை தந்த சீனப்பிரதானிகள் ஐ.நா.வில் சீனா, அரசாங்கத்தின் பக்கம் நிற்கும் என்பதனை துலக்கமாகத் தெரிவித்திருந்தார்கள்.

எனவே இன்றுவரையிலுமான சீன அணுகுமுறைகளை தொகுத்துப்பார்த்தால் சீனா இனப்பிரச்சினையை சாதகமாக பயன்படுத்தி இந்தச்சிறிய தீவில் தனக்கு வேண்டியவற்றை பெற்றிருக்கிறது. ஆனால் இந்த ராஜ்ய அணுகுமுறையில் சீனா என்றைக்குமே வெளிப்படையாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளின் பக்கம் நின்றதில்லை.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களோடு கதைக்கும்பொழுது சீனத் தூதுவர் இனப்பிரச்சினை நாட்டின் உள்நாட்டு விவகாரம் என்று கூறியுள்ளார். ஆனால் அந்த உள்நாட்டு விவகாரத்துக்கு சீனா ஆயுதங்களை வழங்கியது. இராஜதந்திர உதவிகளை வழங்கியது. தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது. 2009 க்குப்பின்னிருந்து சீனா ஐ.நா.வில் அரசாங்கத்தின் பக்கமே நிற்கிறது. எனவே இனப்பிரச்சினையில் சீனா திட்டவட்டமாக ஒரு பக்கம்தான் நிற்கிறது. நிச்சயமாக தமிழ் மக்களின் பக்கம் நிற்கவில்லை.

தமிழ் மக்களை ஒரு கருவியாகக் கையாள வேண்டிய தேவை சீனாவுக்கு ஏற்படவில்லை. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டாலும் தமிழ் மக்களை நெருங்கி வந்து கையாளத் தேவையான பண்பாட்டு இணைப்போ, மொழிப் பிணைப்போ, புவியியல் அருகாமையோ சீனாவுக்கு இல்லை. மேலும் மேற்கு நாடுகளில் பலமடைந்து காணப்படும் புலம்பெயர் தமிழ் சமூகம் என்ற காரணியும் சீனாவில் இல்லை. எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் தமிழ் மக்களைக் கையாள வேண்டிய தேவையும் சீனாவுக்கு குறைவு. கையாளத் தேவையான வாய்ப்புகளும் சீனாவுக்கு குறைவு. அதேசமயம் இனப் பிரச்சினையின் காரணமாக சீனாவை நோக்கித் திரும்பிய ராஜபக்சக்களை சீனா தனது வியூகத்தின் பங்காளிகள் ஆக்கிக்கொண்டது என்பதே சரி.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் இந்தியாவை நம்பத் தயாரற்ற தமிழ் விமர்சகர்கள் சிலர் சீனாவையும் தமிழர்கள் ஒரு பேர வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்று எழுதுவதுண்டு. எனினும், கடந்த 11 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் தரப்பில் இருந்து யாரும் சீனாவை அவ்வாறு அணுகுவதற்கு எத்தனிக்கவில்லை.

இப்பொழுது சீனத்தூதுவர் நல்லூரில் வேட்டி கட்டிக் கொண்டு வெறும் மேலோடு அர்ச்சனைத் தட்டுடன் வந்து நிற்கிறார். இந்தப் பண்பாட்டு தோற்றம் மட்டும் தமிழ் மக்களின் மனங்களை வெல்லப் போதாது. ஏனெனில் மாவோ சேதுங் கூறியதுபோல அரசியல் அதிகாரம் எனப்படுவது சீனா. இலங்கை அரசுக்கு வழங்கிய துப்பாக்கி முனையில் இருந்தே பிறக்கிறது. நிச்சயமாக அர்ச்சனைத் தட்டுக்களிலிருந்து அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமக்கொரு சினிமாவும்...!

ஈழசினிமா



ஔண்யன்

இந்தச் சொல்லாடலை கடந்த சில வருடங்களாக அடிக்கடி கேட்கமுடிகின்றது. கமெராவைத் தூக்கிக் கொண்டு, குறும்படமோ, முழுநீளத் திரைப்படமோ எடுக்க வருகின்ற எல்லோருமே சொல்லிவைத்தாற் போல "ஈழசினிமாவுக்கான அடையாளத்தை உருவாக்கப்போகின்றோம்" என்றுதான் உச்சரிக்கிறார்கள். ஆனால் அப்படியான கனவோடு பயணப்படுகின்றவர்களால் இதுவரை சொல்லிக் கொள்ளும்படியான அடையாளமெதுவும் தனித்துவமாக ஈழசினிமாவுக்காக உருவாக்கப்படவில்லை என்பதே கசப்பான உண்மை. ஆங்காங்கே உதிரிகளாக சில முயற்சிகள் இடம்பெற்றாலும், அவற்றின் தொடர்ச்சியின்மை, மக்கள் செல்வாக்கின்மை, பொருளாதார நெருக்கடிகள், தொழினுட்ப வசதிகளைப் பெறுவதில் உள்ள நெருக்கடிகள் என்ற பல்வேறு காரணிகளால் அவையும் அமுங்கிப் போய்விடுகின்றன. அதைவிட வெகுஜனப்பரப்பில் ஈழசினிமா பற்றிய அறிதல்களும், புரிதல்களும் மிகக் குறைவான அடைவுமட்டத்தையே கொண்டிருக்கின்றன.

ஈழத்தில் குறும்படப் படைப்பாளிகள் பலரும் விருதுக்காக படமெடுப்பவர்களாகவே உள்ளனர். விருதுக்கு அனுப்பப்படும் படங்கள் அதுவரை வேறெங்கும் (யூரியூப் அல்லது இறுவட்டு) வெளியாகியிருக்கக் கூடாது என்பது முக்கியமான நிபந்தனையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. எனவே தமது திரைப்படத்தை பொதுவெளிக்கு காட்சிப்படுத்தாமல் பொத்திப் பொத்தி வைக்கிறார்கள் பல படைப்பாளிகள். முட்டையிட்டு ஓய்ந்த கோழியை இறைச்சிக்கு கொடுப்பதுபோல, இனிமேல் விருதுக்கு அனுப்பமுடியாது என்கிற நிலைவரும்போதுதான் அந்தப் படத்தை மக்கள் பார்வைக்காக முன்வைக்கிறார்கள். இப்படி ஆறிய கஞ்சிகளாக வரும் பெரும்பாலான படங்களை பார்வையாளர்களைக் கவரத் தவறுகின்றன.

இன்னும் சில படைப்பாளிகள் தனியே சமூகவலைத்தள உலகத்தில் மட்டும் வாழ்கின்றனர். தமது படம் தொடர்பான அத்தனை விடயங்களையும் ஒன்றுகூடத் தவறவிடமால் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் அதை விளம்பரப்படுத்த முனைவார்கள். இருப்பினும் அவை ஒருகட்டத்தில் எரிச்சலூட்டும் விடயமாக மாறி, குறித்த படம் பற்றிய தகவல்களைப் பார்க்காமலே கடந்து போகும் மனோநிலை சமூகவலைத்தளவாசிகளுக்கு வாய்த்துவிடும். இன்னும் சிலர் 'இந்தப் படத்துக்காக இப்படிக் கஷ்டப்பட்டோம்; அப்படி உழைத்தோம், ஓடாகத் தேய்ந்தோம், மாடாக ஓய்ந்தோம்' என யாசகமனோநிலையோடு, அனுதாபத்தை முதலீடாக்கி தம்மை நோக்கி மக்களை இழுக்க முனைவதும் குறிப்பிட்ட கட்டத்துக்கு அப்பால் செல்லுபடியற்றதாகி விடுகின்றது.

இப்படியான முயற்சிகளால், மீண்டும் மீண்டும் எல்லாவற்றையும் முதலில் இருந்தே ஆரம்பிக்கவேண்டிய கட்டாயம் ஈழசினிமாப் படைப்பாளிகளுக்கு உண்டு. ஈழசினிமா என்ற எண்ணக்கருவை மனதிற்கொண்டு பலர் அர்ப்பணிப்போடு பயணித்தாலும், தமது பாதை தொடர்பான தெளிவான வரைபடம் அவர்களிடத்தில் இருப்பதில்லை. குறிப்பாக வெகுஜனத்தளத்தில் பரந்துபட்ட ரசிகப்புலத்தை உருவாக்குவதென்பது அவர்களுக்கு சாத்தியமற்றதாக இருந்தது. ஆயினும் ஒரு சிலர் ஈழசினிமா என்ற லேபிளை ஒட்டிக்கொண்டு, தென்னிந்திய சினிமாத்தனக் கதைகளையே தமது படைப்புகளாக்களின் உள்ளீடுகளாக்கினர். உள்ளடக்க விடயத்தில் மினக்கெடாவிட்டாலும், தமது படைப்புக்களை வெகுஜனத் தளத்தில் பரவலாக நிலைநிறுத்தும் உத்தி அவர்களுக்கு தெரிந்திருந்தது. யூரிப்பின் எழுச்சி இத்தகையவர்களை இன்னும் ஊக்குவித்தது. ஆனாலும் மின்மினிகளைப்போல இவர்களது செயற்பாடும் கொஞ்சக் காலத்திலேயே தோன்றி மறைவதே வழக்கமானது.




> சிவராஜின் இயக்கத்தில் வெளியாகவுள்ள 'புத்தி கெட்ட மனிதரெல்லாம்' முழுநீளத் திரைப்படம், புதியதொரு பாய்ச்சலை ஈழ சினிமாவுலகில் நிகழ்த்துவதாகப் படுகின்றது.






இந்தநிலையில் சிவராஜின் இயக்கத்தில் வெளியாகவுள்ள 'புத்தி கெட்ட மனிதரெல்லாம்' முழுநீளத் திரைப்படம், புதியதொரு பாய்ச்சலை ஈழசினிமாவுலகில் நிகழ்த்து வதாகப் படுகின்றது. இம்மாதம் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வெளியாகவுள்ள இந்தத் திரைப்படத்தின் சந்தைப்படுத்தல் உத்திகள் ஆர்வத்தை தூண்டுவனவாகவும், ஆரோக்கியமானதாகவும் தென்படுகின்றன. ஏற்கனவே தனது குறும்படங்களை எங்கள் நிலத்தின் கதையை எல்லாத்தரப்பினரும் ரசிக்கத்தக்கவகையில் படமாக்கிய அனுபவம் சிவராஜுக்கு உண்டு. அந்த அனுபவம் அவரது முதலாவது முழுநீளத் திரைப்படமான 'புத்தி கெட்ட மனிதரெல்லாம்' படத்துக்கும் கைகொடுத்திருக்கும். குறும்படங்களில் நிகழ்த்திய அதே மாயாஜாலத் திரைமொழியை இதிலும் தொடர்ந்திருந்தால், நிச்சயமாக எம்மவர்களுக்கு ஒரு காட்சிப்புல விருந்து கிடைக்கும்.

எங்களின் கதையை சினிமாவாக்கியதோடு, அதனை ஒரு வெகுஜனத் தளத்தினுள் வெற்றிகரமான வணிகப்பண்டமாக்கவும் முற்படு கின்றது 'புத்தி கெட்ட மனிதரெல்லாம்' படக்குழு. அதற்கரக பெர்ஸ்ட் லுக், டீஸர், ட்ரெய்லர் என்று ரசிகப்புல ஆவலையும், எதிர்பார்ப்பையும் தூண்டி, ஈழசினிமாவைக் காண்பதற்காக ஒரு குறிப்பிட்டளவானோரை திரையரங்குகளை நோக்கி நகர்வதற்கான எத்தனத்தை உண்டாக்கியுள்ளனர். அதுதவிர , குறித்த படத்தின் புகைப்படங்கள், விளம்பரங்கள் பொறிக்கப்பட்ட வாகனம் ஒன்றை ஊர் ஊராகக் கொண்டு சென்று , தம் படம் பற்றிய கதையாடல்களை உருவாக்கி வருகின்றனர். மக்கள்ளோடு மக்களாக இறங்கிச் சென்று தமது படம் பற்றிய அறிதல்களை உண்டுபண்ணுகின்றனர். விளம்பர வாகனம் சென்ற பின்னும் அவர்கள் விட்டுச் சென்ற கதைகள், ஊரவர்களின் வாய்மொழியாக அந்தச் சுற்றுபுறமெங்கும் நகர்ந்து பரவுகின்றன. ஏறக்குறைய யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் வசிக்கும் பாதிப்பேருக்காவது இப்படி ஒரு படம் வரப்போகும் சங்கதி தெரிந்திருக்கிறது. 'எங்கட பெடியள் அப்பிடி என்னதான் எடுத்து வைச்சிருக்கிறாங்கள் எண்டு ஒருக்கா பாப்பம்' என்று திரையரங்கை நோக்கி படையெடுக்க வைக்க இந்த பரவுகை போதுமே. அப்படி ஆர்வத்தோடு வரும் மக்களின் எதிர்பார்ப்பை , படம் ஏமாற்றாதிருந்தால், அடுத்த படத்துக்கு இதைவிடக் கூட்டம் அதிகமாகவேவரும். எங்கள்திரைப் படங்கள் மீதான நேசிப்பு பெருகும். உண்மையாகவே ஈழசினிமாவுக்கான அடையாளம் நிலைகொள்ளும்.

> முட்டையிட்டு ஓய்ந்த கோழியை இறைச்சிக்கு கொடுப்பது போல,இனிமேல் விருதுக்கு அனுப்பமுடியாது என்கிற நிலைவரும்போது தான் அந்தப் படத்தை மக்கள் பார்வைக்காக முன்வைக்கிறார்கள். இப்படி ஆறியகஞ்சிகளாக வரும் பெரும்பாலான படங்களை பார்வையாளர்களைக் கவரத் தவறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1505–1948 வரை

# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

கத்தோலிக்கர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தச் சட்டங்கள் 1715 இல் மேலும் கடுமையாக்கப்பட்டன. கத்தோலிக்கர்கள் பகிரங்கமாகவோ தனிப்பட்ட முறையிலோ ஒன்று கூடுவது தடை செய்யப்பட்டது. கத்தோலிக்கத் திருமணங்களுக்கும் ஒன்றுகூடல்களுக்கும் பெருந்தொகைப்பணம் தண்டமாக அறவிடப்பட்டது. கத்தோலிக்கப் பாதிரிமாரால் நிறைவேற்றப்படும் திருமணங்கள் சட்டபூர்வமற்றவை எனவும் ஒல்லாந்த அரசு பிரகடனம் செய்தது. வெள்ளாள கத்தோலிக்கர்களுக்கு அவர்களது நிலங்களில் விவசாயம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்கர்கள் கடும் துன்பங்களை அனுபவித்து வந்தனர். கத்தோலிக்கர்களை கிறிஸ்தவர் அல்லாதவர்கள் (Heathens)என்றே ஒல்லாந்தர் கருதினர். பிள்ளை பெறும் கத்தோலிக்கர்கள் புரட் டஸ்தாந்து தேவாலயங்களில் அடிமைகளாக நியமிக்கப்பட்டனர்.


**1726** - யாழ்ப்பாணத்தில் வெள்ளப்பெருக்கும் பஞ்சமும் ஏற்பட்டது.

**1732** - Goulterus Woulterus என்பவர் யாழ்ப்பாணத்தின் ஒல்லாந்தத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

**1736** - ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் அச்சுக்கூடமொன்றை நிறுவி கிறிஸ்தவ நூல்கள் , துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை தமிழில் அச்சிட்டு மக்களுக்கு விநியோகித்தனர்.

### தோம்பு

தோம்பு என்ற சொல் போர்த்துக்கேயர் காலத்தில் அரசியல் யாப்பைக்குறித்தது. போர்த்துக்கேயர் விதித்த வரிகள், தோம்பு என்ற பெயரால் அழைக்கப்பட்டன. ஒல்லாந்தர் காலத்தில் தோம்பு என்ற சொல் காணி உறுதிகளைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. ஒல்லாந்தர் காலத்துக்கு முன் பரம்பரையாக வாய்மொழி மூலமே காணி உரித்து பேணப்பட்டு வந்தது. 1740 ஆம் ஆண்டு தமது ஆளுகைக்குட்பட்ட 32 கோயிற்பற்றுகளிலும் நில அளவை செய்து காணி உரிமையாளரின் பெயர் சாதி ,கோத்திரம் என்பவற்றையும் குறிப்பிட்டு தோம்புகளை எழுதினர். எழுதப்பட்ட தோம்புகள் அந்தந்தப்பகுதி உடையாரிடமும் கச்சேரியிலும் பேணப்பட்டன. ஒருவர் தனது காணியை விற்பதற்கோ,அன்பளிப்புச் செய்வதற்கோ,ஈடு வைப்பதற்கோ தோம்பு அவசியமாகக் கருதப்பட்டது. பதினைந்து வருடங்களுக்கொரு முறை தோம்புகள் திருத்தியமைக்கப்பட்டன.



**1745** - ஒல்லாந்தரால் முத்துக்குளிப்பு மேற்கொள்ளப்பட்டது. 600 சுழியோடிகள் சிலாபம்,அரிப்பு பகுதிகளில் 36 நாட்கள் முத்துப்படுக்கைகளை ஆராய்ந்தனர். (1873 ஆம் ஆண்டு நுவரகளவியா என அழைக்கப்பட்ட அனுராதபுர பிரதேசம் தனி மாவட்டமாக பிரகடனம் செய்யப்படும் வரை சிலாபம், கற்பிட்டி யாவும் யாழ்ப்பாண நிர்வாகத்தின் கீழேயே இருந்தன.)1746 ஆம் ஆண்டு உள்ளூர்வாசிகளுக்கு முத்துக்குளிப்புக்கான குத்தகை அனுமதி வழங்கப்பட்டது. இதன் மூலம் ஒல்லாந்த அரசுக்கு 4766 ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது.( ஒல்லாந்தரின் ஆவணங்களை பிரிட்டிஷார் ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர். அதன் காரணமாகவே முத்துக்குளிப்பு மூலம் கிடைத்த வருமானத்தையும் ஸ்டேர்லிங் பவுணில் எழுதி வைத்துள்ளனர்.)

**1747** ஆம் ஆண்டு முத்துக்குளிப்பு மூலம் 2140 ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது.

**1748 பெப்ரவரி 20** ஜக்கோப் டீ ஜோங் (Jacob De Jong) யாழ்ப்பாணத்தின் ஒல்லாந்தத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

**1749** - வேதாகமம் புதிய ஏற்பாடு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.பிலிப் டீ மெல்கோ பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார். டச்சு அரச வெளியீடாக இது வெளியிடப்பட்டது.

**1751** - கத்தோலிக்கர்களுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட கடுமையான சட்டங்கள் மேலும் கடுமையாக்கப்பட்டன.

**1753** - முத்துக்குளிப்பு மூலம் 6360 ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது.

**1754** - தோம்பு மீளாய்வு செய்யப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் நடைபெற்ற இறுதி மீளாய்வு இது. முத்துக்குளிப்பு மூலம் 1469 ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது.

**1756** - ஒல்லாந்தத் தளபதியின் மருத்துவரான தெல்லிப்பழை கந்தப்ப இலங்கைகாவல முதலியார் காலமானதும் அவரது இடத்துக்கு அவரது மகன் பிலிப் டீ குமரவேலன் முதலியார் நியமிக்கப்பட்டார்.இவரது தேவைகளைக் கவனிப்பதற்கென நான்கு அடிமைகளும் ஒல்லாந்தரால் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒல்லாந்தரால் நியமிக்கப்பட்ட முதலாவது உள்ளூர் மருத்துவர் இவரே.


### யானை வியாபாரம்

வண்ணார்பண்ணையைச்சேர்ந்த டொ ன் பிலிப் சிற்றம்பல முதலியார் நீதிபரிபாலன அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவரைப்போல் பன்னிரண்டு பேர் யாழ்ப்பாணம் முழுவதும் நியமிக்கப்பட்டனர். யானை வியாபாரத்தை ஒல்லாந்தருக்கு வருமானம் ஈட்டி க் கொடுக்கும் தொழிலாக மாற்றுவதே இவரது கடமை.இவர் போகுமிடமெங்கும் தலைப்பாகை அணிந்து செல்வதற்கு இவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.அத்துடன் ஒல்லாந்த இலச்சினை பொறிக்கப்பட்ட குடை ,பல்லக்கு என்பனவும் வழங்கப்பட்டிருந்தன. குடை பிடிப்பவரும் பல்லக்கு தூக்குபவர்களும் ஒல்லாந்த அரசால் நியமிக்கப்பட்டிருந்தனர்.

பூநகரி,பல்லவராயன்கட்டு,இலுப்பைக்கடவை போன்ற இடங்களில் யானைக்கொட்டில்களிருந்தன.வன்னியில் பிடிபடும் யானைகளும் வன்னி அரசன் திறையாகச்செலுத்தும் யானைகளும் தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்படும் யானைகளும் கோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டு டச்சுக்குறி சுடப்பட்டு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1696 ஆம் ஆண்டு 161 யானைகள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

*(வரலாறு நீளும்)*

# சொற்சிலம்பம் போட்டி 62



அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

..........................................

கையொப்பம்:..........................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. பெருங்கடல் 6. கன்னம் 7. விதையின் நிலை மை இழந்துள்ளது. 8. அடர்த்தியாக மரங்கள் உள்ள இடம் 9. ஒரு புல் வகை 10. வருந்து 11. முருகனது ஆயுதம் 12. வடக்கின் கற்பகதரு 14. சத்தம் 16. கணபதி 19. தெரு 20. வித்தை 21. கைக்கு ஐந்து 22. நாங்கள் 23. ஆங்கில வருடத்தில் முதல் வருவது.

### மேலிருந்து கீழ்

1. எந்தநேரமும் 2. பின்னுதல் 3. பிரமிப்பு 4. தேவலோகத்து ஆடலரசி 5. காப்பிய நாயகி 8. பரீட்சை 11. யாகம் 12. ஒட்டுவதற்கு தேவைப்படுவது 13. ஒரு வகை மீன் 14. ஒன்று 15. எல்லையில் கட்டுவது 17. ஓர் உலோகம் 18. பாடல் 19. திறல் 21. ரக.

### சொற்சிலம்பம் போட்டி 61க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. விவாகம் 4. பாதம் 6. வேட்டு 7. முல்லை 8. கடுக்கன் 10. வித 12. காவி 13. மாதிரி 14. பேய் 15. பாசி 16. தர 17. அணி 18. அதி 19. சம்சாரி 21. நகர 22. விசித்திரம்

**மேலிருந்து கீழ்**

1. விவேகம் 2. வாட்டு 3. கடுக்காய் 4. பால் 5. தலைவிதி 7. முன் 9. கவி 11. தரித்திரம் 13. மாசி 14. பேரம் 15. பாணி 16. தசம் 17. அரசி 18. அகர 20. சாவி 21.நதி

**சொற்சிலம்பம் போட்டி இல.62**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**24.12.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**

தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான [illegible] காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 61இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**ந.சி.ராஜீவ்**
முசலி மன்னார்.

**2 ஆம் பரிசு**
**சி.சிவரம்யா**
இல.40/1 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
**மா.மகாலிங்கம்,**
கைதடி மேற்கு, கைதடி.

**4 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்,**
வட்டுத் தென்மேற்கு, வட்டுக்கோட்டை.

**5 ஆம் பரிசு**
**ஜெ.சோபிகா**
வல்லை வீதி, தொட்டியடி, சங்கானை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நித்திரை இல்லை

அமெரிக்கா பறப்பதற்கு முன்னர் அலரிமாளிகையில் முக்கியத்துவமிக்க சந்திப்பொன்றை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச நடத்தினார். அமைச்சர்கள், தனது சகாக்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களை அந்தச்சந்திப்புக்கு அழைத்திருந்தார். 2022 இல் எவ்வாறு செயற்பட வேண்டுமென அவர் விரிவானதொரு பாடத்தை எடுத்துள்ளதாகவும் தகவல்.

இந்தச்சந்திப்பு காலை 8.45 மணிக்கே ஆரம்பமாகிவிட்டது. எனினும், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்கூட்டியே அலரிமாளிகைக்கு வந்துவிட்டார். கூட்டம் ஆரம்பமாகும்வரை இராஜாங்க அமைச்சர் சனத நிஷாந்தவுடன் உரையாடிக்கொண்டிருந்தார்.

" தம்பி, என்ன நடக்கின்றது என்றே தெரியவில்லை, அமைச்சரவைக் கூட்டத்துக்கு சென்று திரும்பினாலே நித்திரை வருவதில்லை. " என பிரசன்ன கூற, "ஏன் அப்படி என்ன பிரச்சினை?" என சனத் நிஷாந்த வினவியுள்ளார்.

"பொருளாதார நெருக்கடி, டொலர் பிரச்சினை என பிரச்சினைகளை பற்றியே செவிமடுத்து, ஒரே மனக்குழப்பமாக உள்ளது. " என பிரசன்ன பதிலளித்துள்ளார்.

அவ்விடத்துக்கு வந்த அமைச்சர்களான உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரண ஆகியோரும், "எங்களுக்கும் தூக்கம் வருவதில்லைதான், எமக்கு முக்கிய பொறுப்புக்களே வழங்கப்பட்டுள்ளன. எனவே, நெருக்கடியை சமாளித்து முன்னோக்கிப் பயணிப்போம்" என ஆறுதல் கூறியுள்ளனர்.





# வேண்டவே வேண்டாம்!

மருத்துவப் பரிசோதனைக்காக தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சிங்கப்பூருக்கு சென்றிருந்ததால் அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலேயே திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி மற்றும் பொருளாதார நெருக்கடி நிலை குறித்தும், அதனால் எதிர்காலத்தில் ஏற்படும் சவால்கள், அந்த சவால்களை எவ்வாறு சமாளிப்பது என்பன தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

குறிப்பாக தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தை நாடி, கடன் பெறுவது சிறப்பானதாக இருக்குமென அமைச்சர்களான பவித்ரா வன்னியாராச்சி, அலி சப்ரி, ரமேஷ் பத்திரண உள்ளிட்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது ஆபத்திலேயே முடியும் எனவும் வாதிட்டுள்ளார். அதற்கான காரணங்களையும் பட்டியலிட்டுள்ளார். இவ்வாறு இது விடயத்தில் அமைச்சரவையில் இருவேறு கருத்துக்கள் நிலவிய பின்னர் , பொருளாதார நிபுணர் அமைச்சர் பந்துல குணவர்தனவும் கருத்து வெளியிட்டார்.

" சர்வதேச நாணய நிதியத்தை நாம் நாடினால் கடுமையான நிபந்தனைகளை ஏற்க வேண்டிவரும். அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியாது, வரிகளை அதிகரிக்க வேண்டிவரும், நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை விற்க வேண்டிவரும், சம்பளக் குறைப்புச் செய்ய நேரிடலாம் அதேபோல பொருளாதார மறுசீரமைப்புகளும் இடம்பெற வேண்டும். இவற்றைச் செய்வது கடினம்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சர்வதேச நாணய நிதியத்தை நாடியது. இறுதியில் என்ன நடந்தது? ஒரு ஆசனம்தான், அதுவும் தேசியப் பட்டியலில்.

இந்தியா- சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் பேச்சு நடத்துவோம். கடன்களைக் கோருவோம். ஏப்ரல் மட்டும் தாக்குப்பிடித்தால் அதன்பின்னர் தலைதூக்க முடியும்." என விரிவானதொரு விளக்கத்தை பந்துல இதன்போது வழங்கியுள்ளார்.

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## இராஜினாமா மறுப்பு

ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜயசுந்தரவுக்கு எதிராக ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் போர்க்கொடி தூக்கி யுள்ளனர். அவர் பதவி மாற்றம் செய்யப்பட வேண்டும் என வெளிப்படையாகவே வலியுறுத்திவருகின்றனர். பொருளாதாரச் சீரழிவுக்கு அவரும் ஒரு காரணம் எனவும் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

இந்தநிலையில் இதுபற்றி அறிந்து, தனது பதவியை இராஜினாமா செய்வதற்கு பி.பீ. ஜயசுந்தர தீர்மானித்திருந்தார். அதற்கான கடிதத்தையும் தயார்படுத்தினார்.

சிங்கப்பூரில் இருந்து ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர், இராஜினாமா கடிதத்தைக் கையளித்துள்ளார். எனினும், அதனை ஏற்பதற்கு ஜனாதிபதி மறுப்பு தெரிவித்துவிட்டார்.



## இன்னொரு தலையிடி



வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸிடம் தனது நிதியமைச்சுப் பதவியைத் தற்காலிகமாக ஒப்படைத்துவிட்டு, அமெரிக்காவுக்கு பறந்துள்ளார் பஸில். வெளிநாட்டுப் பயணங்களை அமைச்சர்கள் மேற்கொள்ளும்போது தமது வேலைப்பளுவைக் குறைக்கும் வகையிலும், நாட்டின் அவசியம் கருதியும், அதனைத் தற்காலிகமாக இன்னொருவரிடம் கையளிப்பது வழமைதான். ஆனாலும் கடந்தமாதம் பஸில் ராஜபக்ச இந்தியாவுக்கு பயணமான போது . இவ்வாறான பதில் நிதியமைச்சராக எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

அப்படியிருக்கையில், இப்போது மட்டும் ஏன் பதில் நிதியமைச்சர் நியமனம் என்ற சந்தேகம் பலருக்கும் எழுந்துள்ளது. அமெரிக்காவுக்கு சென்றுள்ள பஸில் . தனது குடும்பத்தாருடன் ஒருசிலவாரங்கள் செலவழிக்கவுள்ளதாலேயே, இவ்வாறு பீரிஸை பதில் நிதியமைச்சராக நியமித்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது. ஆனாலும் ஒட்டுமொத்த நாடே பொருளாதாரப் பொறிக்குள் சிக்குண்டு மீளமுடியாமல் தவிக்கையில், அதைச் சரிசெய்ய வேண்டிய நிதியமைச்சர் இப்படி பொறுப்பே இல்லாமல் அமெரிக்காவுக்கு விசிட் அடிப்பது சரியா? என்று ஆளும் கட்சிக்குள்ளேயே பலர் புழுங்குகிறார்களாம். இருக்கின்ற உட்கட்சிப் பூசல்கள் போதாதென்று இன்னொரு தலையிடியை பஸில் ஏற்படுத்திவிட்டாரே என்று மஹிந்த தனக்கு நெருக்கமானவர்களுக்கு சொல்லியுள்ளாராம்.



## அமைச்சர்களை மாற்றிப் பயனில்லை!

2022 முற்பகுதியில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளது என தகவல்கள் வெளியாகியிருந்தாலும் அதற்கான சாத்தியமில்லை என்றே ஆளுங்கட்சியின் நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. அமைச்சரவை மாற்றத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ச விரும்பவில்லை. அதற்காக முன்வைக்கப்பட்ட யோசனையை அவர் நிராகரித்துள்ளாரெனவும் அந்த வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

" அமைச்சர்களை மாற்றிப் பயனில்லை, அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் முக்கிய பதவிகளை வகிப்பவர்களையும் மாற்ற வேண்டும். அப்போதுதான் உரிய தீர்வுகிட்டும்." என மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி விரைவில் அமைச்சுக்களின் செயலாளர் பதவிகள் மற்றும் அரச நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றம் வரலாம் என அறியமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நாடு ஒரே சட்டம்: யாருக்கு பாதகம்?

ந.பரமேஸ்வரன்



பர்வானா

அண்மையில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவால் 'ஒரேநாடு ஒரே சட்டம்' என்ற செயலணி உருவாக்கப்பட்டது. இந்தச் செயலணியின் தலைவராக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்த ஞானசாரதேரர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தச் செயலணி உருவாக்கப்பட்டதும் தமிழர் தரப்பிலிருந்து கடுமையான கண்டனங்கள் எழுந்தன; இந்தச் செயலணிக்கு தமிழர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை எனத் தமிழர் தரப்பு ஒப்பாரி வைத்தது. அதனைத் தொடர்ந்து யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவையும் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணிக்கு தமிழர்கள் தரப்புப் பிரதிநிதியாக நியமித்துள்ளார். யோகேஸ்வரியின் நியமனத்துக்கும் தமிழ்த் தேசியத் தரப்பிலிருந்து கடும் கண்டனங்கள் எழுந்தன.

மனிதர்களுக்கு ஏழாம் அறிவு என்று ஒன்று இருக்கிறதோ இல்லையோ தெரியாது. ஆறாம் அறிவு இருப்பதாக விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. 'ஒரேநாடு ஒரே சட்டம்' செயலணிக்கு தமிழர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை என்று ஓலமிடும், யூதர்களுக்கு நிகராக தம்மைத்தாமே ஒப்பிடும் தமிழர்கள் தமது ஆறாவது அறிவை கொஞ்சம் பயன்படுத்தவேண்டும். அப்படிப் பயன்படுத்தினால், இந்தச் செயலணியைப் பற்றி தமிழர்கள் கவலைப்படுவதற்கு எதுவுமில்லை என்பது புலனாகும். இதுவொன்றும் ஆய்வுகூடத்தில் அல்லது குளிரூட்டிய அறைகளில் ஆராய வேண்டிய விடயமல்ல என்பதும் சுலபமாக விளங்கும்.

ஞானசாரதேரரும் இதையே தான் கூறியுள்ளார் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இலங்கைச் சட்டங்கள் தொடர்பில் எதுவித பிரச்சினையுமில்லை; சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் உள்ள பிரச்சினைகள் பொதுவானவை எனக் கூறியுள்ளார்; அது தான் உண்மையும் யதார்த்தமும்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணி முற்றுமுழுதாக முஸ்லிம்களை இலக்குவைத்தே உருவாக்கப்பட்டது. இந்தச் செயலணி உருவாக்கப்பட்டதன் பின்னால் இரண்டு பிரதான விடயங்கள் உள்ளன. முதலாவது சிங்கள பௌத்த பேரினவாதிகள் மத்தியில் சரிந்து வரும் செல்வாக்கை சற்று நிமிர்த்துவது. மற்றையது இஸ்லாமியத் தீவிரவாதத்தை ஒடுக்குவது.

அரசியல் யாப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள நாட்டில் முஸ்லிம்களுக்கு விசேட உரிமைகள் சட்டபூர்வமாக வழங்கப்பட்டுள்ளன. இதை பிறமதத்தவர்களின் அடிப்படை உரிமைமீறல் என்று கூட சொல்லலாம். உதாரணமாக முஸ்லிம் அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமைகளில் தொழுகைக்குச் செல்வதற்கு ஒன்றரை மணித்தியால குறுகியநேர லீவு வழங்கப்படவேண்டுமென இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவை கூறுகிறது; பௌத்தர்களுக்கோ, இந்துக்களுக்கோ, கிறிஸ்தவர்களுக்கோ இந்த உரிமை இல்லவேஇல்லை. வெள்ளிக்கிழமை இந்துக்களுக்கும் புனிதமான நாள். ஆனால் இந்துக்கள் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. கல்வயலைச் சேர்ந்த ஆசிரியர் தனபாலன் என்பவர் (இப்போது ஓய்வுபெற்றுவிட்டார்) வெள்ளிக்கிழமைகளில் இந்துக்களுக்கும் குறுகிய நேர லீவு வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் எழுதினார். தனபாலனின் கடிதத்தை சந்திரிகா இந்து கலாசார அமைச்சுக்கு அனுப்பினார். இந்து கலாசார அமைச்சு செயலாளர் "இந்து ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் பூசைகள் யாவும் ஒழுங்காக நடைபெறுகின்றன; லீவு விடத்தேவையில்லை என பதிலளித்திருந்தார். இந்து கலாசார அமைச்சு செயலாளரின் பதிலுடன் (ஒப்பத்துடன்) சந்திரிகாவிடமிருந்து கடிதம் தனபாலனுக்கு அனுப்பப்பட்டது.

இதேபோல் திருமண விடயத்திலும் முஸ்லிம்களுக்கு விசேட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. டிங்கிரி பண்டாவோ, பொன்னம்பலமோ, ஜோசப்போ மனைவி உயிருடன் இருக்கும் போது அவரை விவாகரத்துசெய்யாமல், இன்னொரு பெண்ணை மனைவியாக்கினால், அது இலங்கைச் சட்டப்படி சிறைவாசம், தண்டம் ஆகிய இரண்டு தண்டனைகளும் வழங்கப்படக்கூடிய குற்றம்.

ஆனால் முஸ்லிம்கள் எத்தனை பேரையும் திருமணம் செய்யலாம். உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலதாரியின் தந்தை இப்ராஹிமுக்கு நான்கு மனைவிகள். குண்டை வெடிக்க வைத்தவர் இரண்டாவது மனைவியின் பத்தொன்பதாவது புதல்வன்.

இதேபோல் களுபண்டாவோ, சிவலிங்கமோ, அந்தோனியோ பதினேழு வயதும் ஆறு மாதங்களும் நிரம்பிய யுவதியை கூட்டிக் கொண்டு ஓடினால் அது சிறைத்தண்டனைக் குற்றம். ஆனால் முஸ்லிம்கள் 12 வயதுச் சிறுமியையும் திருமணம் செய்யலாம்.

இஸ்லாமிய நாடுகளில் 'ஷரீஆ' சட்டத்தின் பெயரால் பல கொடுமைகள் நடைபெறுகின்றன. ஆப்கானிஸ்தானில் வறுமை காரணமாக சிறுமிகள் விற்பனை செய்யப்படுகின்றனர். உதாரணத்துக்கு சில சம்பவங்கள். இதோ.

ஒன்பது அங்கத்தவர் கொண்ட குடும்பம் அது. தந்தைக்கு எதுவித தொழிலும் இல்லை. அத்துடன் அவர் ஒரு மாற்றுத்திறனாளி. தனது நான்கு வயது, ஒன்பது வயது நிரம்பிய 2 சிறுமிகளையும் 1100 டொலருக்கு விற்பனை செய்துள்ளார்.

"இது எதற்காக நடைபெறுகிறது என்று எனக்குத் தெரியும் ஏனென்றால் நாங்கள் ஏழைகள். எமக்கு சாப்பிடுவதற்கு உணவு இல்லை" எனக் கூறுகிறார் அவரது நான்கு வயதான மண்ணிறக் கண்களைக் கொண்ட செயிற்றன் என்ற சிறுமி. செயிற்றனின் பேர்த்தி ரொசுஹனா "எமக்கு வேறு வழியில்லை" என கூறுகிறார். இதேபோல பர்வானா என்ற சிறுமிக்கு வயது ஒன்பது.

ஒருநாள் அவள் வழக்கம் போல தன்னையொத்த குழந்தைகளோடு கயிறடித்து விளையாடிக் கொண்டிருந்தாள். அங்கே வந்த அவளது தந்தை கையைப் பிடித்து இழுத்துச் சென்றார். சில நிமிடங்களில் அவளுக்கு அலங்காரம் செய்யப்பட்டு 55 வயது நபரொருவருக்கு மணமகளாக்கப்பட்டாள்.

"எனது முதல் மனைவி பர்வானாவை நன்கு கவனித்துக் கொள்வார்" என அவளைத் திருமணம் முடித்த அந்த 55 வயது நபர் கூறியுள்ளார்.

பல மாதங்களுக்கு முன்னர் பர்வானாவின் தந்தை தனது 12 வயதான இன்னொரு மகளையும் விற்பனை செய்திருந்தார்.



செயிற்றன்

பர்வானா தான் ஒரு ஆசிரியையாக வர வேண்டுமென்ற கனவுடன் இருந்ததாகக் கூறுகிறார். பர்வானாவைக் கையளிக்கும் நிகழ்வில் பர்வானா தலையை மூடி உடை அணிந்திருந்தார், கழுத்தில் ஒரு மணமகளைப் போல் மாலை ஒன்று அணிந்தவாறு பலத்த சத்தத்துடன் தேம்பிக் கொண்டிருந்தாள். தந்தை அழுதவாறே அவளைத் திருமணம் செய்த முதிய நபரிடம் "இவள் உனது மனைவி இவளைக் கவனமாக பார்த்துக்கொள் தயவு செய்து அடிக்கவேண்டாம். இவளுக்கு நீதான் பொறுப்பு" எனக் கூறினார். குர்பான் என்ற அந்த நபர் (பர்வானாவை வாங்கியவர்) அதை ஏற்றுக் கொண்டு பர்வானாவை தனது தோளில் அழுத்தித் தூக்கிக் கொண்டு வாசலில் காத்திருந்த காரை நோக்கிச்சென்றார்.

தனது நிதிநிலைமையில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் தனது இரண்டு வயது மகளையும் விற்கப்போவதாக பர்வானாவின் தந்தை கூறுகிறார்.

பர்வானாவுக்கு நிகழ்ந்த அநீதி சர்வதேச ஊடகங்களில் இடம்பிடித்தமையால் சர்வதேச தொண்டு நிறுவனங்களால் அவள் காப்பாற்றப்பட்டுள்ளார். ஆனால் அவளைப் போன்று விற்கப்பட்ட ஏனைய சிறுமிகளின் கதி?

ஆண்கள் சவரம் செய்வதற்கும் பெண்கள் கல்வி கற்பதற்கும் அனுமதி மறுக்கும் தலிபான்கள் ஷரீஆசட்டத்தின் பெயரால், சிறுமிகள் விற்பனை செய்யப்படுவதை அங்கீகரிக்கினறனர்.

இலங்கையிலும் ஷரீஆ சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமென முஸ்லிம் அரசியல்வாதிகள் அவ்வப்போது குரல்கொடுத்து வருகின்றனர். இலங்கையில் ஷரீஆ சட்டம் அமுல்படுத்தப்பட்டால் வன்னியிலும் மூதூரிலும் அம்பாறையிலும் வாழும் யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஏழைத் தமிழ்ச் சிறுமிகளின் கதி?

எனவே 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற அறிவிப்பை சிங்களவர்களும் தமிழர்களும் வரவேற்பதே சாலச்சிறந்தது.



குழந்தைகளோடு கயிறடித்து விளையாடிக் கொண்டிருந்த பர்வானா



பர்வானாவின் திருமணத்தின்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்





N.ஹிஷானிகா,
தரம்: 7
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

உ.ஆராதனா,
தரம்: 3
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.




வ.ஜானுஷா,
தரம்: 4
யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை.






சி.பிருந்துஜன்,
தரம்: 5P
யா/ ஸ்ரீ சோமஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை.

ப.கோஷியா,
தரம்: 4
யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்



பி.சஞ்ஜேய்,
தரம்: 2
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.



# முன்னெச்சரிக்கை வேண்டும்



ஒரு கிராமத்து வீட்டில் எலி, சேவல், ஆடு மூன்றும் இருந்தன. ஒருநாள் அந்த வீட்டில் எலிப்பொறி வைக்கப்பட்டிருந்ததை எலி கண்டது. "இந்த வீட்டில் எலிப்பொறி இருக்கிறது. அதில் யாரும் மாட்டிக் கொள்ளாதீர்கள்" என்று சேவலிடமும், ஆட்டிடமும் சொன்னது. அதற்கு சேவல், "எலிப்பொறி உனக்குத் தொடர்புடைய விஷயம். நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்றது. ஆடும், "எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நீ மட்டும் அகப்படாமல் பார்த்துக் கொள்" என்றது.

அன்றிரவு எலிப்பொறியில் ஏதோ அகப்பட்ட சத்தம் கேட்டவுடன், அந்த வீட்டுப் பெண் இருட்டில் அந்தப் பொறியில் கை வைத்தார். பொறியில் மாட்டியது பாம்பாக இருந்ததால் அது அவரைக் கடித்துவிட்டது. மருத்துவரைக் கொண்டு அந்தப் பெண்ணைக் காப்பாற்றிவிட்டனர். அந்தக் கிராமத்து வழக்கப்படி அந்தப் பெண் உடல்நிலை தேறுவதற்கு அந்தச் சேவலைக் கொன்று அதன் சாறு கொடுக்கப்பட்டது.

பின்னர் அந்தப் பெண்ணைப் பார்க்க வந்த உறவினர்களுக்கு அந்த ஆடும் விருந்தானது. விபரீதங்களைப் புரிந்து கொள்பவர்கள் தமக்கென வைக்கப்பட்ட பொறிகளிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். எச்சரிக்கை விடுத்தும் அலட்சியப்படுத்துபவர்கள் அவதிப்படுகிறார்கள். முன்னெச்சரிக்கையுடன் நடப்பவர்களுக்கு எந்தவிதமான தீங்குகளும் ஏற்படாது. 'எமக்கு வராது' என்ற அலட்சியப் போக்கை விட்டொழித்து, நம்மைச் சுற்றி நடப்பது நமக்கும் ஏற்படலாம் என்ற முன்னெச்சரிக்கையுடன் செயற்படுதல் வேண்டும்.




# புறாக்கள்

- புறாக்களில் மொத்தம் 344 வகைகள் உள்ளன.
- புறாக்களை வீட்டில் வளர்க்கும் வழக்கம் சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியுள்ளது.
- பண்டைய காலத்தில் கடிதப் போக்குவரத்துக்கு புறாக்கள் அதிகமாக பயன்படுத்தப்பட்டன.
- முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்களில் கடிதப் போக்குவரத்தில் சிறந்த சேவையாற்றியதற்காக புறாக்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- 1900ம் ஆண்டில் பாரிஸ் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் புறா பந்தயம் இடம் பெற்றது. மொராக்கோ, சீனா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளின் மக்களிடையே புறா இறைச்சி மிகவும் புகழ்பெற்றதாக உள்ளது.
- புறாக்களால் அதிகபட்சமாக மணிக்கு 92 மைல் வேகம்வரை பறக்க முடியும்.
- புறாக்களை தனியாகக் காண்பது அரிது. அவை பெரும்பாலும் கூட்டமாகத்தான் திரியும். 1,000 மைல் தூரத்துக்கு மேல் பறந்து சென்றாலும், தங்கள் கூட்டுக்கு திரும்புவதற்கான வழியை புறாக்கள் மறப்பதில்லை.
- அண்டார்டிகா, சஹாரா பாலைவனம் உள்ளிட்ட உலகின் அனைத்து பகுதிகளிலும் புறாக்களை காணமுடியும்.

## எண்களை இணைத்து படத்தை முழுமை செய்வோம்







# நல்ல நண்பர்கள்

தேடினாலும் கிடைக்காத சொந்தம் நல்ல நண்பர்கள். ஒருவரை கஷ்டப்படுத்துவதும், துன்பப்படுத்துவதும் ஒரு சிலரின் வார்த்தைகள்தான். அதுவே ஒருவரை சமாதானப்படுத்துவதும் சந்தோசப்படுத்துவதும் நல்ல நண்பர்களின் வார்த்தைகள் தான். அம்மாவுக்கு அடுத்த படியான சொந்தங்கள் நல்ல நண்பர்களே! உங்கள் வாழ்க்கையில் நல்ல நண்பர்களை தேர்ந்தெடுங்கள். வாழ்க்கை மிகச் சிறப்பாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைகள்

மழலை மொழி பேசும் குழந்தைக்கு உன்
கவலைகளை சிரிப்பாக்கி சிரிக்கும்
உனக்கு இக்கால வாழ்க்கையில்
மரக்கறி உணவு எல்லாம் கனவு தானோ
தற்போது தாய்ப்பாலும் இல்லை என்றால்
தண்ணீர் தான் குடிக்கணுமோ
தண்ணீரும் காசு என்றால்
கண்ணீர் தார்ன் ஒரே வழி

**கி.ஜனார்த்தன்**
யா/ஹாட்லிக் கல்லூரி, துன்னாலை.

பிறந்ததோ வாழ்வதற்காக
போராடுவதோ வயிற்றுக்காக
பசிக்காக அழுகின்ற குழந்தை இருக்க
படையல்களை ஏற்கமாட்டான் இறைவன்
பசி தீர உணவளிப்போம் இல்லாதவர்க்கு
பயனாக அவர்களின்
சிரிப்பில் காணலாம் இறைவனை..........

வி.கௌதமி, மீசாலை

ஒருவேளை உண்டிட உணவில்லை
அதைத்தேடிச் சென்றிட வழியில்லை
கிடைத்ததுவோ ஒரு கைபிடியே
அதையும் பகிரும் இதயம்- இதன்
அருமை புகழ்ந்திட வார்த்தையில்லை
வறுமைக் கோட்டைத் தொட்டாலும்
அன்பைப் பொழிந்தே வள்ளலானான்
ஏழை என்பவன் தாழ்ந்தவனல்ல

கனிவிழி.கா , யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

62

## மௌன மொழி

தந்திரம் மிகுந்த உலகில்
இயந்திர மய வாழ்க்கையில்
ஏணி போல் உயரும்
விலைவாசியைச் சமாளிக்க
கை கொடுக்கும் உறவு
தாயைப் பார்த்த தனயனும்
தளரா மனத் திண்மையால்
தாயுமானவனாகின்றான்

க.நாகராசா, சாவகச்சேரி

தன் பசி மறந்து
குழந்தைக்கு உணவூட்டுவதில்
அண்ணண் கூட தாயாகி விடுகிறான்.
இடம் மறந்து நிலை மறந்து
கிடைத்திட்ட உணவை
தன் பசி மறந்து ஊட்டிவிடும்
அண்ணண் கூட இன்னொரு தாய்
தான்.

**சரண்ஜா ஜெயரட்ணராஜா**
திருநெல்வேலி.

வசதி வந்து சொந்தங்கள்
எல்லாம் சிதறுண்டு போனது
நாகரிகம் மாறி
பழமை எல்லாம்
புதையுண்டு போனது ஆனால்
துரத்திய சொந்தங்கள்
எல்லோரையும்
புறந்தள்ளி நின்றது வறுமையை
வென்ற சகோதர பாசம்.

**பானுஜா ஜெயரட்ணராஜா**
திருநெல்வேலி

அன்பில் விளைந்த ஆரமுதாய்
அண்ணன் கடமை தாய் நிழலாய்
மடியில் சாய்ந்த மாதுளம்பூ
மௌனமொழிகள் என்ன அன்னை
கனகமுலைப்பால் அருந்தும் வாயில்
இங்கு கஞ்சி சுவைப்பதென்ன
காலம், வறுமை மாறும் நாளை
அண்ணன் கருணை மாற்றமில்லை

ஆழ்வான், முல்லை.

பட்டாடையாய் கந்தலாடை அணிந்து
இளையவனின் பசியாற்றி
அன்னையாய் அணைக்கிறான்
கறைபடிந்த கையால் பசியாற்றும்
இச்சிறுவனின் வாழ்க்கையில்
ஒளி கிடைப்பது எப்போ....?

லோ.கம்சனா, யாழ்ப்பாணம்

வறுமையின் வக்கிரபிடியில்
சிதைந்து சீரழிந்து
தாய், தந்தை தனையிழந்து
வீதிக்கு வந்திருக்கும் மழலைகளை
மனக்கண் திறந்து பாருமய்யா
மாடிமனைகள் மணிமண்டபங்கள்
நினைவாலயங்கள் என
கோடி கோடியாய்க் கொட்டிக் கட்டியென்ன
உயிர்வாழ உண்டியிடும்
அதுவே உமை போற்றிடும்

**எஸ்.கோதீஷன்,**
திருகோணமலை

எத்தனை நாள் கடந்தாலும் மாறாத
உறவு எனும் ஆழ்கடலில்
உணர்வு எனும் அண்ணன்– தங்கை அன்பு
தன் தங்கை பசி தீர்க்க
தன் உணவை கொடுத்து
இன்னுமோர் தாயாக மகிழும்
அண்ணன் அன்பு – எத்தனை
கோடி கொடுத்தாலும் வாங்க முடியாத வரம்

**மதுஷனா பாலகுமார்**

பெற்றோரைப் பறிகொடுத்து இருப்பிடம் இன்றி
உற்றார் எவரின் உதவியுமின்றி தன்
ஒன்றுமறியா உடன்பிறப்புக்கு உணவூட்ட
இன்று தன் கவலை மறைத்து சிரிப்பூட்டும் நிலை
என்றும் வரக்கூடாது எம் இனத்துக்கு

**ஏழாலையூர் எஸ்.அம்சன்**

தகிக்கும் வெயிலில்
நடுவீதியில்
கஞ்சி குடிக்கும் நிலையா
இப்பிஞ்சுக்கு
வலிக்கும் நெஞ்சத்து
மானிடரே
துடிக்கும் இக்கொடிகள்
படர்ந்திடத் தேராவோம்
வாருங்கள்

**எஸ்.அனிஷ்காந்தா,**
யா/ஹாட்லிக் கல்லூரி.

**பரிசு பெறும் கவிதை**

தந்தைதனை கொரோனா கொன்றொழிக்க
தாயையும் எரிவாயு எரித்தழிக்க
ஏதிலி ஆனதனால் ஊருறவும் ஒதுங்கி நிற்க
நாதியற்ற நாடும் நடுவீதியில் விட்டதனால்
ஊனுருக்கிப் பால்சுரந்த தாய்மடியும் கனவாகி
பாசஅண்ணன் கரத்தாலே பசியாறும் பரிதாபம்
பாவமறியாப் பிஞ்சிற்கு பாரீந்த பரிசாமோ

**கருணை கலைநேசன்**, கரவெட்டி.

பள்ளிப்பருவம் தனில்
பச்சிளம் குழந்தையை
மடிமீதினில் அமர்த்தி
பசிக்கின்ற வேளை
உணவுதனை ஊட்டிடும்
பாசக்கார அண்ணன் நீயல்லவா
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அண்ணன் தங்கை உறவு
அற்புத உறவல்லவா?

**ஆ.பாலமதுஜா,**
யா/ மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை

பால் கொடுக்கும் தாய் மடியில்லை
படுத்துறங்கப் பாய்தானுமில்லை
உழைத்துயிர் வளர்க்கும்
தந்தையுமில்லை
ஊர்த்தெருவுக்கு இவர்கள் பிள்ளை
இதயமுள்ளோரே வாருங்கள்
மனிதமின்னும் சாகாத
பூமியிதுவென்றால்
நாளை புலரும் பொழுதில்
இவர்கள் வாழ்வும் மலரும்

**ரி.சுசிகலா**, கரவெட்டி

மழலை விழியினில்
ஒளிவிடும் கனிவும்
மின்னல் குறுநகையும்
மடியில் தாங்கியவரின்
உதட்டசைவின் மேலா
அல்லது அவர் கை
உணவுத் தட்டின் மேலா
மழலைக்கே வெளிச்சம்
மனதிலுள்ள இச்சை

**சி.சிவரம்யா,**
நல்லூர்.

ஒரு செடியில் பூத்த இருமலர்கள்
பூங்காற்றாய் மணம் வீசுதுதானோ
கண்ணை இமை காப்பது போல்
தம்பியை அண்ணன் மடிதாங்கி
அரவணைத்து செல்லக் கதைபேசி
அன்னத்தை ஊட்டுகிறான்
அன்னையை மிஞ்சிவிடுகிறான்.

**கும்பவாழியான்**, உடுப்பிட்டி.

63




மலரின் இதழ்கள் மழலை பொழியும்
மடியில் தவழும் சுகமும் மகிழ்ந்து
பிஞ்சுப் பாலன் பசியும் தீர்க்க
கஞ்சி உணவை கனிந்தூட்டும்
தமயன் பாசம் வானம் முட்டும்
தாயின் அன்பும் தோற்றுப்போகும்
பஞ்சம் கொடுமை ஆடும் நாட்டில்
துயரம் சுமந்து வாடும் மக்கள்

**ச.ரன்குமார்,**
வற்றாப்பளை.

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**
**24.12.2021**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவி[illegible] உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி **சிறுகதை**

# வாழும் வரை வாசி

○ பா.பாலாஜினி

அப்போதுதான் மழை பெய்து ஓய்ந்திருந்தது. அந்தக் காட்டுக் குடிசைக்குள் அமர்ந்திருந்த மூதாட்டி ஹிருணி அந்த தள்ளாத வயதிலும் கூட மிக சத்தமாக "சதுஷ்டி சதுஷ்டி" என அழைத்துக் கொண்டிருந்தாள். குடிசைத் தாழ்வாரத்தில் பல்லாங்குழி ஆடிக் கொண்டிருந்த சதுஷ்டி எனும் பெயருக்குரிய சிறுமி மெல்லக் குடிசைக்குள் எட்டிப்பார்த்து "என்ன பாட்டி வேணும்?" என்கிறாள். "சதுஷ்டி, உன் அம்மாவும் சகோதரிகளும் எங்கே சென்றுவிட்டார்கள். மான் இறைச்சியைப் பதப்படுத்த சொல்லியிருந்தேனே அது முடிந்துவிட்டதா?"

"பாட்டி, அவர்கள் எல்லோரும் கோதுமை கதிர்களை அறுத்து வர சென்றுவிட்டார்கள். மான் இறைச்சியை நேற்றே பதப்படுத்தி வைத்துவிட்டோமே" கூறிவிட்டு தூரத்தில் இருக்கும் தன் நண்பர்களைத் தேடி ஓடிவிட்டாள்.

சதுஷ்டிக்கு ஒரு பத்து வயது இருக்கும். மேலுடம்பில் எவ்வித ஆடைகளும் இல்லாத போதும் அரையை மறைத்து மரவுரி தரித்திருந்தாள். அவள் கட்டைக் கூந்தல் பொன்னிறமாகக் காட்சி அளித்தது. மூதாட்டி ஹிருணியோ உடல் முழுவதும் மரவுரி தரித்திருந்தாள். கண்பார்வை மங்கலாக இருந்தும் கூட குடிசைக்குள் இருந்தவாறே பருத்திப் பஞ்சை நூலாக திரித்துக் கொண்டிருந்தாள். அவளின் உறுதியான பற்களோ பதப்படுத்தி வைத்திருந்த மான் இறைச்சித் துண்டுகளை மெல்ல மெல்ல மென்று கொண்டிருந்தன.

"டக் டக் டக்... "

சற்றுத் தள்ளிக் கேட்ட அந்த சத்தம் ஹிருணிக்கு அவளின் குடும்பத்தாரின் வரவை உறுதிப்படுத்தியது.

"பாட்டியம்மா, இங்கே பாருங்கள். இம்முறை அதிகளவான கோதுமை விளைச்சல் கண்டிருக்கிறது" இது சதுஷ்டியின் மூத்த சகோதரி வேதுஷ்டியின் குரல். அதைக் கேட்ட ஹிருணி சிரித்துக் கொண்டே அவளை அருகில் அமர்த்தி உச்சி மோர்ந்து கொண்டாள். கோதுமைக் கதிர்களை அறுத்து விட்டு வரும் வழியில் கிடைத்த சில விலங்குகளின் இறைச்சியை ஹிருணியின் மகள் வாட்டி எடுத்து வைக்க ஹிருணி அனைவருக்கும் பரிமாறினாள்.

இறைச்சித் துண்டுகளை சுவை பார்த்துக் கொண்டே தேனையும் மெல்ல உறிஞ்சியபடி தான் வரும் வழியில் குகைகளில் வரையப்பட்டிருந்த ஓவியங்களையும், சித்திர எழுத்துக்களையும் பற்றி தன் தங்கைக்கு வெகுவாக சிலாகித்துக் கூறிக் கொண்டிருந்தாள் வேதுஷ்டி. ஹிருணியும் அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கும் அவ் எழுத்துக்கள் தொடர்பில் கொஞ்சம் விடயத் தெளிவு இருந்துகொண்டுதானிருக்கிறது.


காட்டுக்குச் சென்று வந்த களைப்பும் அதனுடன் தேனைப் புசித்ததனால் ஏற்பட்ட சிறுமயக்கமும் ஒன்று சேரவே மற்றவர்கள் உடனே உறங்கிவிட்டார்கள். ஆனால் மூதாட்டி ஹிருணிக்கு மட்டும் உறக்கம் வரவே இல்லை. மரணத்தை எக்கணத்திலும் எதிர்பார்த்திருக்கும் அவள் மனதில் சிறுமிகள் இருவரினதும் உரையாடல் சில ஞாபகங்களைக் கிளறி விட்டிருந்தது.

அந்த ஞாபகங்களின் வேகத்தில் அவளின் முதிர்ந்த மனது இளமை பெற்று வேறோர் காலத்தில் சஞ்சரிக்கத் தொடங்கியது.

அப்போது ஹிருணிக்கு பதினாறு வயது தொடங்கியிருந்தது. எதிரே இருந்த மலைச்சரிவுகளில் மந்தைகளை மேய்ப்பதற்காக அவள் செல்வதுண்டு. மீண்டும் குடிசைக்குத் திரும்பி வர எப்படியும் இரண்டு நாட்களாவது ஆகிவிடும் என்பதனால் வேட்டைக்குத் தேவையான வில் அம்புகளோடு, உணவையும் கொண்டு செல்வாள்.

அவ்வாறான ஒரு நாளில் தான் அவளுக்கு யுதிஷ்ரா என்பவனுடன் பழக்கம் ஏற்பட்டது. யுதிஷ்ரா அயற்கிராமத்தவன்.

மந்தைகளை மேய்ப்பது அவனது வேலையாக இருந்தாலும் கொஞ்சம் எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தது அவனுக்கு. யுதிஷ்ராவின் உருண்டு திரண்ட கால்களிலும் யௌவன புஜங்களிலும் ஹிருணிக்கு ஒரு ஆசை இருந்ததைப் போலவே அவளின் அலைபாயும் கூந்தலிலும் கொவ்வை உதடுகளிலும் நிறைவான தனங்களிலும் அவனுக்கும் விருப்பு இருந்தது.





அந்த விருப்பம் காதலாக மாறி அதனை அவர்கள் எவ்வாறு பரிமாறிக் கொண்டார்களோ அதே போல் அறிவையும் பரிமாறிக் கொண்டார்கள். "அன்பே ஹிருணி, நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? நம் மொழியைப் போலவே உன் விழிகளும் எனக்கு நிறைவைத் தருகின்றன" "நீ என்ன சொல்கிறாய் யுதிஷ்ரா? மொழி என்பது என்ன ? நாம் பேசுகின்ற வார்த்தையா?" இது ஹிருணியின் கேள்வி.

"ஆம் அன்பே அதுதான். அதனை எழுதவும் முடியும்." யுதிஷ்ரா ஹிருணியின் கையைப் பிடித்து குகைச் சுவர்களிலும், கற்பலகைகளிலும் எழுதக் கற்றுக் கொடுப்பான். கழுத்தருகில் அவன் மூச்சு உரச அந்த எழுத்துக்களைக் கற்றுக் கொள்வதில் தான் அவளுக்கு எவ்வளவு சுகம்.

மந்தைகளை மேய விட்டு விட்டு இலை குழைகளில் சாறு பிழிந்து ஓவியங்களை வரைந்து மகிழ்ந்து கொள்வார்கள்.

யுதிஷ்ரா தினமும் ஹிருணிக்கென கவிதை எழுதி அதனைப் படித்தும் காட்டுவான். அவளுக்கும் அதைப் பழக்கி இருந்தான்.

"அன்பே ஹிருணி, எம்மை விலங்குகளில் இருந்து வேறுபடுத்தி காட்டுவதே இந்த எழுத்தும் வாசிப்பும் தான்."

* * * *

அது இப்போதும் அவளுக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. இயற்கையைக் கண்டு இயற்கையில் வாழ்ந்த அவர்கள் இருவரினதும் இல்லற வாழ்க்கையின் பேறுகள் தான் இப்போது இருக்கிறவர்கள்.

ஹிருணியை பொறுத்த மட்டிலும் அவள் ஒரு போதுமே யுதிஷ்ரா தன்னை விட்டுச் சென்றதாக அவள் எண்ணியதேயில்லை. அவன் இறந்தாலும் அவனது எழுத்துக்களுக்கு இறப்பில்லை என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. இந் நினைவுகளுடனேயே உறங்கிப் போனவள் மறுநாள் பொழுது புலர்ந்ததும் வித்தியாசமான ஒன்றைச் செய்து கொண்டிருந்தாள்.

தன் தள்ளாத வயதினையும் பொருட்படுத்தாது பேரக்குழந்தைகள் இருவருக்கும் எழுதவும் எழுதியவற்றை வாசிக்கவும் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள். "வாழும்வரை வாசி" என்ற அவள் குரல் அந்த வனாந்தரமெங்கும் பரவி ஒலித்துக் கொண்டிருந்தது.

குழந்தைகள் இருவரும் மழலை மொழியில் அதனை மீண்டும் மீண்டும் சொல்லத் தொடங்கினார்கள். காடு மொழியால் நிரம்பத் தொடங்கியது.



"இப்போதும் அவளுக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. இயற்கையைக் கண்டு இயற்கையில் வாழ்ந்த அவர்கள் இருவரினதும் இல்லற வாழ்க்கையின் பேறுகள் தான் இப்போது இருக்கிறவர்கள். ஹிருணியைப் பொறுத்தமட்டிலும் அவள் ஒரு போதுமே யுதிஷ்ரா தன்னை விட்டுச் சென்றதாக எண்ணியதேயில்லை. அவன் இறந்தாலும் அவனது எழுத்துக்களுக்கு இறப்பில்லை என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது."

• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

நீங்களும் எழுதலாம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com

தொடர்புகளுக்கு
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எரிந்து போன சிறுமி!

## கொலையா? விபத்தா?

○ மயூ

தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள பாச்சலூரில் உள்ள அரச நடுநிலைப் பள்ளி கடந்த புதன்கிழமையும் வழமைபோன்று செயற்பட்டுக் கொண்டிருந்தது.

அதே ஊரைச் சேர்ந்தவர் சத்யராஜ் . கூலித் தொழிலாளி. இவருக்கு மூன்று பிள்ளைகள். பிரியதர்ஷினி, பிரித்திகா என்ற இரு மகள்களும், நவீன்குமார் என்ற மகனும் என மகிழ்ச்சியான குடும்பம். கூலித் தொழில் என்றாலும் தன் பிள்ளைகளைப் படிக்க வைத்து நல்லநிலைக்கு கொண்டுவரவேண்டும் என்பதுதான் சத்யராஜின் கனவு. வீட்டுக்கு அருகில் உள்ள அரசுப் பாடசாலையில் தன் பிள்ளைகளைப் படிக்க வைத்திருந்தார்.

மதியம் இடைவேளையின் பின்னர் பாடசாலைக் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியிருந்தன. அங்குள்ள 6ஆம் தரத்தில் கற்கும் சிறுமி பிரியதர்ஷினி , 5ஆம் தரத்தில் படிக்கும் தங்கை பிரித்தியைத் தேடிக் கொண்டிருந்தாள். 11 வயதான அந்தச் பிரித்திகா மிகவும் சூட்டிகையானவள். சற்று நேரத்தின் முன்னர் சந்தித்த தங்கையை எங்கு தேடியும் காணாததால் அச்சமடைந்த பிரியதர்ஷினி, ஆசிரியர்களிடம் ஓடினாள்.

ஆசிரியர்கள் பிரியதர்ஷினி கூறியதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பாடசாலைக்குள் சரியாகத் தேடிப் பார்க்கக் கூறியிருக்கின்றனர். மீண்டும் தங்கையைத் தேடிக் காணாததால் அச்சமடைந்த பிரியதர்ஷினி, தங்கையைத் தேடி வீட்டுக்கு ஓட, பெற்றோருக்கு விடயம் தெரிய வந்தது.

தகவல் அறிந்த பெற்றோர் பதறியடித்துக் கொண்டு பாடசாலைக்கு ஓடி வந்தனர். அவர்களும் தேட ஆரம்பிக்க பாடசாலையில் மெல்லப் பதற்றம் தொற்றிக் கொண்டது. பாடசாலை இடைவேளைக்கு சற்றுமுன்னர் வரை பிரித்திகா பாடசாலைக்குள் இருந்துள்ளாள். இடைவேளையின்போது வகுப்பறையைவிட்டு வெளியே சென்ற பிரித்திகா அதன்பின்னரே காணாமல் போயிருக்கிறாள். ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் அனைத்து இடங்களும் தேட ஆரம்பித்தனர். ஆனால் பாடசாலைக்குள் பிரித்திகாவைக் காணவில்லை. எல்லோரிடமும் அச்சம் அதிகரிக்க பாடசாலையின் வெளிப்புறத்தில் தேட ஆரம்பித்தனர் சிறிது நேரத்தில் பாடசாலை மைதானத்துக்கு அருகே அவர்கள் கண்ட காட்சி அதிர்ச்சியின் உச்சத்துக்கு அவர்களைக் கொண்டு சென்றது.

புதருக்குள் உடல் முழுவதும் எரிந்த நிலையில், துடித்துக் கொண்டிருந்தாள் பிரித்திகா. பதறிப் போனவர்கள் பிரித்திகாவை அள்ளிக்கொண்டு ஒட்டங்குளம் மருத்துவமனைக்கு ஓடினார்கள். ஆனால் அந்தச் சிறுமியின் உயிர் வழியிலேயே பிரிந்துவிட்டது.

இது தற்செயலாக நடந்த சம்பவம் அல்ல, பிரித்திகா கொலை செய்யப்பட்டுள்ளார் என்றே பெற்றோரும், ஊரவர்களும் கூறுகின்றனர். பொலிஸாரும் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறார். பிரித்திகா எரிந்த நிலையில் காணப்பட்ட இடத்துக்கு அருகே பெற்றோல் கொள்கலன், தீப்பெட்டி என்பன இருந்தன என்று கூறப்படுகின்றது. அதேநேரம் பிரித்திகா மீட்கப்பட்ட போது அவரது வாயில் துணி அடைக்கப்பட்டிருந்தது என்று கூறுகின்றனர். இது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியிருக்கின்றது. பாடசாலை ஆசிரியர்கள், ஊழியர்களிடம் பொலிஸார் தீவிரமாக விசாரணை மேற்கொண்டுள்ளனர். பாடசாலைக்கு அருகே உள்ள குடியிருப்பு வளாகங்களும் விசாரணை வளையத்துக்குக் கொண்டுவரப் பட்டுள்ளன.



**பிரித்திகா எரிந்த நிலையில் காணப்பட்ட இடத்துக்கு அருகே பெற்றோல் கொள்கலன், தீப்பெட்டி என்பன இருந்தன என்று கூறப்படுகின்றது. அதேநேரம் பிரித்திகா மீட்கப்பட்ட போது அவரது வாயில் துணி அடைக்கப்பட்டிருந்தது என்று கூறுகின்றனர்.**

சிறுமியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை கிடைத்ததும், மேலதிகத் தகவல்கள் கிடைக்கலாம் என்று பொலிஸார் கூறுகின்றனர். சிறுமியை எவரேனும் கடத்திச் சென்று புதருக்குள் வைத்துத் தீயிட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெறுகின்றன. விரைவில் இது தொடர்பான துப்புக்கள் கிடைக்கலாம் என்று விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரித்திகா மர்மான முறையில் உயிரிழந்துள்ளமை அந்தப் பகுதியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இதற்குக் காரணமானவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று மக்கள் போராட்டங்களையும் நடத்துகின்றனர். ஒன்



# சீனத்தின் ஜனநாயகம் சாத்தானின் வேதம்!

○ ஆர். பிரகாஷ்

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு' என்று தன்னைத் தானே அடையாளப்படுத்தி 'இந்த நூற்றாண்டின்' ஒட்டு மொத்தக் கேலிகளையும் வாங்கிக் குவித்துள்ளது சீனா.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவி வகித்த காலத்தில், இந்தியாவின் குஜராத்தில் அமைக்கப்பட்ட உலகின் மிகப்பெரும் கிரிக்கெட் மைதானத்தை திறந்து வைப்பதற்காக வந்திருந்தார். அவரின் அந்தப் பயணம் உலக ஊடகங்களால், 'உலகின் பழைமையான ஜனநாயக நாட்டின் (அமெரிக்கா) தலைவருடைய உலகின் பெரிய ஜனநாயக நாட்டுக்கான (இந்தியா) பயணம்' என்று உருவகப்படுத்தப்பட்டது.

நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் உலகின் ஆகப்பெரும் நாடாக இருக்கும் சீனாவை 'ஜனநாயக' நாடு என்று அங்கீகரிப்பதற்கு இன்றளவும் உலக நாடுகள் தயாரில்லை. இதனால் சீனாவுக்கு அடுத்தபடியான மக்கள் தொகையுள்ள இந்தியாவே உலகின் ஆகப்பெரிய ஜனநாயக நாடு என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இந்தப் புகைச்சலைத்தான் இப்போது அப்பட்டமாக வெளிப்படுத்தி அம்பலப்பட்டுப் போய் உள்ளது சீனா.

அமெரிக்காவின் தலைமையில் 'உலக ஜனநாயக மாநாடு' கடந்த 9 ஆம், 10ஆம் திகதிகளில் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. பல்வேறுபட்ட நாடுகள் இதற்கு ஆதரவு வழங்கியிருந்தாலும் சீனா தன் எதிர்ப்பு மனோநிலையைத் தொடரவே செய்தது. 'தாராள ஜனநாயக அமைப்பு முறைமை மக்களுக்கு நன்மை பயக்காது' என்று முன்னர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வெளிப்படுத்தியிருந்த சீனா, இந்த மாநாட்டுக்கு ஒருவாரத்துக்கு முன்னராக 'உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடு' தான்தான் என்று தன்னை அறிக்கையிட்டது. அதாவது இந்த மாநாட்டை அர்த்தமற்றதாக்கி விடவேண்டும் என்பதுதான் சீனாவின் திட்டம்.

உலகில் இன்று சீனாவைத் தவிர்த்துவிட்டு எதுவும் செய்ய முடியாதுதான். இராணுவம், தொழில்நுட்பம், விண்வெளி ஆய்வு என்று அனைத்துத் துறைகளிலும் சீனா தன்னைப் பலப்படுத்தி வைத்துள்ளது.


ஆனால், வாக்களிப்பது எப்படியென்றே தெரியாத சீனர்கள் எப்படி ஜனநாயகவாதிகள் ஆவார்கள்? தேர்தல்களையே சந்திக்காத தேசம் எப்படி ஜனநாயக நாடாகும்? சீனாவில் சீனக் கம்யூனிசக் கட்சிதான் ஆட்சி செய்கின்றது. அங்கிருப்பது ஒற்றையாட்சி முறை. ஜனாதிபதியையோ இதர அதிகாரத் தரப்புக்களையோ மக்கள் தெரிவுசெய்வதில்லை. சீன கம்யூனிசக் கட்சி எவரைத் தெரிந்தெடுக்கின்றதோ அவர்தான் அங்கு ஜனாதிபதி. இப்படியிருக்கையில் எந்த ஜனநாயக அம்சம் தன்னிடம் உள்ளது என்பதற்காக இப்படியானதொரு அறிவிப்பை சீனா வெளியிட்டது?

1989 ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் திகதி தியான்மென் சதுக்கப் போராட்டத்தில், ஜனநாயக உரிமைகள்கோரி போராடிய தனது நாட்டுக் குடிமக்கள் மீது சீன அரசு நடத்திய கொடூரத் தாக்குதல் தொடங்கி, தற்போது சில நாள்களாக ஹொங்கொங் நகரில் நிகழ்ந்து வரும் ஜனநாயக விரோத சம்பவங்கள் வரை எதுவுமே சர்வதேச அரங்கில் சீனாவுக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை.

கொரோனா நோய்த் தொற்று குறித்து முதலில் அறிவித்த ஆய்வக விஞ்ஞானி முதல், மிகப் பெரும் வணிக நிறுவன உரிமையாளர், உலகப் புகழ் பெற்ற விளையாட்டு வீராங்கனை வரை, சீன அரசுக்கு எதிராகப் பேசுகிற பலர் அவ்வப்போது காணாமல்போகிற சம்பவங்களும் தொடர்கதையாகி வருகின்றன. உலகின் பல நாடுகளில், பல பகுதிகளில் தனது சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாமல் அச்சத்துடன் வாழ்கிற, விடுதலை உணர்வு கொண்ட சீனப் பிரமுகர்கள் எத்தனை பேர்..? இந்தப் பட்டியல் நாளுக்கு நாள் நீண்டு கொண்டே போகிறது.

இத்தகைய சூழலில் தனது போக்கைச் சற்றும் மாற்றிக் கொள்ள முன்வராத சீன அரசு, உலக ஜனநாயக மாநாட்டைக் கடுமையாக எதிர்ப்பதும் உலகின் ஆகப்பெரும் ஜனநாயகக் கட்டமைப்பு தான்தான் என்பதும் இந்த நூற்றாண்டின் 'அவல நகைச்சுவை'யே அன்றி வேறென்ன? ஆனால், இதற்கும்கூட சீனாவுக்கு ஜனநாயக உரிமையுள்ளது. ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




8

# செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பாலுற்பத்தியை அதிகரித்தல்

Dr.S.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்

அண்மைக் காலத்தில் கால்நடை வளர்ப்பில் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் [Artificial Insemination] மிக முக்கிய செயற்பாடாக உருவெடுத்துள்ளது. அதிகரித்துவரும் மனித உணவுத் தேவை காரணமாக மிகச் சிறந்த பால் உற்பத்தி மற்றும் இறைச்சியைப் பெற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால் இந்தச் செயற்பாடு மிக மிக அவசியமாகிறது. ஆண் விலங்குகளின் விந்தணுக்களை பெண் விலங்கின் இனப்பெருக்கத் தொகுதியுள் செலுத்தி, வளமான புதிய உயிரிகளை உருவாக்குதல்தான் இந்த செயற்கை முறைச் சினைப்படுத்தலின் அடிப்படை. இது முதன் முதலில் கி .பி .1322 காலப்பகுதியில் அரபி இனத்தைச் சேர்ந்த ஒருவர் தமது எதிரிக்குச் சொந்தமான குதிரையில் இருந்து அதன் விந்தணுக்களை பெற்று தனது குதிரைக்கு குழாய் மூலம் செலுத்தியதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மனிதச் செயற்கை முறைச் சினைப்படுத்தல் 18 ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக இடம் பெற்றிருக்கிறது. 1780 இல் லாஸானோ ஸ்பால் பன்சானி என்ற இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர் நாயில் செயற்கைக் கருத்தரிப்புச் செய்திருந்தார். மாடுகள் தொடர்பான செயற்கைச் சினைப்படுத்தல் 1930 ஆம் ஆண்டு ரஷ்ய விஞ்ஞானியான லசரண் என்பவரால் செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கையில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் முதன் முதலில் பேராதனை 'மீவத்துற' பண்ணையில் இருந்த பசுவுக்கு கால்நடை வைத்தியர் எம். இசற். மகமூத் என்பவரால் நிகழ்த்தப்பட்டிருகிறது. வெளிக்கள ரீதியான சினைப்படுத்தல்கள் இலங்கையில் 1950 களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்றைய திகதிகளில் உலகெங்கிலும் செயற்கை முறைச் சினைப்படுத்தல்கள் கால்நடைகளில் மிகப் பெருமளவு மேற்கொள்ளப்படுகின்றன. ஆடு,மாடு,எருமை,பன்றி கோழி,நாய் என ஏராளமான விலங்குகளுக்கு இது நிகழ்த்தப்படுகிறது. புதிய புதிய நுட்ப முறைகள் இந்த விடயத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையில் ஆண்டுதோறும் பல லட்சம் செயற்கை முறைச் சினைப்படுத்தல்கள் பசு மாடுகளில் நிகழ்த்தப்படுகின்றன. மேலும் ஆடுகளிலும் எருமைகளிலும் குறிப்பிடத்தக்களவில் இது நடைபெறுகிறது.




இலங்கையைப் பொறுத்த வரையில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் அதாவது கால்நடை வைத்திய அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கென விசேட பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்களும் [ Livestock Development officers LDO] பிரத்தியேக சினைப்படுத்துநர்களும் [ private AI technicians] உள்ளனர். இலங்கையில் பொலநறுவை,யாழ்ப்பாணம்,குண்டசாலை ஆகிய இடங்களில் சினைப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. ஆரம்ப காலங்களில் குளிரூட்டிய விந்துகள்[ chilled semen] பயன்படுத்தப்பட்டன. அதாவது மேற்கூறிய இடங்களில் வளர்க்கப்பட்ட ஆண் மாடுகளில் இருந்து பெறப்பட்ட விந்தணுக்கள் குறித்த சில நாட்களுக்கு குளிரூட்டிய நிலையில் வைக்கப்பட்டு அருகிலுள்ள கால்நடை வைத்திய அலுவலகங்களால் சினைப்படுத்த பயன்பட்டன. எனினும் உறை விந்து [Frozen semen] முறை அறிமுகமாகிய பின் குளிரூட்டிய விந்துப் பாவனை நிறுத்தப்பட்டு தற்போது முற்று முழுதாக உறைவிந்து முறையே உள்ளது. உறை விந்துகளை திரவ நைதரசன் ஊடகத்தில் மிக நீண்ட காலம் சேமித்து வைத்திருக்கலாம். எனினும் ஒப்பீட்டளவில் உற்பத்திச் செலவு அதிகம். குண்டசாலை செயற்கைமுறைச் சினைப்படுத்தும் நிலையம் இந்த விந்தணுக்களின் விநியோக நடைமுறையை ஒழுங்கு செய்கின்றது. யாழ்ப்பாணத்தில் இந்த விந்து உற்ப்த்திச்செயன்முறை நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் பொலநறுவையில் சாஹிவால் போன்ற இந்திய வகை மாடுகளின் விந்தணுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு குண்டசாலை நிலையம் ஊடாக நாடு முழுதும் விநியோகிக்கப்படுகிறது. ஏனைய வெளிநாட்டு மாடுகளின் விந்தணுக்கள் குண்டசாலையில் வளர்க்கப்படும் அந்தந்தக் காளை மாடுகளில் இருந்து பெறப்பட்டு ,உறையச் செய்தோ அல்லது வெளிநாடுகளிலிருந்து நேரடியாகப் பெறப்பட்டோ நாடுமுழுதும் கிரமமாக வழங்கப்படுகின்றன. சில பெரிய பண்ணைகள் பால் நிர்ணயம் செய்யப்பட்ட விந்தணுக்களை [ sexed semen] வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து பயன்படுத்துகின்றன.

**செயற்கை முறை சினைப்படுத்தலின் நன்மைகள்**

- காளைகளைப் பராமரிக்கும் செலவை குறைக்கலாம்
- சிறந்த ரக காளையிலிருந்து அதிக எண்ணிக்கையான பசுக்களை சினைப்படுத்தி குறுகிய கரலத்தில் அதிக எண்ணிக்கையான கன்றுகளைப் பெறமுடியும்.
- இயற்கையான புணர்ச்சியின் மூலமான நோய்களைக் கட்டுப்படுத்தல்.[புருசெல்லோசிஸ்Brucellosis]
- உள்ளக இனவிருத்தியைத் தடுக்கலாம் [inbreeding]
- ளெிநாடுகளில் உள்ள தரமான களைகளின் சுக்கி லத்தில் இருந்து எமது உள்ளூர்ப் பசுக்களை சினைப்படுத்தி தரமான கன்றுகளைப் பெறலாம்.
- இயற்கையான முறையில் கருவுற முடியாத பசுக்களைக் கூட சினைப்படுத்தலாம்.
- இயற்கையில் சினைப்படுத்த பாவிக்க முடியாத காளைகளின் சுக்கிலத்தை கூட பெற்று பசுக்களை சினைப்படுத்தலாம்.
- மிக நீண்ட காலத்துக்கு சுக்கிலத்தை சேமித்து பிற்காலத்தில் கூட அதனை பயன்படுத்தலாம்.
- விந்துவை கிராமம் / நகரம் எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்வது எளிது.
- பதிவேடுகளை பராமரிப்பது இலகு என்பதால் சிறந்த இனப்பெருக்க.பண்ணை மேலாண்மையை செய்யலாம்.
- செயற்கை சினைப்படுத்தல் மூலம் குறைந்த பால் உற்பத்தி மற்றும் தரமற்ற இறைச்சியைக் கொண்ட உள்ளூர்க் கால்நடைகளின் பால் உற்பத்தியை அடுத்த சந்ததியில் அதிகரிக்க முடிவதோடு தரமான இறைச்சியையும் பெற்றுக் கொள்ள முடியும்.பொதுவாக உள்ளூர் இனங்கள் சிறந்த நோய்தாங்குதிறனை[RESISTANT] கொண்டிருப்பதால் அவற்றுக்கு செயற்கை சினைப்படுத்தல் மூலம் பிறக்கும் புதிய கலப்பின கால்நடைகள் அதிகரித்த பால் உற்பத்தியைத் தருவதோடு சிறந்த நோய்தாங்கு திறனையும் கொண்டிருக்கும்.தொடர்ச்சியாக பல சந்ததிகளுக்கு சினைப்படுத்தும் போது உயர் உற்பத்தித் திறனுடைய கால்நடைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

**செயற்கை முறை சினைப்படுத்தலின் சவால்கள்**

- சரியான போக்குவரத்து வசதிகள் இருக்க வேண்டும். இல்லாது போனால் சரியான நேரத்தில் சினைப்படுத்த முடியாது போகலாம்.
- ஆரம்பத்தில் சினைப்படுத்தல் உபகரணங்களுக்கு செலவு அதிகம்.
- சுக்கிலம் பெறும் காளையை உரிய பரிசோதனை செய்யாது போனால் பல இனப்பெருக்க நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.
- சில வேளைகளில் சினைப்படுத்தல் உத்தியோகத்தர் தவறு விடும் பட்சத்தில் பசுவுக்கு நோய் ஏற்படலாம்
- தவறுதலாக சினைப்பட்ட பசுவுக்கு மீள சினைப்படுத்தும் போது கருச்சிதைவு ஏற்படலாம்.
- ஒரே காளையின் சுக்கிலத்தை பல பசுக்களுக்கு சினைப்படுத்தப் பாவிக்கும் போது உள்ளக [inbreeding] விருத்தி ஏற்படலாம்.
- சில உள்நாட்டு இனங்கள் அழிந்து போகலாம்.
- திறமையான சினைப்படுத்துநர் தேவை.
- சரியான சுகாதார முறைகள் பேணப்படாமல் சினைபடுத்தப்படும்போது நோய்கள் பரவலாம்.
- உபகரணங்கள் சுத்தமாக இல்லாது போனால் நோய் ஏற்படலாம்.
- சினைப்படுத்தல்காரர் சில நோய்களுக்கும் சிகிச்சை அளிக்க தொடங்குவது பல பிரச்சினைகளுக்கு காரணமாகிறது.


மேற்படி ஒரு சில பிரச்சினைகளை சரியான முறையில் கையாண்டு கால்நடைகள் சினைப்படுத்தப்படும் பட்சத்தில் மிகச் சிறந்த கன்றுகளை பெறமுடியும். மேலும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் செயற்கை முறை மூலம் மாடுகளை சினைப் படுத்தும் போது சில கொடுப்பனவு முறைகளை மக்களுக்கு வழங்குகிறது [HEIFER CALF REARING PROGRAMMEHCR] .மேலும் கருவுறுதல் தொடர்பான பிரச்சினைகளையுடைய பசுக்களுக்கு ஓமோன் சிகிச்சையுடன் செயற்கைமுறைச் சினைப்படுத்தலும் மேற்கொள்ளப் படுகிறது. இதற்கென கால்நடை வைத்தியர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு சிறப்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது. மேலும் பால் நிர்ணயம் செய்யப் பட்ட விந்து [sex semen] கொண்ட செயற்கை முறைச் சினைப்படுத்தலும் தற்போது பாவனையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் இந்த விந்துகள் மட்டுப்படுத்தப் பட்ட அளவில் இருப்பது சற்று குறைபாடுதான். பசுக்கன்றுகளை மட்டும் பெறக்கூடிய, இந்த பால் நிர்ணயம் செய்த சினைப்படுத்தல் முறை பால் உற்பத்தியை கணிசமாக அதிகரிக்கக்கூடியது.

அண்மைக் காலத்தில் பால் உற்பத்தியின் தேவை அதிகரித்ததோடு பாலில் இருந்து பெறப்படும் பெறுமதி சேர் பொருட்களும் [VALUE ADDED PRODUCTS] மக்களால் விரும்பி நுகரப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே பால் பசுக்களையும் இதர கால்நடைகளையும் வளர்க்கும் பண்ணையாளர்கள் தொகையும் அதிகரித்துள்ளது. எனினும் இங்கு ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். பெரும்பாலான பண்ணையாளர்கள் வளர்ப்பதற்கு வேறு பிரதேசங்களில் இருந்து கால்நடைகளை குறிப்பாக பசு மாடுகளை கொண்டு வருகின்றனர். சில இடங்களில் பத்து லீற்றருக்கு மேல் பால் கறக்கும் மாடுகள் சில இடங்களில் ஒரு லீற்றர் கூட கறக்க மாட்டா. உதாரணமாக நுவரெலியாவில் இருபது லீற்றர் கறக்கும் பிரிசியன் மாடு யாழ்ப்பாணத்துக்கு கொண்டு சென்றால் மிகக் குறைவாகவே கறக்கும். இதனைவிட அங்கு நிலவும் அதிகரித்த வெப்பம் சாதகமற்ற சாரீரப்பதன் காரணமாக பசுக்கள் அசௌகரியத்தை உணரும் அல்லது இறந்து விடும். மேலும் சில உண்ணிகள், தெள்ளுகள் போன்ற புற ஒட்டுண்ணிகளின் [ECTO PARASITES] தாக்கத்துக்கு உட்பட்டு உண்ணிக் காய்ச்சல்[TICK FEVER]போன்ற நோய் நிலைகளுக்கு உட்பட வேண்டி ஏற்படும். எனவே இப்படி மாடுகளை திடீரென ஒரு பிரதேசத்துக்கு கொண்டு வராமல் உள்ளூர் மாடுகளுக்கு செயற்கை சினைப்படுத்தலைத் தொடர்ந்து செய்யும் போது கிட்டத்தட்ட உயர் உற்பத்தியை தரும் சந்ததிகளை குறித்த காலத்தில் பெற முடியும். அவை அந்தந்தப் பிரதேசத்தின் வெப்பநிலை[TEMPERATURE] சாரீரப்பதன் [HUMIDITY] ஒட்டுண்ணிகளின் தாக்கத்துக்கு இசைவடைந்து விடும்.

மேலும் சாஹிவால் போன்ற இந்திய இனங்களையும் சகிவால்- ஜெர்சி கலப்பு இனங்களை உலர் பகுதிகளுக்கும் பிரிசியன், பிரிசியன் கலப்புகள் அய்சியர் ஜெர்சி மற்றும் அதன் கலப்பு இனங்களை நுவரெலியா, கண்டி, பதுளை போன்ற குளிர் பகுதிகளிலும் வளர்க்கலாம். தொடர்ச்சியாக அவற்றுக்கு செயற்கை முறைச் சினைப்படுத்தலை செய்வதன் மூலம் உயர் உற்பத்தி கொண்ட கலப்பு மாடுகளை உருவாக்கிக் கொள்ளலாம். அதிகரித்த உணவு உற்பத்தியையும், போஷாக்கினையும் அதிகரிப்பதோடு பண்ணையாளர்களுக்கு நிரந்தர வருமானத்தையும் பெற முடியும். இலங்கையில் பெரும்பாலான பால் தேவை இறக்குமதி அதாவது பால்மா மூலம் தான் கிடைகிறது. இது மேலதிக செலவை எமக்கு உண்டாக்குகின்றது. இந்தியாவில் பெரும்பாலும் திரவப் பால் தான் நுகரப்படுகிறது. அதாவது உள்ளூர் பால். அவர்கள் பால் உற்பத்தியில் தன்னிறைவு கண்டிருக்கிறார்கள். எமது உள்ளூர் மாடுகளை செயற்கை சினைப்படுத்தல் மூலம் விருத்தி செய்து அதிக பால் உற்பத்தியை பெற்று நாமும் தன்னிறைவு காண்போமாயின் பால் மா இறக்குமதியின் செலவைக் குறைத்து அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்த முடியும். அதற்கான நீண்டகாலத் திட்டங்களை மத்திய மற்றும் மாகாண அரசுகள் மேற்கொள்ள வேண்டும். அதை விட பண்ணையாளர்களும் மேற்படி நவீன முறைகளில் அதீத ஈடுபாட்டை காட்ட வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கால்பந்தின் பெருஞ்சமர்



காலப்பந்தாட்டத்தின் பெருஞ்சமர் என்று கருதப்படும் மெஸ்ஸி, ரொனால்டோ இடையிலான மோதல் மீண்டும் இடம்பெறவுள்ளது. அடுத்த வருடம் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இந்தப் போர் இடம்பெறவுள்ளமை ரசிகர்களை உற்சாக மிகுதிக்குள் தள்ளியுள்ளது.

கால்பந்தாட்ட உலகின் முடிசூடா மன்னர்களாக ரொனால்டோ, மெஸ்ஸி இருவரும் திகழ்கின்றனர். இவர்கள் இதற்கு முன்னர் ஸ்பெய்னின் லா லிகா தொடரில் விளையாடினார்கள். ரொனால்டோ ரியல் மட்ரிட் அணியிலும், மெஸ்ஸி பார்சிலோனா அணியிலும் இடம்பிடித்திருந்தனர். மட்ரிட், பார்சிலோனா கழகங்கள் பரம எதிரிக் கழகங்கங்களாக உள்ளன. இவற்றுக்கு இடையிலான ஆட்டம் 'எல் கிளாசிகோ' என்ற சிறப்புப் பெயருடன் அழைக்கப்படுகின்றது. போதாததற்கு மெஸ்ஸி, ரொனால்டோ இருவரும் அந்தக் கழகங்களில் இருந்து எதிரெதிர் அணிகளில் விளையாடினால் கேட்கவும் வேண்டுமா?. ஒட்டுமொத்த விளையாட்டு உலகினதும் கவனம் அந்த ஆட்டத்தின் மீதே குவிந்திருக்கும் அவ்வளவுக்குப் பரபரப்பான விடயம் இது.

அதன் பின்னர் ரொனால்டோ மட்ரிட்டில் இருந்து பிரிந்து ஜுவென்டாஸிலும் பின்னர் தற்போது மன்செஸ்டர் யுனைட்டெட் கழகத்திலும் இணைந்துள்ளார். மெஸ்ஸியுடனான ஒப்பந்தத்தையும் பார்சிலோனா முடிவுக்குக் கொண்டுவந்தது. இதனால் மெஸ்ஸி தற்போது பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன் கழகத்தில் ஒப்பந்தமாகியுள்ளார்.

இந்த நிலையில், ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக்கின் ஆட்டத்தில் விளையாட வேண்டிய கழகங்கள் அண்மையில் பட்டியலிடப்பட்டன. இதில் ரொனால்டோ இடம்பெற்றிருக்கும் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், மெஸ்ஸி இடம்பெற்றிருக்கும் பரிஸ் செயின்ட் ஜேர்மனும் எதிர்த்து விளையாடவுள்ளன. பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இந்த ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. ஆக, மீண்டும் இடம்பெறாதா? என்று ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மெஸ்ஸி, ரொனால்டோ மோதல் இன்னும் சில மாதங்களில் இடம்பெறவுள்ளது என்ற தகவல் வெளியானதும்தான் தாமதம், அதனைக் கொண்டாடித் தீர்த்துக்கொண்டிருக்கின்றனர் கால்பந்துப் பிரியர்கள்.

# விளையாட்டு

ஆர்.லயனல்

# கோலியா? கங்குலியா?

## ஒரு சிறிய இடைவேளை

இந்தியக் கிரிக்கெட்டுக்குள் நெருப்பாக எரிந்துகொண்டிருந்த தலைமைத்துவ விவகாரம், தற்போது 'நீறுபூத்த நெருப்பு' என்ற நிலைக்குச் சென்றுள்ளது. அது மீண்டும் பற்றியெரியுமா அல்லது அணைக்கப்பட்டுவிடுமா என்பதற்கு தென்னாபிரிக்கத் தொடர்தான் பதில்.

தென்னாபிரிக்கத் தொடருக்கு இந்திய அணி சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு முன்பாக கோலியும், கங்குலியும் வார்த்தை மோதல்களில் ஈடுபட்டனர். ஒருநாள் ஆட்டங்களுக்குரிய தலைமைத்துவத்தில் இருந்து கோலி நீக்கப்பட்டமை கங்குலியால்தான் என்று ஒருதரப்பு குற்றஞ்சாட்டியது. இந்திய அணித்தலைவர்கள் எவரும் கொண்டிராத 70 என்ற வெற்றிச் சராசரியை கோலி வைத்திருக்கும்போது எவ்வாறு அவரை நீக்கலாம் என்று புள்ளிவிவர ரீதியாகவும் கங்குலியிடம் கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால், கங்குலி பதில் தெரிவிக்கையில், 'கோலியை ரி=20 தலைமைத்துவத்தில் இருந்து விலக வேண்டாம் என்று கேட்கப்பட்டது. வெள்ளைப்பந்தில் இரு தலைவர்கள் என்பது எமது கொள்கையில்லை. இதனால்தான் ஒருநாள் ஆட்டங்களுக்கான தலைமைத்துவத்தில் இருந்தும் கோலி நீக்கப்பட்டார்' என்றார்.

இதையடுத்து கோலி செய்தியாளர் சந்திப்பொன்றில், 'ரி=20 தலைமைத்துவத்தில் இருந்து விலக வேண்டாம் என்று எவரும் என்னைக் கேட்கவில்லை' என்று வெளிப்படையாகவே தெரிவித்தார். எனவே கோலி பொய் சொல்கின்றாரா அல்லது கங்குலி பொய் சொல்கின்றாரா என்ற கேள்வி பூதாகரமானது. இதையடுத்து எதிர்வரும் தென்னாபிரிக்கத் தொடர் முடியும் வரையில் இது தொடர்பில் மேலதிகமாக செய்தியாளர் சந்திப்பெதையும் நடத்துவதற்கு கோலிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கங்குலியிடமும் இவ்வாறான செய்தியாளர் சந்திப்புக்களை நடத்தவேண்டாம் என்று கோரப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கத் தொடரின் பின்னர் கங்குலி, ஜெய் ஷா, கோலி, ரோகித் ஆகியோரை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகக் குழு சந்தித்து பேச்சு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆக, தென்னாபிரிக்கத் தொடர் இந்தியக் கிரிக்கெட்டுக்குள் எரிந்த அனலை ஓரளவு முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது. இந்தத் தொடரில் கோலியின் பெறுபேறு சிறப்பாக அமைந்து இந்திய அணி கிண்ணத்துடன் நாடு திரும்பினால் விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முன்வரும். தென்னாபிரிக்கத் தொடர்தான் இந்தியக் கிரிக்கெட்டின் உள்வீட்டு மோதலைத் தீர்மானிக்கப் போகின்றது .



# நீயா பேசியது?



உலகப் பிரசித்திபெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பல மதிப்புறு அறிஞர்கள் பேசியிருப்பார்கள். ஆனால் கடந்த வாரம் அங்கே உரையாற்றிய அறிஞர் முற்றிலும் வித்தியாசமானவர், அவர் பேசியதும் வியப்பூட்டக்கூடியது. ஏ.ஐ. என ஆங்கிலத்தில் கூறப்படும் செயற்கை நுண்ணறிவு இயந்திரம்தான் ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பேசிய அந்த பேச்சாளர். எந்திரன் படத்தில் வரும் 'சிட்டி' என்ற ரோபோ எப்படி உரையாற்றியதோ அதை நிஜத்தில் பார்ப்பது போல இருந்தது ஏ.ஐ. ரோபோ அநிகழ்த்திய விவாதம். செயற்கை நுண்ணறிவுக்கு எதிராகவும், ஆதரவாகவும் இரு தரப்புமாக இந்த ஒரே இயந்திரமே மாறி, மாறி வாதிட்டு எல்லோரையும் கவர்ந்தது.

# கொரோனாவை கடந்த விண்கலம்



சூரியனின் புற வளிமண்டலத்தை அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸாவின், பார்க்கர் சோலர் ப்ரோப் (Parker Solar Probe) என்ற விண்கலம் சூரியனின் புற வளிமண்டலம் வழியாகக் கடந்து சென்றுள்ளது.

'கொரோனா' என்று அழைக்கப்படும் இந்தப் பகுதியின் வழியாக பார்க்கர் சோலர் ப்ரோப் கடந்து சென்றுள்ளது. (கொரோனா என்றால் லத்தீன் மொழியில் கிரீடம் என்று பொருள். ஆனால் இப்போது கொரோனா வைரஸ்தானே நினைவுக்கு வருகின்றது.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதமே இந்த 'கடந்து செல்லல்' நிகழ்ந்தி ருந்தாலும் அந்த விண்கலம் கொரோனா வழியாகத்தான் கடந்து சென்றது என்பது. தரவுகளின் பகுப்பாய்வுகள் மூலம் இப்போதுதான் உறுதி செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூறாட்டிக்கு அவள் தோடம்பழத்தை முதலில் தூக்கியது சந்தோச மாக இருந்தது. பிறக்கப்போகும் குழந்தை தன்னை மாதிரி இல் லாது பூங்கொடியைப்போல தோடம்பழ நிறத்தில் பிறக்கவேணும் என நினைத்தான். அவள் தோடம்பழத்தை உரித்து ஒரு கெத்தை எடுத்து பூறாட்டியின் வாயருகில் கொண்டுபோனாள்.**



# மானத்தீ

9

கருணை ரவி

சஞ்சீவி தொடர் கதை

கர்ப்பமாக இருப்பதை நினைக்க பூங்கொடிக்கு சந்தோசமாக இருந்தது. இவ்வளவு நாளும் தனக்கு ஒரு பொம்பிளைப் பிள்ளை வேணும் என நினைத்தவளுக்கு கனகம் சொன்ன செய்தி அவளின் கனவை மெய்ப்பித்தது. நித்தி பிறந்து பதின்மூன்று வருடத்துக்குப்பின் குழந்தை கருத்தரித்தி ருப்பதை அறிந்ததும் கந்தவிக்கிழவன் வேம்படி முருகனுக்கு தேங்காய் உடைத்து தனக்கு ஒரு பேத்தி கிடைக்கவேணும் என வேண்டினார்.

தங்கள் பரம்பரைக்கு ஒரு பிள்ளைதான் பலன். வேறு பிள்ளைகள் கருத்தரித்தால் இரண்டு மூன்று மாதங்களில் கரு கலைந்து விடுவது வழங்கமாக இருந்தது. பூங்கொடி பிறப்பதுக்கு முன் இரண்டு பிள்ளைகள் குறைமாதத்தில் அழிந்துவிட்டது.

பூங்கொடி பிறந்தன்று மனிசியும் சரி. முற்றத்து முருகனுக்கு நேந்து இரண்டு ரூபா குத்திக்காசை சூலத்தில் மூன்று நாட்கள் கட்டி வைத்து, அதை எடுத்து பூங்கொடியின் கையில் கட்டினார். பூறாட்டி வர கந்தவிக்கிழவன் வீட்டில் இல்லை. நித்தியை ரியூசனால் கூட்டிவரப் போனார்.

பூறாட்டி ஒரு பையில் அப்பிள், தோடம்பழங்கள், முந்திரிப்பழம், கப்பல் வாழைப்பழம் என வாங்கி வந்தான். நித்தியை அவள் வயித்தில் வைத்திருக்க அவன் பழவகைகளை பெரிதாய்க் கொடுக்கவில்லை. அப்ப, பணம் அவனிடம் இல்லை. காலை கனகம் வீட்டுக்கு வந்தபோது சொன்னாள்.

" முதல் பிள்ளைக்கு நீ என்ன செய்தனி? நல்ல பழவகைகளை குடுத்திருந்தா பிள்ளையும் கொஞ்சம் சிவப்பா பிறந்திருக்கும். உன்னை மாதிரி கறுத்தக்கட்டையத்தானே பெத்து வைச்சிருக்கிறாய்? அவளும் பொம்பிளைப்பிள்ளைக்கு ஆசைப்படுறாள்... நீயும் பொம்பிளைப்பிள்ளைய விரும்புறாய்... பெண் குஞ்செண்டா கொஞ்சம் நிறமாத்தானே பிறக்கோணும். நல்ல பழவகைகளை வாங்கிக்குடு, புள்ளத்தாச்சியள் குளிர்ச்சியான சாப்பாடுகளைச் சாப்பிடோணும்."

கனகம் அப்படிச்சொன்னபிறகுதான் அவன் பழங்களை வாங்கிவந்தான். பூங்கொடி பழங்களைக் கண்டதும் முதலில் தோடம்பழத்தைத்தூக்கினாள். அவள் தோடம்பழத்தைத் தூக்கியதும் அவனுக்கு கனகம் சொன்னது ஞாபகத்தில் வந்தது.

"நீ பழங்களை வாங்கிக்கொண்டு போக, மனிசி எந்தப்பழத்தை முதல் தூக்கிறாளோ அந்தப்பழத்தின்ரை நிறத்திலைதான் பிள்ளை பிறக்கும்"

பூறாட்டிக்கு அவள் தோடம்பழத்தை முதலில் தூக்கியது சந்தோசமாக இருந்தது. பிறக்கப்போகும் குழந்தை தன்னை மாதிரி இல்லாது பூங்கொடியைப்போல தோடம்பழ நிறத்தில் பிறக்கவேணும் என நினைத்தான். அவள் தோடம்பழத்தை உரித்து ஒரு கெத்தை எடுத்து பூறாட்டியின் வாயருகில் கொண்டுபோனாள்.

பூறாட்டி அவளையே பார்த்து கொஞ்ச நேரம் இருக்க, அவளில் மெல்லிய சிரிப்பு குழைந்து உதட்டில் நுரைதட்டியது. அவளின் கையைப்பிடித்து அந்த கெத்தை அவளின் வாய்க்குள் திணித்தான்.

அவள் அதைக்கடித்து உவிந்து சாற்றைக் குடித்துக்கொண்டு அவனின் மடியில் சாய்ந்தாள். அவன் அவளின் கன்னத்தை வருடிக் கொண்டிருக்க கண்களில் இருந்து ஒரு துளி கண்ணீர் அவளின் கன்னத்தில் விழுந்தது. படுத்திருந்தபடியே அவனைப் பார்த்தாள்.

அவள் எழும்பினாள். அவனின் கண்களை துடைத்தாள். அவனை இறுக்கி அணைத்து கன்னத்தில இரண்டு முத்தங்கள் கொடுத்தாள். தான் கொடுத்த முத்த ஈரத்தை தனது கைகளால் துடைத்து விட்டு கேட்டாள்

"ஏனழுகிறியள்? அவன் அவளைப் பார்த்து அவளின் வயிற்றில் கையை வைத்தான். அவனின் கையோடு அவளும் தனது கையை இணைத்து விட்டு மீண்டும் கேட்டாள்.

" ஏனழுகிறியள்?"

" உன்ரை பிறந்த நாளுக்கு உன்ரை தாலிக் கொடியை பெருப்பிச்சு உன்ரை கழுத்திலை கட்ட நினைச்சன். நீ புள்ளத்தாச்சியா இருக்கிறாய். கழுத்திலை தாலி கட்டேலாது."

" அதுக்கே அழுதனி?"

" ம்..."

அவள் சிரித்தாள். அடக்கமுடியாத அவளின் சிரிப்பு சுவர்களில் படுத்தது.

" ஏன் சிரிக்கிறாய்?"

" நித்தி வயித்திலை இருக்கேக்கைதான் கழுத்திலை தாலி கட்டேலை. இப்ப, கட்டின தாலியைப் பெருப்பிச்சுக் கட்டலாம்தானே..."

அவள் சொன்னதும் முகத்தில் சந்தோசம் உருண்டது. கால் லோட்டு கருவாட்டுக் காசை கொழும்பால் வந்து மயில்வாகனத்தரர் தர, தவராசுத் தட்டாரிட்டை அவளின் தாலியைக் கொடுத்து பெரிதாக்க வேண்டும் என நினைத்துக்கொண்டு அவளின் மடியில் தலையை வைத்தான்.

10

" கொழும்பிலை தமிழரை வெட்டுறாங்களாம்"

கந்தவிக்கிழவன் பாண் வாங்கிக்கொண்டு வரும்போது பூறாட்டிக்குச் சொன்னார். ஏன்? எதற்கு? என பூறாட்டி கேட்கமுதல் கிழவன் சொன்னார்

" ராத்திரி தின்னவேலியிலை ஆமியளுக்கு கண்ணிவெடி வைச்சவங்களாம். அதுக்குப் பிறகுதானாம் கொழும்பிலை கலவரம்"

சொல்லிக்கொண்டு பாணைக்கொடுத்தார்.

" மயில்வாகனம் லொறியோடை போனவர்..."

என ஏங்கிக்கொண்டு பூங்கொடி வீட்டுக்கு வெளியே வந்தாள்.

" முந்தியும் உப்பிடித்தானே சனங்கள் கொழும்பை விட்டு கப்பலிலை வந்ததுகள்"

சொல்லிக்கொண்டு கிழவன் வாசலில் இருந்தார். பூறாட்டி வாயே திறக்கவில்லை. வீட்டு முன்வளையைப் பிடித்தபடி நின்றான். மயில்வாகனத்தாரின் லொறியில் ஏற்றிவிட்ட கால் லோட்டு கருவாட்டை நினைத்தான். மயில்வாகனம் எங்கே? மயில்வாகனத்துக்கு என்ன நடந்தது? லொறியுடன் வீதியில் வெட்டிச்சரித்தார்களா? அல்லது எரித்து விட்டார்களா? அதைப்பற்றி பூறாட்டி நினைக்கவில்லை. முன்பு நடந்த கலவரங்களிலும் " பீத்தமிழன்" என்று சுடுதாருக்குள் தூக்கிப்போட்டார்கள். வீதிக்கு வீதி தலைகளை வெட்டி உருட்டினார்கள். வாகனங்களில் தமிழர்களை உயிருடன் எரித்தார்கள். தமிழரின் முதுகில் ஸ்ரீ என்ற சிங்கள எழுத்தை சுடுகம்பியால் சிங்களத்தில் எழுதினார்கள். இவைகள் ஒன்றும் பூறாட்டிக்குத் தெரியாது. மயில்வாகனம் வராது விட்டால் தனது கால் லோட்டு கருவாட்டை நினைத்தபடி நின்றான்.

பூங்கொடியின் தாலி, சங்கிலி, காப்புகள் எல்லாவற்றையும் அடைவு வைத்து கருவாடு வாங்கினான். மயில்வாகனம் வராது விட்டால் பூங்கொடியின் நகைகளை எப்படி மீட்பது என கவலையோடு நின்றான்.

பருத்தித்துறை பொலிஸ்காரர் கடற்கரை றோட்டில் வேகமாகப் போனார்கள். சனங்கள் றோட்டுக்கு றோட்டு பேப்பருடன் நின்றார்கள். கடலுக்கு எவரும் போகவில்லை. கடல் இப்படி வெறிச்சோடிப்போய் இருந்ததில்லை. கரைகளில் நங்கூரமிடப்பட்ட படகுகள் அலைகளில் தத்தளித்தன.

கனகம், வள்ளிநாயகி, பிலிப்பு, ஜோசப், கந்தவிக்கிழவன் மரியதாஸ் எல்லோரும் மயில்வாகனத்தார் வீட்டுக்குப் போனார்கள். மயில்வாகனம் வீடு ஒரு செத்தவீடு மாதிரியே இருந்தது. மயில்வாகனத்தின் மனைவி வள்ளிப்பிள்ளை மாமரத்துக்குக் கீழே ஒப்பாரி வைத்தாள்.

நடந்தவைகள் எதையும் அறியமுடியாதுள்ளது. மரியதாஸ் கொழும்பில் இருக்கிற சொந்தங்கள் அனைவருக்கும் தந்தி அடித்தும் தந்தி போய்ச்சேரவில்லை. கொழும்பில் உள்ள தமிழர்கள் எவரும் சொந்த இடங்களில் இல்லை. பாடசாலைகள், கோயில்களில் அகதியாக இருப்பதாக வானொலி சொல்லியது.

**மயில்வாகனம் எங்கே? மயில்வாகனத்துக்கு என்ன நடந்தது? லொறியுடன் வீதியில் வெட்டிச்சரித்தார்களா? அல்லது எரித்து விட்டார்களா? அதைப்பற்றி பூறாட்டி நினைக்கவில்லை. முன்பு நடந்த கலவரங்களிலும் " பீத்தமிழன்" என்று சுடுதாருக்குள் தூக்கிப் போட்டார்கள்.**



மயில்வாகனம் வீடு சனங்களால் நிரம்பியது. லொறிக் கிளினர் தெய்வேந்திரம் வீட்டில் இரண்டு மூன்று சனங்களைத்தவிர வேறு எவரும் போகவில்லை. மயில்வாகனம் ஊரில் பெரும்புள்ளி. துக்க பங்குபற்றலிலும் ஏற்றத்தாழ்வுகள் நிரம்பியிருந்தன. சனங்கள் கப்பல்களில் காங்கேசன்துறைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். கப்பல்களில் இருந்து வெள்ளைக்கொடிகள் அசைவதைப் பார்க்க ஊர் கடற்கரைகளில் கூடியது. கடற்கரையில் நின்ற சனங்கள் கப்பலுக்கு கைகளை அசைத்தார்கள். பூறாட்டி முற்றத்து வேப்பமரத்துக்கு முன்னால் குந்தியிருந்து சூலத்தைப்பார்த்து, மயில்வாகனமும் லொறியும் வரவேணும் என்று மன்றாடினான். பூங்கொடி காலையில் றொட்டி சுட்டுக்கொடுக்க பூறாட்டி சாப்பிடவில்லை.

" மயில்வாகனம்..."

என்று கண்ணீர் விட்டான். கண்ணீரோடு பூங்கொடியின் கழுத்தைப்பார்த்தான். அவள் குனிந்து தேநீர் வைக்கும்போது அவளின் கழுத்தில் இருந்து தாலி தூங்கும், வெறுங்கழுத்தைப் பார்த்து வெம்பினான்.

கந்தவிக்கிழவன் கடற்கரையில் கருவாடு காய விரிப்பதுக்குப் போனவர் திரும்பிவந்து பூங்கொடிக்குச் சொன்னார் " தெய்வேந்திரம் வந்திட்டான்" தெய்வேந்திரம் வந்த செய்தியைக் கேட்டதும் பூறாட்டி நிலத்தில் கைகளை ஊன்றி எழுந்தான். கவலை வறண்டிருந்த முகத்தில் சந்தோசம் பூத்தது. கன்னங்களில் இருந்த துயர்ச்சுருக்கை தெய்வேந்திரத்தின் வருகை அகற்றியது. கிழவன் கட்டியிருந்த சாரத்தை கழட்டி சாறத்தலப்பை பற்களால் கௌவிப் பிடித்துக்கொண்டு கொடியில் இருந்த கோமணத்தை எடுத்துக் கட்ட பூங்கொடி கேட்டாள்.

" தெய்வேந்திரம் கப்பலிலையே வந்தவன்"

" இல்லை, சிங்களவர் மரக்குத்தியளை றோட்டுக்குக் குறுக்கை போட்டு லொறியை மறிக்க, லொறியாலை குதிச்சு காட்டுக்கை பாய்ஞ்சவனாம். பேந்து கரண்டுக் கம்பிகளின்ரை அடையாளத்தை வைச்சு கால் நடையா வந்தவனாம்."

சொல்லிக்கொண்டு கொடியில் இருந்த துவாயை எடுத்து தோளில் போட்டார்.

" அப்ப மயில்வாகனத்தார்..?"

பூறாட்டி கேட்டான்.

" லொறியோடை சேத்து மயில்வாகனத்தை கொளுத்திப் போட்டாங்களாம்"

(வருவாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிப்படியாகக் கட்டுப்படுத்துவதுதான் நமக்கு முன்னுள்ள ஒரேவழி. அதற்கு ஒரேயொரு ஆயுதம் தடுப்பூசி மட்டுமே. அவ்வாறு படிப்படியாகக் கட்டுப்படுத்தி தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளையும் உலக மக்கள் அனைவரும் சரிவர மேற்கொண்டு சுகாதார நடைமுறைகளையும் தொடர்ச்சியாகப் பேணினால் இன்னும் மூன்று தொடக்கம் ஐந்து வருடங்களுக்கு கொரோனாவைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்று நம்புகின்றேன்.**



*நாளுக்குநாள் கூடிக்கொண்டே போகின்றன. அத்தோடு இந்தப் புதிய திரிபுகள் தடுப்பூசிகளுக்குக் கட்டுப்பாடாதவை என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு திரிபுகளின் பெருக்கம் தடுப்பூசிகளால் உண்டாக்கப்பட்ட பாதுகாப்பான சூழலுக்கு பங்கம் விளைவிப்பது தொடர்கதையாகி விடுமே?*

**ப:** திரிபுகள் பெருகிக்கொண்டே செல்வதை மறுக்க முடியாதுதான். உலகில் அறியப்பட்டதை விடவும் ஏராளமான திரிபுகள் இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையில்கூட புதிய திரிபுகள் சில அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு திரிபுகள் ஏற்படுவதென்பது தவிர்க்க முடியாதுதான். அதேவேளை மக்கள் சுகாதார நடைமுறைகளை மீறி நடப்பதால் திரிபுகளின் பரவுகையை கட்டுப்படுத்தக் கடினமாகின்றது. உலக நாடுகள் யாவும் ஒரே சமயத்தில் தமது எல்லைகளை குறிப்பிட்ட காலத்துக்கு மூடுவதோடு அந்த நாடுகளிலெல்லாம் பூரண முடக்கத்தை நடைமுறைப்படுத்தி தொற்றுள்ளவர்களுக்கு சிகிச்சை வழங்கி தொற்றாளர்கள் எவருமே இல்லை என்ற நிலையை உண்டாக்கினால் மட்டுமே முற்றுமுழுதாக கொரோனாவை இந்த உலகில் இருந்து இல்லாமலாக்க முடியும். ஆனால் அது எப்போதுமே சாத்தியமற்றதொன்று. எனவே படிப்படியாகக் கட்டுப்படுத்துவதுதான் நமக்கு முன்னுள்ள ஒரேவழி. அதற்கு ஒரேயொரு ஆயுதம் தடுப்பூசி மட்டுமே. அவ்வாறு படிப்படியாகக் கட்டுப்படுத்தி தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளையும் உலக மக்கள் அனைவரும் சரிவர மேற்கொண்டு சுகாதார நடைமுறைகளையும் தொடர்ச்சியாகப் பேணினால் இன்னும் மூன்று தொடக்கம் ஐந்து வருடங்களுக்கு கொரோனாவைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்று நம்புகின்றேன்.

**கே:** *சிலர் தடுப்பூசிகளை விடவும் பாரம்பரிய சிகிச்சை முறைகள் ஊடாகவும் உணவுப் பழக்கவழக்கங்கள் ஊடாகவும் கொரோனாவைக் கட்டுப்படுத்தலாம் என்று நம்புகின்றார்களே?*

**ப:** உண்மையில் தடுப்பூசிகள்தான் அதிக பாதுகாப்பைத் தரக்கூடியவை. ஆயினும் தடுப்பூசி ஏற்றிக்கொண்ட ஒருவர் அதன் பின்னர் பாரம்பரிய சிகிச்சை முறைகளில் சொல்லப்பட்ட நீராவி பிடித்தல், மஞ்சள், வேப்பிலை முதலானவற்றைப் பயன்படுத்துதல், நிர்ப்பீடன சக்தியை அதிகரிக்கும் வகையிலான உணவுகளை உட்கொள்ளுதல் என்பவற்றால் தனது உடலில் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க முடியும். எல்லாவற்றையும் விட வருமுன் காப்பதே சிறந்த வழி.

### ஆபிரிக்க வைரஸ் என்பதால்தான் ஆபத்தானதாகியுள்ளது ஒமிக்ரோன்


**கே:** *இப்போது ஒமிக்ரோன் திரிபுன் பற்றியே அதிகம் பேசப்படுகிறது. அந் தளவுக்கு அது அச்சுறுத்தலான திரிபா?*

**ப:** பல ஆபிரிக்க நாடுகளில் தடுப்பூசிகள் இன்னும் கிடைக்கவில்லை. இதனால்தான் அங்கு தற்போது தோற்றம்பெற்ற ஒமிக்ரோன் பெரியளவில் பூதாகரமாகியுள்ளதே தவிர அது டெல்டாவை விட ஆபத்தானது என்று சொல்லுவதற்கில்லை. ஆனால், ஒமிக்ரோனின் பரவுகை வேகம் அதிகரிக்கும். ஏனெனில் ஆபிரிக்க மக்கள் தடுப்பூசி பெறாதவர்களாக உள்ளனர். இதுதான் இங்கு பிரச்சினை.

இவ்வளவு ஏன், இலங்கையில்கூட தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களை கொரோனா தாக்கினால் அவர்களை மையமாக வைத்தும் ஒரு புதிய திரிபு ஏற்படலாம். எனவேதான் தடுப்பூசிகள் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். அத்துடன் அடிக்கடி தண்ணீர் அருந்துவதன் மூலம் நோய்க்கிருமிகள் சுவாசப்பையை சென்றடையாமல் வயிற்றைச் சென்றடையச் செய்யலாம்.

**கே:** *தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் அதனை உறுதிப்படுத்தும் அட்டையை எப்போதும் தம்முடன் வைத்திருக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அது இன்னும் சட்டமாக்கப்படவில்லை. சட்டமாக்கப்படுவதில் உள்ள இடையூறு என்ன? டிஜிட்டல் மயப்படுத்தினால் உறுதிப்படுத்தும் அட்டையை விடுத்து அவரவரின் செல்போன்கள் மூலம் அதனைச் செயற்படுத்தலாமே?*

**ப:** தடுப்பூசியைப் பெறுவதற்கு பொதுமக்கள் மத்தியில் ஆர்வம் முதலில் வரவேண்டும். தடுப்பூசியால் அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்ற புரிதல் அவர்களுக்கு இருக்க வேண்டும். அந்தப் புரிதலை அவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். மற்றும்படி தற்போதும் டிஜிட்டல் பயன்பாடு உள்ளது. ஆனால் அதுபற்றிய தெளிவுதான் இல்லை. தடுப்பூசியை நீங்கள் ஏற்றிய விடயத்தையும் இன்னசில தரவுகளையும் மக்கள் தத்தம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் வழங்கினால் அவ்வாறு வழங்குபவரின் மின்னஞ்சலுக்கு ஒரு சான்றிதழ் அனுப்பப்படும். அந்தச் சான்றிதழ்கூட அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்தான்.




**கே:** *கொரேனாத் தொற்றாளர் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டிருக்கும் நிலையில், அவருக்குத் தடுப்பூசியைச் செலுத்த முடியுமா?*

**ப:** இல்லை. அவ்வாறு செலுத்த முடியாது. ஏனெனில் கொரோனாத் தொற்று ஏற்பட்ட ஒருவரின் உடலில் நோயெதிர்ப்புப் பீடணம் தானாக உருவாகும். அதனால் தொற்றாளருடைய உடலில் சில நன்மைகள் கிட்டும்.

அப்படியான நிலையில் தடுப்பூசியைச் செலுத்தினால் குறித்த நோய் எதிர்ப்புப் பீடணத்தால் அந்த நபர் அடையக்கூடிய முழுப் பயனையும் அந்தத் தடுப்பூசி இல்லாமல் செய்துவிடும். எனவே தொற்று ஏற்பட்டு 6 வாரங்களுக்குப் பின்னர்தான் தடுப்பூசி ஏற்றுவது பொருத்தமானதாக இருக்கும்.

இன்னும் சொல்லப்போனால் வெளிநாடுகளில் இவ்வாறு ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டால் அதை அவருக்குச் செலுத்திய முதல் டோஸாகப் பார்க்கின்றனர். அந்தளவுக்கு ஒரு நோய் எதிர்ப்புப் பீடணத்தை இந்தத் தொற்று இயல்பாகவே ஏற்படுத்துகின்றது.

உண்மையில் கொரோனாப் பெருந்தொற்று ஆபத்தானதுதான். ஆனால், அது ஆபத்தானது என்று பயந்தொடுங்குவதால் எந்தப் பயனும் இல்லை. போசாக்கையும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையையும் கடைப்பிடிப்பதன் மூலம் இந்தப் பெருந்தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

புரதச்சத்து நிறைந்த உணவுகள், இலைகள், பழங்களை உட்கொள்வதை நாம் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆபிரிக்க நாடுகளில் மக்கள் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க முருங்கை இலைகளை உண்பதை தற்போது அதிகப்படுத்தியுள்ளனர்.

ஆனால் நாம் அந்தப் பழக்கத்தைக் கைவிட்டுவிட்டோம். எனவே ஊட்டச்சத்து அற்ற பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக பணத்தைக் கொட்டாமல் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை தேடித்தேடி உட்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தம் பாரம்பரிய உணவுப் பழக்கத்தைச் சீராகக் கடைப்பிடித்தாலேயே திடமான நோயெதிர்ப்புச் சக்தியைப் பெறலாம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்தப் பழக்கம் இப்போது குறைந்து வருகின்றது.

## எப்படி இருந்தவர்...இப்படியாகிட்டாரே!

ஹரி பொட்டர் என்ற திரைப்படத்தை எவரும் அவ்வளவு எளிதில் மறக்கமாட்டார்கள். அனைவரையும் கவர்ந்திழுத்து, 8 பாகங்களாக வெளிவந்த இந்தத் திரைப்படத்தில் முதல் பாகம் 2001 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி வெளியானது. ஹரி பொட்டர் திரைப்படத்தின் 8 பாகங்களிலும் பிரதான பாத்திரமான ஹரி பொட்டர் வேடத்தில் நடித்தவர் ரேட்க்ளிஃப். முதல் பாகத்தில் நடிக்கும் போது அவரின் வயது வெறும் 12 தான். அவர் ஹரி பொட்டர் பாத்திரத்துக்கு மிகச் சிறப்பாக பொருந்தி ரசிகர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்தார். இப்போது ரேட்க்ளிஃப் இளைஞனாகி அடையாளமே தெரியாமல் மாறியுள்ளார். ஆயினும் இன்னமும் வித்தியாசமான கதாபாத்திரங்களில் ரேட்க்ளிஃப் நடித்துக்கொண்டுதான் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை எனும் அழகான ஓவியம்

ம.மயூரபாலன்



> உள்ளத்தில் கோபமும் விரக்தியும் இருந்தால் ஒரு சிறிய தவறைக் கூட மன்னிக்காது அவர்களுடன் சண்டை போடுவோம். நம் உள்ளே இருந்து அரக்கன் வெளியே வந்துவிடுவான்.

கலீல் ஜிப்ரான் எனும் தத்துவஞானி ஒரு அற்புதமான விஷயத்தைக் கூறியுள்ளார். "கடவுள் மனிதனைப் படைக்கும் பொழுது மனிதனின் உள்ளே இரண்டு கிண்ணங்களை வைத்திருக்கின்றார். ஒரு கிண்ணத்திலே ஆனந்தம் உள்ளது. மறு கிண்ணத்திலே துக்கம் உள்ளது. நீ எப்பொழுதும் ஆனந்தம் எனும் கிண்ணத்தில் இருந்து ஆனந்தத்தை அருந்து. அத்துடன் நீ ஆனந்தத்தினது அருமை பெருமையை மறக்காமல் இருப்பதற்காக இடையிடையே துக்கம் எனும் கிண்ணத்தில் இருப்பதனையும் அருந்து" எனக் கடவுள் மனிதனிடம் கூறியதாக கலீல் ஜிப்ரான் தனது படைப்பிலே எழுதுகிறார்.

ஆனால் நாங்கள் துக்கம் எனும் கிண்ணத்தில் உள்ளதை அருந்தி அருந்தி . அதற்கு மிகவும் பழக்கப்பட்டு அடிமையாகி விட்டோம். இப்பொழுது ஆனந்தம் எனும் ஒரு கிண்ணம் இருப்பதையே மறந்து விட்டோம். ஐந்து வயதில் வேடிக்கையாக சிரித்த அதே விஷயங்களெல்லாம் 50 வயதிலே ஆத்திரமூட்டும் செயல்களாக மாறிவிடுகின்றன. சிறு பிள்ளைகளிடம் வேடிக்கையாக ஏதாவது கூறினால் அவர்கள் பலமாகச் சிரிப்பார்கள். ஆனால் வயது முதிர்ந்த ஒருவரின் முன்னால் சிரித்தாலே சில நேரம் அவர் கோபம் அடைந்து விடுவார். யாராவது ஆனந்தம், மகிழ்ச்சி என்ற சொற்களைக் கூறினாலே சிலருக்கு எரிச்சல் உண்டாகிவிடும்.

எதனைக் கூறினாலும் ஒன்றையும் பொருட்படுத்தாது ஆனந்தமாக இருந்த ஒரு குழந்தை வயது முதிர்ந்த பின்னர் ஏதாவது ஒரு சிறிய விஷயத்துக்கே ஏன் மிகவும் கோபம் அடைகின்றது? இந்த மாற்றம் எதனால் ஏற்படுகிறது? நாம் குழந்தையாக இருந்த பொழுது மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதுதான் நமது இலட்சியமாக இருந்தது. காலையில் எழுந்ததும் நமது ஒரே நிகழ்ச்சி நிரல் ஆனந்தமாக இருப்பது மட்டும்தான். விளையாடிக் கொண்டிருப்போம் ,பின்னர் திடீரென்று பார்த்தால் தூங்கிவிடுவோம். உணவை உண்ணும் பொழுதும் கூட தூங்கி அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருப்போம்.

பின்னர் நமக்கு பொறுப்புகள் என்ற பெயரில் பல விஷயங்கள் திணிக்கப்படுகின்றன. முன்னைய காலத்தில் பத்து வயதில் கொடுக்கப்பட்ட பொறுப்புகள் இப்பொழுது இரண்டு மூன்றுவயதிலேயேகுழந்தைகள்மேலேசுமத்தப்படுகின்றன. அதன் விளைவு என்ன? நமது வாழ்வில் ஆனந்தம் எனும் விஷயம் சிறிது சிறிதாக பின் தள்ளப்படுகிறது. நாம் நிகழ்காலத்தில் வாழ்வதற்குப் பதிலாக இறந்த காலத்திலும் எதிர் காலத்திலும் வாழ ஆரம்பிக்கிறோம்.

இப்பொழுது அலுவலகங்களுக்கு வேலைக்கு செல்பவர்கள் தமது பள்ளிப் பருவத்தை எண்ணிப் பார்த்து அது பொன்னான காலம் என கூறுவார்கள். ஆனால் அந்தக் காலத்தில் உண்மையாக நடந்தது என்ன என்பதனை நாங்கள் மறந்துவிட்டோம். நம்மில் பலரும் பாடசாலை ஆரம்பித்த உடனே எப்பொழுது மதிய இடைவேளை வரும் எனக் காத்திருந்தோம். மதிய இடைவேளையில் எல்லாம் மிகவும் குதூகலமாக இருக்கும். பின்னர் எப்பொழுது பாடசாலை முடிவடையும் எனக் காத்திருந்தோம். பின்னர் படித்து முடித்து வேலைக்குச் செல்லும் பொழுதும் அதே பழக்கம் தொடர்கிறது. அங்கும் அதே விஷயம் தான். எப்பொழுது மதிய இடைவேளை வரும்? எப்பொழுது வேலை முடியும்? எப்பொழுது வார இறுதி நாள் வரும் ? என்று காத்துக் கொண்டே இருக்கிறோம்.

பின்னர் வயது அதிகமாகி உடல் நோய்வாய்ப்படும் பொழுது மருத்துவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறு இவைகள் எல்லாவற்றுக்குமாக நாங்கள் காத்துக் கொண்டு இருக்கும் பொழுது இந்த வாழ்க்கை எனும் நதி எதற்குமே காத்துக்கொண்டிருக்காமல் ஓடிக்கொண்டே இருக்கின்றது. இவையெல்லாம் நமது பொறுப்புகள். இவையெல்லாம் நமது கடமைகள் என எண்ணி நாம் செய்த செயல்கள். ஆனால் அவை எல்லாம் இறுதியில் மெதுவாக நம்மை கைவிடுவதை காணக்கூடியதாக உள்ளது. உலகத்திலேயே யார் யாரோ எல்லாம் 'நீ அது செய்யவேண்டும் இதனைச் செய்யவேண்டும். அது தான் உனது கடமை ' எனக் கூறியதை எல்லாவற்றையும் கேட்டு நடந்தோம். 'நீங்கள் கூறியவாறு நான் செய்தேன் ஆனால் நீங்கள் உறுதியளித்தவாறு வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லையே' எனக் கேள்வி கேட்பதற்கு இப்பொழுது அவர்களும் அருகிலே இருக்கமாட்டார்கள். மற்றவர்கள் கூறியதைக் கேட்ட நாங்கள் நம்முள் ஏதோ ஒன்று' மகிழ்ச்சியாக இரு திருப்தியாக இரு' எனக் கூறியதை கேட்கத் தவறி விடுகிறோம்.

காலம் ஒரு நாள் மாறும் எனக் காத்திருக்கிறோம். ஆனால் உலகத்தில் பிரச்சினைகள் ஒருபொழுதும் முடிவடைவதில்லை. அவை ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவமாக மாறி மாறி வந்துகொண்டே இருக்கும். ஆனால் சூழ்நிலை எதுவாக இருந்தாலும் அதிலே மகிழ்ச்சியாக இருப்பதற்கு நாங்கள் தான் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஆனந்தமாக இருக்கும் விஷயம் ஏன் அவசியம் என்றால் நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஆனந்தமாக இருப்பது ஒரு முக்கியமான தேவையாக உள்ளது. யோசனைகள் கவலைகள் என்பன நாம் நமது கழுத்தில் போடும் தூக்குக்கயிறு என ஒரு ஞானி கூறியுள்ளார். இந்தக் கூற்று எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் கூறப்பட்டது. ஆனால் இப்பொழுது விஞ்ஞானிகள் அதனை உண்மை என நிரூபித்திருக்கின்றார்கள். இந்த யோசனைகள், கவலைகள் நமது உடலை பெரிய அளவிலே பாதிக்கின்றன.


எல்லாவற்றுக்கும் மேலாக மனிதன் ஆனந்தமாக இருப்பதனால் சமுதாயம் தானாகவே மேன்மையடைகிறது. நமது வாழ்க்கையை பார்த்தோம் என்றால் ஒரு விஷயம் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. நாம் ஆனந்தமாக இருக்கும் பொழுது யாராவது ஒருவர் தவறு செய்துவிட்டால் அது பரவாயில்லை என கூறுவோம்.

சமுதாயத்திலே ஒரு மனிதன் எவ்வாறு சக மனிதர்கள் மேல் கருணையுடனும் அன்புடனும் ஒழுங்குடனும் வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் எல்லாம் ஒருவன் மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது தானாகவே ஏற்படுகின்றன. ஆனால் நமது உள்ளத்தில் கோபமும் விரக்தியும் இருந்தால் ஒரு சிறிய தவறைக்கூட மன்னிக்காது அவர்களுடன் சண்டை போடுவோம். நம் உள்ளே இருந்து அரக்கன் வெளியே வந்துவிடுவான்.

பிள்ளைப் பிராயத்திலேயே கள்ளம் கபடமின்றி நமது வாழ்க்கை அழகான ஓவியமாக இருந்தது. பின்னர்' நீ அவ்வாறு இருக்க வேண்டும் இது இவ்வாறு இருக்க வேண்டும்' எனப் பலரும் தமது எண்ணக் கருத்துக்கள் எனும் நிறங்களை அதன் மேலே கொட்டிவிட்டார்கள். இப்பொழுது அந்த ஓவியம் பார்ப்பதற்கு அழகாக இல்லை. நாங்கள் செய்ய வேண்டியதெல்லாம் மேலும் விஷயங்களைச் சேர்ப்பதற்குப் பதிலாக தேவையற்ற விஷயங்களை அகற்றுவது தான். அதற்கு திறந்த உள்ளத்துடன் வாழ்க்கையைப் பார்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. ■



# வலிக்காமல் செத்திட. சுவிஷில் மிசின்....



எம்மவர்கள் மத்தியில்
இனி இப்படியும் நடக்கலாம்

வயோதிப.... நிலையண்டியதும்
தமது செத்தவீட்டுக்கு ....
திகதி நேரம் இடம்.
என்பனவற்றை தாமே
முற்கூட்டியே பதிவு செய்து கொள்வர்

மரண அழைப்பிதழ் என்று
அழைப்பு அனுப்பினால் கூட
ஆச்சரியப்படுமளவில்லை

முற்கூட்டியே.... நண்பர்கள், உறவுகளுக்கு
அழைப்பு விடுப்பதால்....
அவர்களும் இலகுவாக
வேலைத்தளத்தில் 'லீவை' பதிவு செய்துகொள்ளலாம்

சாவு வீடுகூட இனி களைகட்டும் - என்று
நம்பலாம்

வெள்ளைக்காரனை
பொறுத்தவரை
முதிர்வில் முதியோர் இல்லம்
அமைதியை நாடும் இடமாகும்
எம்மவரைப்பொறுத்தவரை
அது பிள்ளைகளால் ஒதுக்கப்பட்ட
தனிமைச்சிறை என்ற நிலைப்பாட்டிலுள்ளவர்கள்
அந்த வலியை மன உளைச்சலை காட்டிலும்
இந்த வழி இலகுவானது என்று நினைக்கத்தோன்றும்

ஆதலால் இதுவும் எதுவும்
நடக்கலாம்
எதிர்பார்க்காததை எதிர்பார்ப்போம்

ஒரு மரமொன்றில் காய்த்ததை
அது தன் கனி என்ற தன்னிலையடைய முதல்
இடையில் பறித்து
இரசாயனத்தை பாவித்து
இயற்கைக்கே செயற்கை
பாவிக்க தொடங்கினானோ மனிதன்
அன்றிலிருந்து

செயற்கைகள் இன்று இயற்கையான
மனிதனோடு விளையாடத்தொடங்கி
விட்டதெனலாம்

மேற்சொன்னவை யாவும் கற்பனையென்று
கடக்க முடியாது நடக்கலாம்

ஆக..........
சுவிஸில் வசதியாகவும் வாழலாம்
வசதியாகவும் சாகலாம்

எஸ்.கவிதரன் (சுவிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிமாநேத்ரன்

# துப்பறியும் AK67

'காமிக்ஸ்' தொடர்

05

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்




(தொடரும்)

# வாசிப்பை நேசிப்போம் மனிதா...!

ச.ஊர்மிளா



வாசிப்புக்கு வயது இல்லை
தமிழை நேசிக்க
எல்லை இல்லை
தமிழர் நாம் ஊரிழந்து உறவிழந்து
உற்றதுணை இழந்து நாதியற்று
போனது போதும்

கல்வி எனும் செல்வத்தை
எந்தக் கள்வனாலும்
பறிக்க முடியவில்லை..
அதனால் தான் கல்வி
எனும் செல்வத்தை
பலமாக நேசிக்கின்றேன்
எனதருமை உறவுகளே வாசியுங்கள்

புத்தகத்தை நேசியுங்கள்
புத்துணர்வு பெற்று நாமும்
நாட[illegible]
நல்[illegible]



18

இராகவன்

பின்னேரங்களில் குலமக்கா வீட்டை ராசண்ணை, அவரின்ர கடைசிப் பொடியன் ஈசன், வடிவேலண்ணை எண்டு கனபேர் வருவினம். அவையள் எல்லாம் சதாமாமாவின்ர வண்டில் மாட்டுச் சிநேகிதங்கள். வடிவேலண்ணை நல்ல கறுவல், கட்டையர். தும்புகட்டை மீசையும் வண்டியுந்தொந்தியுமாய் ஆள் நல்ல பொலிவாயிருப்பார். ஒரு நீலக்கோடன் சாறத்தைச் சண்டிக்கட்டாய்க் கட்டியிருப்பார். அவர் குலமக்கா வீட்டை வரேக்குள்ளை இரண்டு எருது மாடுகளோடதான் வருவார். அவர் அப்பிடி மாடுகளோட வாறதைப் பாக்க அட்டகாசமாயிருக்கும்.

ராசண்ணை நல்ல சிவலை. நடுத்தர வளர்த்தி. நரைச்ச தலை. நல்ல களையான முகம். அவரின்ர நெஞ்சு, கையள், முதுகு எண்டு மேல்முழுக்க புசுபுசெண்டு உரோமம் அடர்ந்து போயிருக்கும். அவர் அநேகமாய் வெள்ளைக் கோடன் சாறந்தான் சண்டிக்கட்டாய்க் கட்டிக் கொண்டு வருவார். அவரும் இருந்திருந்திட்டு எருது மாடுகளோட வருவார். அவருக்குப் பின்னால ஈசன் வருவான். அவனும் தேப்பனைப் போல நல்ல முகவெட்டான பொடியன். என்னோட நல்ல நெருக்கம். குலமக்கா அவனோடயும் நல்ல வாரப்பாடு. ராசண்ணை, ஈசன் இரண்டு பேரும் நல்ல முசுப்பாத்தியாக் கதைப்பினம். ஈசனுக்கு என்னைவிட இரண்டு மூண்டு வயதுதான் கூட இருக்கும். ராசண்ணையோட ஈசன் கூடி வந்தால் எனக்கு வலுப்புளுகமாயிருக்கும். வராட்டில் சரியான ஏமாற்றமாய்ப் போடும். "ராசண்ணை ஈசன் வரேல்லையோ?" எண்டு அவரிட்ட இரண்டு மூண்டு தரம் கேட்டாப் போலதான் "அவன் தண்ணியள்ளப் போட்டான்","அவன் வயலுக்குப் போட்டான்", "அவன் ரியூசனுக்குப் போட்டான்" எண்டு ஏதாவதொரு பதிலைச் சொல்லுவார். இதைப் பாத்திட்டுக் குலமக்கா, "ம்.... யாரியைக் காணேல்ல எண்டு இவருக்கு கவலையாய்க் கிடக்கு.

ராசண்ணை! இனி நீங்கள் வரேக்குள்ளை ஈசனை மடிக்கை கட்டி வந்து இவரிட்டக் குடுங்கோ!" எண்டு சொல்லிச் சிரிப்பா. இப்படிப் பின்னேரங்களில குலமக்கா வீடு ஒரே கலகலப்பாயிருக்கும். குலமக்கா வீட்டுக்கு வெளியில ஒரு சதுரமான தளக்கட்டிருக்கு. அதில வரிசையாயிருந்துதான் வாறாக்களெல்லாம் கதைப்பினம். ஒரு மகாநாடு நடக்கிற மாதிரியிருக்கும். நல்லா இருட்டி நிலவு வாறவரைக்கும் இந்த மாநாடு கலையாது. இடைக்கிடை சதாமாமாவின்ர எருது மாடுகள் தலையளை ஆட்டேக்குள்ள கழுத்துச் சலங்கையள் 'கிணங் கிணங்' எண்டு ஒலிக்கும். அது மகாநாடு முடியிறதுக்கான குறியிசை மாதிரித்தானிருக்கும்.

சலங்கைச் சத்தம் கேட்ட கையோட ராசண்ணை எழும்பி "ம்... வீட்டை தேடப்போகுதுகள். வெளிக்கிடுவம்" எண்டு சொல்லிச் சண்டிக்கட்டை தூக்கிக் கட்டிப் போட்டு வெளிக்கிடுவார். அம்மாவும் எழும்பி "கதைப் பிராக்கில நேரம் போனதே தெரியேல்ல. எழும்படா நாங்களும் போவம். நாளைக்கு வரலாம்" எண்டு சொல்ல ,நான் எழும்பி அம்மாவின்ர சீலைத் தொங்கலைப் பிடிப்பன்.

ராசண்ணை முன்னால நடக்க நாங்களும் பின்னால போவம். அவர் எங்கட வீட்டடியாலதான் தன்ரை வீட்டை போறவர். அதால எங்களுக்கு அவர்தான் வழித்துணை. அவரோட ஈசன் சேர்ந்து வரேக்குள்ள இரண்டு பேரும் எங்கட வயதுக்கேத்த கதையளைக் கதைப்பம். அம்மாவும் அண்ணையும் தங்கட வயதுக்கேத்த கதையளைக் கதைச்சுக் கொண்டு வருவினம். ஈசன் வராட்டில் ராசண்ணையும் அம்மாவும் கதைக்கிறதைக் கேட்டுக் கொண்டு அவையளுக்குப் பின்னால நான் வருவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org